மாணவர்

# தமிழ் இலக்கண விளக்கம்


எழுதியவர் :

பேராசிரியர்

வித்துவான் பாலூர் கண்ணப்ப முதலியார் B.O.L.

தமிழ்த்துறைத் தலைவர், புதுக்கல்லூரி, சென்னை-14.



ஸி. குமாரசாமி நாயுடு அண்டு சன்ஸ்

சென்னை - 1.


பதிப்புரிமை] 1962 [ரூ. 1=00

உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

*முதற் பதிப்பு: 1949.*
*ஆறும் பதிப்பு: 1962.*

24 பவுண்டு (20" × 30") வெள்ளைத் தாளில் அச்சிடப்பட்டது.

காக்ஸ்டன் அச்சகம், சென்னை.

# அணிந்துரை

இலக்கணப் பாடத்தை மாணவர் இளமையிலேயே நன்கு பயிலல் வேண்டும். அங்ஙனம் அவர்கள் அவாவிப் பயின்று அறிந்துகொள்வதற்கு உரைநடையில் அமைந்த இலக்கண நூல்களே சாலச் சிறந்தவையாகும். இக்காலத்தில் சிறுவர்க்காக உரைநடை இலக்கண நூல்கள் பல வெளிவந்துள்ளன. அவற்றுள் சிலவே கல்வி இலாக்கா அதிகாரிகளின் பாடத் திட்டப்படி அமைந்துள்ளன.

இன்று வெளிவரும் இந்த மாணவர் தமிழ் இலக்கண விளக்கம் என்னும் சிறு நூல் 6, 7, 8 ஆம் வகுப்புகட்குக் கல்வி இலாக்கா அதிகாரிகளின் பாடத்திட்டப்படி அமைந்த இலக்கணப் பாடங்களை விளக்குவதாகும். ஒரு வகுப்பிற்குக் கூறப்பெற்ற பாடம் பிற வகுப்பிற்கு இதிற் கூறப்படவில்லை. ஒவ்வொரு வகுப்புக்கும் தனித்தனி பாடங்களே வகுத்துக் கூறப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாடப் பகுதியின் ஈற்றிலும் பயிற்சி வினாக்கள் தரப் பெற்றுள்ளன. இப்பயிற்சி வினாக்களும் மாணவர்க்குப் பெரிதும் பயன் தரும்.

இந்நூலை ஆக்கிய ஆசிரியர் வித்துவான் பாலூர் கண்ணப்ப முதலியார் அவர்கள் முன்பே பற்பல விதமான நூல்களை ஆக்கி, மாணவர்கட்கும் தமிழ் உலகுக்கும் உதவி யுள்ளார்கள். அவை தமிழ் நாடெங்கும் பரவி அறிஞரால் நன்கு மதிக்கப்பெற்று விளங்குகின்றன. அங்ஙனமே இவ் விலக்கண உரைநடை நூலையும் மாணவர்க்கும், மற்ற வர்க்கும் மிகப் பயன்படும் வண்ணம் ஆராய்ந்து இனிய எளிய நடையில் இயற்றி வெளியிட்டுள்ளார்கள், ஆகையால், இதைக் கண்ணுறும் ஆசிரியர்கள் இதனால் உண் டாகும் பயனைத் தங்கள் மாணவர் அடையுமாறு செய் வார்களென்று எண்ணுகின்றேன்.

இங்ஙனம் :

**கா. மு. சின்னப்பா பிள்ளை.**

## ஏழாம் வகுப்பு


I. எழுத்து

அகச்சுட்டு, புறச்சுட்டு 59

அகவினா, புறவினா ... 59

இன எழுத்துக்கள் 63

குற்றியலுகரம் ... 65

முற்றியலுகரம் ... 66

குற்றியலிகரம் ... 67

வேற்றுமைத்தொகை, வேற்றுமை விரி ... 77

வேற்றுமை உருபு ஏற்கும் போது திரியும் பெயர்கள் 78

II. சொல் ... 69

பதம் ... ,,

பகுபத உறுப்புக்கள் 70

பொதுப் பெயர்

சிறப்புப் பெயர் ... 72

வினையாலணையும் பெயர் ... 73

அளவைப் பெயர் ... 74

பல்வகைப் பெயர்கள் 76

வினைச்சொல் ... 82

செய்வினை, செயப்பாட்டு வினை, தன்வினை, பிறவினை

இடைச்சொல் ... 84

உரிச்சொல் ... 85

III. புணர்ச்சி ... ... 87

குற்றியலுகரப் புணர்ச்சி ... ... 87

வலிமிகும் இடங்கள் ... ... 90

வலிமிகா இடங்கள் ... ... 91

[illegible] புணர்ச்சி ... ... 92

[illegible] ... ... 94

[illegible] ... ... 94

[illegible] ... ... 95

[illegible] ... ... ... 96

[illegible] ... ... ... 97


## எட்டாம் வகுப்பு


எழுத்து ... 101

முதலெழுத்து ... 101

சார்பெழுத்து ... 101

மாத்திரை ... 102

மொழிக்கு முதலாகும் எழுத்துக்கள் ... 104

மொழிக்கு ஈறு ஆகும் எழுத்துக்கள் ... 105

போலி ... ... ... ... 107

II. சொல் ... 110
பதம் ... 110
பகாப்பதம் ... 110
பகுபதம் ... 110
பகுபதஉறுப்புக்கள் 111
இடுகுறிப் பெயரும்
காரணப்பெயரும் 114
மூவிடப் பெயர்கள் 116
ஆகுபெயர் ... 118
வினையாலணையும்
பெயர் ... 124
வேற்றுமை ... 125
வினைச்சொல் ... 136
வினைவகை ... 138
உடன்பாட்டுவினை ... 139
எதிர்மறை வினை ... 139
முற்றுவினை, எச்சவினை 140
செய்யும் என்னும்வாய்
பாட்டு வினைமுற்று ... 142
வியங்கோள்வினைமுற்று 143
ஏவல் வினைமுற்று ... 144
இடைச்சொல் ... 146
உரிச்சொல் ... 147

III. புணர்ச்சி ... ... ... 149
வேற்றுமைப் புணர்ச்சி ... ... 149
அல்வழிப் புணர்ச்சி ... ... 149
உடம்படுமெய் ... ... 150
வந்த எழுத்து மிகுதல் ... ... 152
மெய்திரிதல் ... ... ... 152
ஒற்று இரட்டித்து மிகுதல் ... ... 153

IV. பொது ... ... ... 154
வடச்சொல் ... ... ... 154
திசைச்சொல் ... ... ... 154
நிறுத்துக்குறிகள் ... ... 155

அனுபந்தம் ... ... ... 157
விகுதிகள் ... ... ... 157
இடைநிலைகள் ... ... ... 160

# ஆறாம் வகுப்பு

## மாணவர்

# தமிழ் இலக்கண விளக்கம்

---

மாணவர்களே, நாம் ஒரு மொழியைத் தவறில்லாமல் பேச வேண்டுமானாலும், எழுத வேண்டுமானாலும், அந்த மொழியினுடைய இலக்கணத்தை நன்ருகக் கற்றுக்கொள்ள வேண்டும். நாம் இப்போது கற்பது தமிழ்மொழி. ஆகையால், அந்த மொழியைத் திருத்தமாகப் பேசவும், வாசிக்கவும், எழுதவும் தமிழ் இலக்கணத்தைக் கற்போம். இலக்கணம் இன்பமான பாடம். இஃது ஒரு சிறிது கற்கின்ற வரையில் கடினமாகத் தோன்றும் ; சிறிது கவனம் செலுத்திப் படிக்க ஆரம்பித்ததும் நமக்கு இன்பத்தைத் தரும்.

நாம் பேசும்போதும், வாசிக்கும்போதும், எழுதும் போதும் பல சொற்களைப் பயன்படுத்துகிருேம். அச்சொற்கள் உண்டாவதற்குக் காரணமாக இருப்பவை எழுத்துக்கள். ஆதலின், முதலில் எழுத்துக்களை உணர்ந்து, பின்னே சொற்களையும், அதன் பின் சொற்களால் ஆன தொடர்களையும் கற்போம்.

# 1. எழுத்து

1. சொற்கள் உண்டாதற்குக் காரணமாக இருப்பது எழுத்து. அது எழுதப்படுவதினால் எழுத்து எனப் பட்டது. அது நான்கு வகைப்படும். அவை **உயிர் எழுத்து, மெய் எழுத்து, உயிர்மெய் எழுத்து, ஆய்த எழுத்து** என்பன.

## உயிர் எழுத்து

2. உயிர் மற்றொன்றின் உதவி இல்லாமல் தானே நடமாட வல்லது. அதுபோலப் பிற எழுத்துக் களின் உதவி இல்லாமல் உச்சரிக்கும் வன்மையுடைய எழுத்துக்கள் **உயிர் எழுத்துக்கள்** எனப்பட்டன. அவை பன்னிரண்டு. அவை **அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ** என்பன.

## குற்றெழுத்து

3. அந்தப் பன்னிரண்டு உயிர் எழுத்துக்களில் குறைந்த ஓசையுடையவை ஐந்து. அவை **அ, இ, உ, எ, ஒ,** என்பன. அவற்றைக் **குற்றெழுத்து** என்றும், **குறில்** என்றும் கூறுவர்.

## நெட்டெழுத்து

4. உயிர் எழுத்துக்கள் பன்னிரண்டனுள் ஐந்து குற்றெழுத்துக்கள் போக மிகுதியாய் உள்ள

எழுத்துக்கள் ஏழு. அவை நீண்ட ஓசையுடையவை. ஆதலின், அவற்றை **நெட்டெழுத்து** அல்லது **நெடில்** என்பர். அவை **ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ** என்பன.

## கேள்விகள்

1. நாம் ஏன் இலக்கணம் கற்க வேண்டும் ?
2. சொல் எவற்றிற்குக் காரணம் ?
3. எழுத்து எதற்குக் காரணம் ?
4. எழுத்தாவது யாது ?
5. எழுத்து எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?
6. உயிரின் தன்மை யாது ?
7. உயிர் எழுத்தாவது யாது ? உயிர் எழுத்து எத்தனை ?
8. குறிலாவது யாது ? குற்றெழுத்துக்கள் எவை ?
9. நெடிலாவது யாது ? நெட்டெழுத்துக்கள் எவை ?
10. குறில், நெடில் இவற்றின் வேறு பெயர்கள் யாவை ?

## பயிற்சி-1

1, அரன் பூசை, எண்ணும் எழுத்தும், ஐயம் இடு, ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டா, ஆனை முகனுக்கு இளையோன் ஆறு முகன், ஈத்து உவக்கும் இன்பம், ஊக்கம் உற்சாகம் தரும்—இவற்றுள் வந்துள்ள உயிர் எழுத்துக்களை எடுத்து எழுதிக் குறில் நெடில் இன்ன என்றும் குறிப்பிடுக.

2. கோடிட்ட இடங்களில் தக்க குறில் நெடில்களை அமைத்துச் சொற்களை எழுதுக.

| | |
|---|---|
| குறில் — ப்பம் | நெடில் — மை |
| — ரவு | — கை |
| — லகு | — க்கம் |
| — ருது | — ற்றம் |
| — ருவன் | — யன் |

## சுட்டெழுத்து

5. மேற்கூறப்பட்ட பன்னிரண்டு உயிர் எழுத்துக்களில் ஒரு பொருளைச் சுட்டிக் காட்டுவதற்காகச் சில எழுத்துக்கள் உபயோகப்படுகின்றன. அவை, **அ, இ, உ** என்பன. இம்மூன்றும் **சுட்டு** எழுத்துக்கள் எனப்படும்.

குறிப்பு: உ என்னும் சுட்டெழுத்து, பேச்சு வழக்கில் வராது, அ,இ என்னும் சுட்டெழுத்துக்கள் அந்த, இந்த என்று திரிந்து வரும்.

(உ-ம்) அவன், அது, அவ் வீடு, அந்த வீடு
இவள், இவை, இவ் வீடு, இந்த வீடு

## கேள்விகள்

1. சுட்டாவது யாது ?
2. சுட்டெழுத்துக்கள் எத்தனை ? அவை எவை ?
3. பேச்சு வழக்கில் வராத சுட்டெழுத்து எது ?
4. சுட்டெழுத்துக்கள் எப்படித் திரிந்து வரும் ?

## பயிற்சி-2

1. சுட்டெழுத்து அமைந்த சில சொற்களைக் கூறுக.
2. கோடிட்ட இடங்களில் தக்க சுட்டெழுத்தோடுபொருந்திய சொல்லை அமைக்க :

———— வீட்டிலேதான் ———— குடியிருந்தான். ———— ஒரு நல்ல வீடு. ———— காற்று அதிகம். ———— பின்புறம் மரங்கள் அதிகம். ———— நல்ல காற்றைத்தரும், ——— வெட்ட ——— எண்ணினர். நான்தான் ———— வெட்ட வேண்டா என்றேன்.

3. அரசன், இடம், அணில், இரவு, இறகு, அவை—இவற்றுள் காணப்படும் அ, இ என்பன என்ன எழுத்துக்கள் ? ஏன் ? இவ்வார்த்தைகளோடு சுட்டெழுத்துக்களைச் சேர்த்துக் கூறுக.

## வினாவெழுத்து

6. அந்தப் பன்னிரண்டு உயிர் எழுத்துக்களில் சில எழுத்துக்கள் கேள்வி கேட்கப் பயன்படுகின்றன. அற்றை **வினா** எழுத்துக்கள் என்பர். அவை **ஆ, எ, ஏ, ஓ** என்பன.

| | | |
|---|---|---|
| (உ-ம்) | கந்தனா ? | ஆ |
| | எவன் | எ |
| | ஏது | ஏ |
| | முருகனோ | ஓ |

குறிப்பு : 'யா' என்னும் எழுத்தும் வினாவாக வரும். 'எ' என்னும் வினா எழுத்து 'எந்த' என்று திரிந்து வரும்.

(உ-ம்) யாவர் ? யார் ? எந்த வீடு ?

## கேள்விகள்

1. வினாவாவது யாது ?
2. வினா எழுத்துக்கள் எத்தனை ? அவை யாவை ?
3. உயிர் எழுத்து அல்லாத வினா எழுத்து எது ?
4. எகர வினா எப்படித் திரிந்து வரும் ?

## பயிற்சி-3

1. வினாவுக்குச் சில உதாரணம் தருக.
2. கோடிட்ட இடங்களில் தக்க வினாவை அமைக்க :—

நீ நேற்று ———— ? ———— பாடம் படிக்கவில்லை.

இன்றைக்கு ———— கிழமை ?

நீ ———— பள்ளிக்கூடம் போகிறாய் ?

உனக்கு ———— இந்தப் பலகை ? ———— ஓடினான்.

3. ஏலம், அதோ, எருது, பூனை, ஏணி, யாளி, யாகம் — இவற்றுள் காணப்படும் எ, ஏ, யா, ஆ, ஓ என்ன எழுத்துக்கள் ? ஏன் ? இச்சொற்களோடு வினா எழுத்துக்களைக் கூட்டி எழுதுக.

## மெய் எழுத்து

7. மெய் என்பது உடம்பு. உடம்பு உயிரின் உதவி இல்லாமல் இயங்காது. அதுபோலவே தமிழ் மொழியில் சில எழுத்துக்கள் உயிர் எழுத்தின் உதவி இல்லாமல் ஒலிக்க மாட்டா. அவற்றையே **மெய் எழுத்து** என்பர். அவ்வாறான எழுத்துக்கள் பதினெட்டு. அவை **க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்** என்பன.

குறிப்பு : இவ்வெழுத்துக்கள் தலையில் புள்ளி பெற்றே வரும்.

### மெய்யெழுத்துக்களின் வகை

8. மெய்யெழுத்துப் பதினெட்டும் ஓசை வேறுபாட்டால் மூன்று வகைப்படும். அவை **வல்லினம், மெல்லினம், இடையினம்** என்பன.

### வல்லினம்

9. வல்லினம் என்பது வன்மையான ஓசை உடையது. வல்லின மெய்யெழுத்துக்கள் ஆறு.

அவை **க், ச், ட், த், ப், ற்** என்பன. இவற்றை **வலி** என்றும் **வன்கணம்** என்றும் கூறுவர்.

## மெல்லினம்

10. மெல்லினம் என்பது மென்மையான ஓசை உடையது. மெல்லின மெய்யெழுத்துக்கள் ஆறு. அவை **ங், ஞ், ண், ந், ம், ன்** என்பன. இவற்றை **மெலி** என்றும், **மென்கணம்** என்றும் கூறுவர்.

## இடையினம்

11. வன்மையான உச்சரிப்பும் மென்மையான உச்சரிப்பும் அல்லாமல் இடைத்தரமான உச்சரிப்பு உடையது இடையினம். இடையின மெய்யெழுத் துக்கள் **ய், ர், ல், வ், ழ், ள்** என்னும் ஆறும். இவற்றை **இடை** என்றும் **இடைக்கணம்** என்றும் கூறுவர்.

## கேள்விகள்

1. 'மெய்' என்பதற்குப் பொருள் யாது?
2. மெய்யின் தன்மை யாது?
3. மெய்யெழுத்தாவது யாது? மெய்யெழுத்துக்கள் யாவை? அவற்றின் அடையாளம் யாது?
4. மெய்யெழுத்தின் வகை எத்தனை? அவ்வகைக்குக் காரணம் யாது?
5. வலி, மெலி, இடை — இவற்றை விளக்குக.
6. இம்மூன்று வகையும் வேறு எவ்வெவ்வாறும் வழங்கப்பெறும்?

## பயிற்சி-4

1. ஊஞ்சற்பலகை, தென்னம்பாய், நுங்கம்பாக்கம், ஈச்சங்கள், கண்ணுடையர் என்பவர் கற்ருேர், தோட்டக்காரன், பத்துப் பாட்டு, தந்தை தாய், அப்பமா, அவ்வையார், வாழ்க தமிழ் — இவற்றுள் வந்துள்ள மெய்யெழுத்துக்களை எடுத்து எழுதி, அவை இன்ன இனமெனவும் குறிப்பிடுக.

2. விடுபட்ட இடங்களில் தகுந்த மெய்யெழுத்துக்களை அமைக்க :

| வல்லினம் | மெல்லினம் | இடையினம் |
|---|---|---|
| த—ச—தொழில் | தெ—ன—சோலை | பே—க்குணம் |
| ப—டு—புடவை | தெ—ன—தோப்பு | க—வீடு |
| க—தரி—காய் | க—ப—கொல்லை | ப—முளைத்தது |
| ஆ—ப—கடை | ஊ—கற்பலகை | நெ—முளை |

### உயிர்மெய் எழுத்து

12. உயிர் எழுத்தும் மெய் எழுத்தும் கூடிப் பிறக்கும் எழுத்து **உயிர்மெய் எழுத்து** எனப்படும்.

(உ-ம்) க் + அ = க.

குறிப்பு : க என்னும் எழுத்தில் க் என்னும் மெய் எழுத்தும் அ என்னும் உயிர் எழுத்தும் கூடி இருப்பதை நன்கு கவனிக்க.

13. உயிர்மெய் எழுத்து இருநூற்றுப் பதினுரும். ஒவ்வொரு மெய்யெழுத்தோடும் பன்னிரண்டு உயிர் எழுத்தும் தனித்தனி சேர்வதால், உயிர்மெய் எழுத்து ( 18 × 12 ) 216 ஆகும்.

இ. 2

# 12. உயிர்மெய் யெழுத்துக்கள் - 216.

| உயிரெழுத்து | | அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| க் | + | க | கா | கி | கீ | கு | கூ | கெ | கே | கை | கொ | கோ | கௌ |
| ங் | + | ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ | ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ |
| ச் | + | ச | சா | சி | சீ | சு | சூ | செ | சே | சை | சொ | சோ | சௌ |
| ஞ் | + | ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ | ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ |
| ட் | + | ட | டா | டி | டீ | டு | டூ | டெ | டே | டை | டொ | டோ | டௌ |
| ண் | + | ண | ணா | ணி | ணீ | ணு | ணூ | ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ |
| த் | + | த | தா | தி | தீ | து | தூ | தெ | தே | தை | தொ | தோ | தௌ |
| ந் | + | ந | நா | நி | நீ | நு | நூ | நெ | நே | நை | நொ | நோ | நௌ |
| ப் | + | ப | பா | பி | பீ | பு | பூ | பெ | பே | பை | பொ | போ | பௌ |
| ம் | + | ம | மா | மி | மீ | மு | மூ | மெ | மே | மை | மொ | மோ | மௌ |
| ய் | + | ய | யா | யி | யீ | யு | யூ | யெ | யே | யை | யொ | யோ | யௌ |
| ர் | + | ர | ரா | ரி | ரீ | ரு | ரூ | ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ |
| ல் | + | ல | லா | லி | லீ | லு | லூ | லெ | லே | லை | லொ | லோ | லௌ |
| வ் | + | வ | வா | வி | வீ | வு | வூ | வெ | வே | வை | வொ | வோ | வௌ |
| ழ் | + | ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ | ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ |
| ள் | + | ள | ளா | ளி | ளீ | ளு | ளூ | ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ |
| ற் | + | ற | றா | றி | றீ | று | றூ | றெ | றே | றை | றொ | றோ | றௌ |
| ன் | + | ன | னா | னி | னீ | னு | னூ | னெ | னே | னை | னொ | னோ | னௌ |

14. மெய்யெழுத்துப் பதினெட்டுடன் உயிர்க் குற்றெழுத்து ஐந்தும் தனித்தனி சேர்ந்து வரின், (18 × 5) 90 உயிர்மெய்க் குற்றெழுத்தாகும்.

(உ-ம்) க்+அ=க; க்+இ=கி, க்+உ=கு.
க்+எ=கெ, க்+ஒ=கொ.

(இவ்வாறே மற்றைய மெய்யெழுத்துக்களோடும் உயிர்க் குற்றெழுத்துக்களைச் சேர்த்துப் பார்க்க.)

15. மெய்யெழுத்துப் பதினெட்டோடும் உயிர் நெட்டெழுத்து ஏழும் தனித்தனி சேர்ந்துவரின் உயிர் மெய் நெட்டெழுத்து (18 × 7) 126 ஆகும்.

(உ-ம்) க்+ஆ=கா, க்+ஈ=கீ, க்+ஊ=கூ
க்+ஏ = கே, க் + ஐ = கை, க்+ஓ=கோ. க்+ஔ=கௌ.

(இவ்வாறே ஏனைய மெய்யெழுத்துக்களோடும் உயிர் நெட்டெழுத்தைச் சேர்த்துப் பார்க்க.)

| | |
|---|---|
| (உ-ம்) உயிர்மெய்க் குறில் | 90 |
| உயிர்மெய் நெடில் | 126 |
| ஆக உயிர்மெய் எழுத்துக்கள் | 216 |

16. வல்லின மெய் ஆறுடனும் பன்னிரண்டு உயிர் எழுத்துக்களும் தனித்தனி சேர, உயிர்மெய் வல்லினம் (6 × 12) 72 ஆகும்.

(உ-ம்) க்+அ=க, க்+ஆ=கா, க்+இ=கி
க்+ஈ=கீ, க்+உ=கு, க்+ஊ=கூ,
க்+எ=கெ, க்+ஏ=கே, க்+ஐ=கை,
க்+ஒ=கொ, க்+ஓ=கோ, க்+ஔ= கௌ

இப்படியே மற்றைய வல்லின மெய்களோடும் உயிர் எழுத்துக்கள் பன்னிரண்டையும் சேர்த்துப் பார்க்க.)

17. மெல்லின மெய் ஆறுடனும் பன்னிரண்டு உயிர் எழுத்துக்களும் தனித்தனி சேர, உயிர்மெய் மெல்லினம் (6 × 12) 72 ஆகும்.

(உ-ம்) ங் + அ = ங, ங் + ஆ = ஙா, ங் + இ = ஙி, ங் + ஈ+ஙீ, ங் + உ = ஙு,ங் + ஊ = ஙூ, ங் + எ = ஙெ, ங் + ஏ = ஙே, ங் + ஐ = ஙை, ங் + ஒ = ஙொ, ங்+ஓ= ஙோ, ங் + ஔ = ஙௌ.

(இவ்வாறே மற்றைய மெல்லின மெய்களுடனும் உயிர் எழுத்துக்களைச் சேர்த்துக் காண்க.)

18. இடையின மெய் ஆறுடனும் உயிர் எழுத்துப் பன்னிரண்டும் தனித்தனி சேர, உயிர்மெய் இடையினம் (6 × 12) 72 ஆகும்.

(உ-ம்) ய் + அ = ய, ய் + ஆ = யா, ய் + இ = யி, ய் + ஈ = யீ, ய் = உ = யு,ய்+ ஊ = யூ, ய் + எ = யெ, ய் + ஏ = யே, ய்+ஐ = யை, ய் + ஒ = யொ, ய் + ஓ = யோ, ய் + ஔ = யௌ.

(இவ்விதமே மற்றைய இடையின மெய்களோடும் உயிர் எழுத்துக்களைக் கூட்டிப் பார்க்க.)

| | |
|---|---|
| உயிர்மெய் வல்லினம் | 72 |
| உயிர்மெய் மெல்லினம் | 72 |
| உயிர்மெய் இடையினம் | 72 |
| ஆக உயிர்மெய்யெழுத்து | 216 |

## கேள்விகள்

1. உயிர்மெய் எழுத்தாவது யாது?
2. அவ்வெழுத்திற்கு அப்பெயர் வரக் காரணம் யாது? உதாரணம் தந்து விளக்குக.

3. உயிர்மெய் எழுத்து எத்தனை? எப்படி?
4. உயிர்மெய் வல்லினம், மெல்லினம், இடையினம் எத்தனை? எப்படி? அவற்றுள் ஒவ்வொன்றையும் விளக்கி உதாரணமும் தருக.
5. உயிர்மெய்க் குறில், உயிர்மெய் நெடில் என்பவை யாவை? உதாரணம் தருக.

## பயிற்சி-5

1. நான் தினந்தோறும் தவறாமல் பள்ளிக்கூடம் செல்கிறேன்; என் பாடங்களை ஒழுங்காகப் படிக்கிறேன். அதனால், என் வகுப்பு உபாத்தியாயர் என்னிடம் அன்பாய் இருக்கிறார். — இவ்வாக்கியங்களில் காணப்படும் உயிர்மெய் எழுத்துக்களையும், உயிர்மெய் வல்லினம், உயிர்மெய் மெல்லினம், உயிர்மெய் இடையினம், உயிர்மெய்க் குறில், உயிர்மெய் நெடில் ஆகிய இவற்றையும் கீழ்க்காணும் கட்டத்தில் எழுதுக :—

| உயிர்மெய் எழுத்து | உயிர்மெய் வல்லினம் | உயிர்மெய் மெல்லினம் | உயிர்மெய் இடையினம் | உயிர்மெய் குறில் | உயிர்மெய் நெடில் | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

2. பின்னே காணும் பதங்களில் தகுந்த உயிர்மெய் எழுத்துக்களை அமைக்க :—

அம்—, ஆண் — — ன், இன் — ம், ஈ —, உ —, ஆ — ஊ — ல், ஏ — ற் — ம், எண் — க் —, ஐம் — —, ஒன் — —, ஓட் — —ம், ஔ — — ர்.

## ஆய்த எழுத்து

19. ஆய்த எழுத்தாவது, மூன்று புள்ளி வடிவான எழுத்தாம். இது வடிவத்தில் கேடயம் என்னும் போர்க்கருவியில் உள்ள மூன்று புள்ளிகள் போலவும் அடுப்பின் மேலே இருக்கும் மூன்று குமிழ்கள் போலவும் இருப்பதினுல் ஆய்த எழுத்து எனப்பட்டது. இஃது எப்பொழுதும் ஒரு மொழியின் நடுவிலேதான் வரும்.


(உ-ம்) கஃசு, பஃறுளி.

### கேள்விகள்

1. ஆய்த எழுத்தாவது யாது ?
2. இஃது எதனுல் இப்பெயர் பெற்றது ?
3. இது சொல்லின் எவ்விடத்தில் வரும் ?

### பயிற்சி-6

1. ஆய்த எழுத்து அமைந்த சில சொற்களைக் கூறுக.
2. சி—றுளி, வெ—கு, சு—று— விடுபட்ட இடங்களில் ஆய்த எழுத்தை அமைத்து எழுதுக.
3. ——— என் வீடு, ——— என்பது உயர்வு அல்லாத திணையாம். கத்தி ——— கினுல் செய்யப்பட்டது. ——— சுருங்கேல், கோடிட்ட இடங்களில் ஆய்த எழுத்து அமைந்த தகுந்த சொற்களை எழுதுக.


எழுத்து
உயிர் எழுத்து (12)
மெய் எழுத்து (18)
உயிர்மெய் எழுத்து (216)
ஆய்தம் (1)
குறில் (5)
நெடில் (7)
சுட்டு (3)
வினா (4)
வல்லினம் (6)
மெல்லினம் (6)
இடையினம் (6)
உயிர்மெய்க் குறில் (90)
உயிர்மெய் நெடில் (16)
உயிர்மெய் வல்லினம் (72)
உயிர்மெய் மெல்லினம் (72)
உயிர்மெய் இடையினம் (72)

# II. சொல்

1. நாம் இதுவரையில் எழுத்துக்களைப் பற்றி ஒருவாறு படித்தோம்; இனிச் சொல்லைப் பற்றிப் படிப்போம். சொல்லாவது, எழுத்துக்கள் தனியாக இருந்தாலும், ஒன்றோடொன்று சேர்ந்தாலும் பொருள் தருவதாம்.

(உ-ம்) ஈ, நீ—ஓர் எழுத்துத் தனித்து நின்று பொருள் தந்த சொற்கள்.

ஈகை, நீங்கள்—பல எழுத்துக்கள் சேர்ந்து பொருள் தந்த சொற்கள்.

குறிப்பு: சொல், மொழி, பதம், வார்த்தை என்பவை ஒரே பொருளுடையவை.

### கேள்விகள்

1. சொல்லாவது யாது?
2. அஃது எவ்வெவ்வாறு வரும்?

### பயிற்சி - 7

1. நீ ஓடிப்போ, இங்கே வா, ஈ ஒரு பறவை, பூக்கொண்டு வா, இஃது ஒரு மாமரம்.

இவற்றுள் இவை ஓர் எழுத்து மொழிகள், இவை பல எழுத்துக்கள் சேர்ந்து வந்த மொழிகள் என்பதைக் குறிப்பிடுக.

2. கோடிட்ட இடங்களில் தகுந்த ஓர் எழுத்து மொழிகளை அமைக்க :—

——— உடைந்தது, தமிழ் மூன்றுந் ——— ——— பற்றி எரிகிறது, துணியை ——— வாங்கு, ——— இடு, இங்குக் கையை ———.

3. எழுத்துக்கள் தொடர்ந்த சொற்கள் பத்து கூறுக.

4. கீழ்வரும் எழுத்துக்களைப் பொருள்பட அமைக்க:— ருன்முக, தந்சுர்ர, டகள்வு, வில்கோ, குகுமங்ம்.

## சொல்லின் வகை

2 சொற்கள் நான்கு வகைப்படும். அவை: **பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல்** என்பன.

## பெயர்ச்சொல்

3. பெயர்ச் சொல்லாவது, பொருள் முதலிய வற்றின் பெயரைக் குறிப்பதாம்.

(உ-ம்) மரம் விழுந்தது ; பலகை உடைந்தது ; மாடு கத்தியது ; குழந்தை அழுகிறது.

4. பெயர்ச் சொல் ஆறு வகைப்படும். அவை பொருட்பெயர், இடப்பெயர், காலப்பெயர், சினைப் பெயர், குணப்பெயர், தொழிற்பெயர் என்பன.

5. ஒரு பொருளின் பெயரைக் குறிப்பது **பொருட்பெயர்.**

(உ-ம்) குமரன், வள்ளி, வேங்கை, காக்கை.

6. ஓர் இடத்தின் பெயரைக் குறிப்பது **இடப் பெயர்.**

(உ-ம்) மயிலாப்பூர், திருவல்லிக்கேணி, சிதம்பரம், மதுரை.

7. காலத்தைக் குறிக்கும் பெயர் **காலப்பெயர்.**

(உ-ம்) காலை, மாலை, ஆண்டு, நாள்.

8. ஒரு முழுப் பொருளின் ஒரு பாகத்தை (உறுப்பை)க் குறிப்பது **சினைப் பெயர்.** (சினை, உறுப்பு, அவயவம் என்பன ஒரே பொருளின.)

(உ-ம்) கை, தலை, கண், கால், கிளை, வேர்.

9. ஒரு பொருளின் குணத்தைக் காட்டுவது **குணப் பெயர்.**

(உ-ம்) தீமை, நன்மை, அழகு, வெண்மை.

10. ஒரு தொழிலின் பெயரைக் குறித்து வருவது **தொழிற் பெயர்.**

(உ-ம்) நடத்தல், வருகை, ஏற்றுமதி, செலவு.

## கேள்விகள்

1. சொற்கள் எத்தனை? அவை எவை?
2. பெயர்ச்சொல்லாவது யாது? அஃது எத்தனை வகைப்படும்? அவை யாவை? ஒவ்வொன்றையும் விளக்கி உதாரணம் தருக.
3. 'சினை' என்னும் பொருளைத் தரும் வேறு சொற்கள் எவை?

## பயிற்சி - 8.

1. நான் புத்தகம் வாங்கினேன். இஃது என் வீடு. அவர் இங்கு வருவார். கிளி பழம் தின்னும். பூனை பால் குடிக்கும் — இவற்றுள் வந்த பெயர்ச் சொற்களை எழுதுக.

2. கோடிட்ட இடங்களில் தகுந்த பெயர்ச் சொற்களை அமைக்க :— டஜன் ———— வாங்கு ; எப்போது ————வருவார் ? ஏன் நேற்று———— வரவில்லை ? பசி எடுத்தால்————அருந்துவேன்; ————கொடு.

3. கீழ்வருவனவற்றில் இவை இவை இன்னின்ன பெயர்கள் எனக் குறிப்பிடுக :—

பசு ஒன்று வாங்கினேன். அது சேலத்திலிருந்து சென்னைக்குக் கொண்டுவரப்பட்டது. அதன் குளம்புகள் சிறியவை ; கண்கள் பெரியவை ; நிறம் பழுப்பு. அது நல்ல கறவல் உடையது. அதை வாங்கி ஒரு வாரந்தான் ஆயிற்று. அஃது ஒரு தினத்திற்கு வேளைக்கு இரண்டு படிப் பால் தருகிறது. பால் இனிமையாய் இருக்கிறது. அதன் வாலில் உள்ள மயிரைச் சிறிது வெட்டுதல் வேண்டும்.

4. கோடிட்ட இடங்களில்தகுந்தபெயர்ச்சொற்களைஎழுதி அவை இன்னவகை எனவும் குறிப்பிடுக :—

———— நல்லவன். ———— தவருமல் செல்வான். அவன் நிறம் ————. அவன் எப்போதும் ———— உடைகளை உடுத்துவான். அவன் ———— இருந்து வருகிருன். இரவில் ஒன்பது ———— க்குப் போவான். அவனது ———— எல்லோருக்கும் பிடித்தமானது.

11. பெயர்ச்சொற்களில் திணை, பால், எண், இடம், வேற்றுமை ஆகிய இவற்றை அறிய வேண்டும்.

## திணை

12. திணையாவது சாதியாம். அஃது இரண்டு வகைப்படும். அவை உயர்திணை, அஃறிணை என்பன.

13. உயர்திணை என்பது உயர்வாகிய சாதியாம். அது மக்களையும், தேவர்களையும் குறிக்கும்.

(உ-ம்) மனிதன், மக்கள்—உயர்திணை
இந்திரன், தேவர்—உயர்திணை

14. அஃறிணையாவது உயர்வு அல்லாத சாதியாம். (அல்=உயர்வு அல்லாத, திணை=சாதி.) இதில் உயிர் உள்ள பொருள்களும் உயிர் இல்லாப் பொருள்களும் அடங்கும்.

(உ-ம்) புலி, —உயிருள்ளது —அஃறிணை
நாற்காலி —உயிர் அற்றது — அஃறிணை

## கேள்விகள்

1. பெயர்ச் சொல்லில் எவ்வெவற்றை அறியவேண்டும்?
2. திணையாவது யாது? அஃது எத்தனை? அத் திணைகள் எவை? அவற்றுள் ஒவ்வொன்றையும் விளக்கி உதாரணம் தருக.

## பயிற்சி-9

1. பின் வருவனவற்றில் உள்ள பெயர்களுக்குத் திணைகுறிப்பிடுக:— கணபதி என்பவர் ஒரு தேவர். அவர்

குள்ளமாய்இருப்பார். அவரதுகையும்காலும்குட்டையாய் இருக்கும்; வயிறு பெரியது. அவருக்குக் கொழுக்கட்டை என்னும் பலகாரத்தின் மீது பிரியம் அதிகம். அவர் தந்தையார் பெயர் சங்கரனார் என்பது, அவர் தாயார் பெயர் சங்கரி என்பது. தம்பியார் பெயர் குமாரசாமி என்பது.

2. கோடிட்ட இடங்களில் தகுந்த சொற்களை அமைத்து, அவை இன்ன திணை எனவும் குறிப்பிடுக :—

வேலன் என்பவன் தினமும் காலையில் ——— விட்டு எழுந்திருப்பான். ——— ——— சுத்தம் செய்து கொள்வான். ஒரு பக்கமாக உட்கார்ந்து ——— சொல்லிக்கொடுத்த பாடத்தைப் படிப்பான். ——— எழுத வேண்டுவதை எழுதுவான். ——— செய்கைகளைக் கண்டு ——— மகிழ்வார்கள். அவன் பெற்றோர்கள் ——— ——— என்னும் பெயரை உடையவர்கள்.

## பால்

15. பால் என்பது பிரிவு. அஃது ஐந்து வகைப்படும். அவை **ஆண் பால், பெண் பால், பலர் பால், ஒன்றன் பால், பலவின் பால்** என்பன.

16. ஆண் பால் ஆணைக் குறிப்பது.

(உ-ம்) பொன்னன், கண்ணன்.

17. பெண்ணைக் குறிப்பது பெண்பால்.

(உ-ம்) பொன்னி, மீனாட்சி.

18. ஆண்பாற் பலரையும், பெண்பாற் பலரையும், ஆண் பெண் என்னும் இரு பாலாரும் சேர்ந்த பலரையும் குறிப்பவை பலர்பாலாம்.

(உ-ம்) ஆடவர் — ஆண்பாற் பலர்
தோழிமார் — பெண்பாற் பலர்
மக்கள் — ஆண் பெண் பலர்

குறிப்பு : ஆண் பால், பெண் பால், பலர் பால் ஆகிய இம் மூன்று பால்களும் உயர்திணையைச் சேர்ந்தவை.

19. அ∴றிணையில் ஒரு பொருளைக் குறிப்பது ஒன்றன் பாலாம்.

(உ-ம்) அது, இது.

20. அ∴றிணையில் பலவற்றைக் குறிப்பது பலவின் பாலாம்.

(உ-ம்) அவை, இவை.

குறிப்பு : ஒன்றன் பால், பலவின் பால் ஆகிய இவ்விரண்டும் அஃறிணையைச் சார்ந்தவை.

## கேள்விகள்

1. பாலாவது என்ன ? அதன் வகை எத்தனை? அவை எவை ? அவற்றுள் ஒவ்வொன்றையும் விளக்கி உதாரணம் தருக.
2. பலர் பாலாவது யாது ?
3. பலர் பாலுக்கும் பலவின் பாலுக்கும் உரிய வேற்றுமை யாது ?
4. உயர்திணை அஃறிணைக்குரிய பால்கள் எவை ?

## பயிற்சி - 10

கீழ் வருவனவற்றுள் வந்துள்ள பெயர்ச் சொற்கள் இன்னின்ன பாலைச் சேர்ந்தவை எனக் குறிப்பிடுக :—

1. கமலம் பாட்டுப் பாடுவாள்.
2. இடையன் மாடு மேய்ப்பான்.
3. தாதிகள் அரசியோடு வந்தார்கள்.
4. தோட்டத்தில் மலர்களைப் பறித்தனர். பழம் வாங்கினேன்.
5. மரங்களில் இலையும், பூவும், காயும், கனியும் நிறைந்திருந்தன.
6. சோலையில் சீமான் சீமாட்டிகள் உலாவுகின்றார்கள்.
7. சிறுவர்கள் ஊதலை ஊதிக்கொண்டிருந்தார்கள்.
8. சோலைக்குக் காவற்காரன் ஒருவன் உண்டு.
9. தண்ணீர் ஊற்றும் பெண்களும் உண்டு.
10. அங்கு மேடைகள் பல.

### எண்

21. எண் என்பது, பொருள்களின் எண்ணிக்கையாம். அஃது இரண்டு வகைப்படும். அவை **ஒருமை, பன்மை** என்பன.

22. ஒருமையாவது ஒன்றை மட்டும் குறிப்பது.

(உ-ம்) மனிதன், மிருகம், பறவை.

23. பன்மை என்பது ஒன்றுக்கு அதிகப்பட்டவற்றைக் குறிப்பது.

(உ-ம்) மனிதர்கள், மிருகங்கள், பறவைகள்.

குறிப்பு : ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால் ஆகிய இம் மூன்று பாலும் ஒருமை எண்ணுக்குரியவை. பலர் பாலும், பலவின் பாலும் பன்மை எண்ணுக்குரியவை.

## கேள்விகள்

1. எண்ணாவது யாது ?
2. எண் எத்தனை ? அவை எவை ?
3. ஒருமை, பன்மை என்பவை யாவை ?
4. ஒருமைக்கும் பன்மைக்குமுரிய பால்கள் எவை ?

## பயிற்சி - 11

1. சங்கு சுட்டாலும் வெண்மை தரும். மானிடரே கேளுங்கள். எடுத்த கருமங்கள் ஆகா. மரங்கள் எல்லாம் பருவத்தால் அன்றிப் பழா. கல்மேல் எழுத்து — இவற்றுள் ஒருமை பன்மை எவை ?

2. கடலில் பல ——— எழும். நான் ஒரு டஜன் ——— வாங்கினேன். இஃது எனது ———. ——— வந்தார்களா ? ——— கடலை நோக்கிப் போகும். மேலே கோடிட்ட இடங்களில் தகுந்த சொற்களை அமைத்து அவற்றின் எண்ணையும் கூறுக.

3. ஒருமைக்கு ஐந்து உதாரணமும், பன்மைக்கு ஐந்து உதாரணமும் தருக.

4. ஐந்து பழங்கள் அழுகிப்போயின. மாடு மேய்ந்தது. நீ குடையைப் பிடி. உங்கள் தொப்பிகளை எடுங்கள். இவற்றுள் ஒருமையைப் பன்மையாகவும், பன்மையை ஒருமையாகவும் மாற்றுக.

## இடம்

24. இடமாவது, இலக்கணத்தில் சொல்லின் நிலைக்குறிய ஸ்தானமாம். இது தன்மை, முன்னிலை, படர்க்கை என மூவகைப்படும்.

25. தன்மையாவது, பேசுபவனைக் குறிக்கும் இடமாம்.

(உ-ம்) நான், நாம்.

26. முன்னிலையாவது எதிரில் நின்று கேட்பவனைக் குறிக்கும் இடமாம்.

(உ-ம்) நீ, நீர்.

27. படர்க்கையாவது, தன்மையும் முன்னிலையும் அல்லாத இடமாம்.

(உ-ம்) அவன், அது, பலகை, மரம்.

குறிப்பு : (1) இம்மூன்று இடங்களுக்கும் ஒருமை பன்மை என்னும் எண்கள் உண்டு.

| | | |
|---|---|---|
| (உ-ம்) | நான் | — தன்மை ஒருமை |
| | நாம் | — தன்மைப் பன்மை |
| | நீ | — முன்னிலை ஒருமை |
| | நீர் | — முன்னிலைப் பன்மை |
| | அவன் | — படர்க்கை ஒருமை |
| | அவர்கள் | — படர்க்கைப் பன்மை |

(2) தன்மை, முன்னிலை இடங்களுக்குத் திணை, பால் இல்லை. படர்க்கை இடம் மட்டும் திணை,பால்களைப் பெற்று வரும்.

(உ-ம்) ஒருவர் கூட்டத்தில் எழுந்து, "நாம் எல்லாம் ஒன்று பட்டால் சுகம் உண்டு" என்றனர். எலிகள் தங்கள் கூட்டத்தில் "நாம் பூனைக ளிடமிருந்து தப்ப ஒரு வழிதேட வேண் டும்" என்று பேசின. — இங்கு 'நாம்' என்னும் தன்மைப் பெயர் ஒரு திணைக்கோ பாலுக்கோ உரியதாகாமல், இரு திணைக்கும் எல்லாப் பாலுக்கும் உரியதாய் வந்தமை காண்க.

முருகன் தன் நண்பனைப் பார்த்து, "நீ நாளைக் கும் வருகிறாயா ?" என்று கேட்டான். எலி சிங்கத்தினிடம் சென்று, "நீ எப்படி இவ் வலையில் சிக்கினாய் ?" என்று கேட்டது. — இங்கு 'நீ' என்னும் முன்னிலைப் பெயர் ஒரு திணைக்கோ பாலுக்கோ உரிமை பெற்று வராமல், பொதுவாய் வந்ததை உணர்க.

கந்தன் வந்தான். மரம் வளர்ந்தது. — இவற்றி லுள்ள படர்க்கைப் பெயர்கள் திணையை யும் பாலையும் உணர்த்தி நிற்றல் காண்க.

## கேள்விகள்

1. இடமாவது யாது ? அஃது எத்தனை ? அவை யாவை ? அவற்றுள் ஒவ்வொன்றையும் விளக்குக.
2. தன்மை முன்னிலை இடங்களுக்கும், படர்க்கை இடத் திற்கும் உள்ள வேறுபாடு என்ன ?

## பயிற்சி-12

1. ———பாட்டுப் பாடினேம் ———எப்போது வந்தாய்? ——— என்ன செய்கிறுன் ? ——— எங்கே போனீர்? ——— பள்ளிக்கூடம் எங்கே ? ——— முடிந்ததா? ——— எப்போது உடைந்தது ? ——— எப்படிப் போயினர் ? ——— வருவதே தெரியாதே ! மேலே கோடிட்ட இடங்களில் தகுந்த சொற்களை அமைத்து அவை இன்னின்ன இடத்திற்குரியவை என்பதைக் குறிப்பிடுக.

2. தருவாய் நீ. நாம் ஆடுவோம். யாம் பாடுவோம். நீரேபிடி பட்டீர். மடக்கிளியே, நான் ஆர் ? யான் ஏதும் பிறப் பஞ்சேன். நான் மறவேன். நீங்கள் வருவீர்கள். நாங்கள் செய்யும் கிரியை— இவற்றில் உள்ள இடப்பெயர்களை எடுத்துக் காட்டி, அவை இன்ன இடமெனவும் கூறுக.

3. தன்மைப் பெயரும் முன்னிலைப் பெயரும் இருதிணைக் கும் ஐம்பாலுக்கும் பொதுவாக வரும்படி ஒவ்வோர் உதாரணம் தருக.

4. படர்க்கைப் பெயர் எல்லாத் திணை பால்களிலும் வரு மாறு தனித்தனி ஒவ்வோர் உதாரணம் தருக.

5. மூவிடப்பெயர்களும், ஒருமையிலும், பன்மையிலும் வரு மாறு ஒவ்வொன்றிற்கும் மும்மூன்று உதாரணம் தருக.

### வேற்றுமை

28. வேற்றுமையாவது, பொருளை வேறுபடுத்து வது. கந்தன் வரவழைத்தான் என்ற இத்தொடரில் கந்தன் ஒரு பொருளை வரவழைத்தான்' என்ற

பொருளும், **கந்தனை வரவழைத்தான்** என்ற தொடரில் **கந்தனை** மற்றொருவன் வரவழைத்தான் என்ற பொருளும் இருப்பதைக் கவனிக்க. **கந்தன், கந்தனை** என்னும் இவ்விரண்டு சொற்களிலும் பொருளை வேறுபடுத்துவது ஐ என்னும் எழுத்தாம். இதனை **வேற்றுமை உருபு** என்பர்.

ஒரு சொல் பொருளில் வேறுபட்டது என்பதற்குச் சில அடையாளங்கள் உண்டு. அவற்றை வேற்றுமை உருபு என்பர்.

29. இவ்வாறு பொருளை வேறுபடுத்தும் வேற்றுமை எட்டாம். அவை **முதல்** வேற்றுமை, **இரண்டாம்** வேற்றுமை, **மூன்றாம்** வேற்றுமை, **நான்காம்** வேற்றுமை, **ஐந்தாம்** வேற்றுமை, **ஆறாம்** வேற்றுமை **ஏழாம்**வேற்றுமை, **எட்டாம்**வேற்றுமை என்பனவாம்

30. முதல் வேற்றுமையாவது, திரிபு இல்லாத பெயராகும். இதற்கு உருபு இல்லை.

(உ-ம்) வேலன், மாலை

31. இரண்டாம் வேற்றுமையின் உருபு ஐ ஆகும்.

(உ-ம்) வேலன் + ஐ = வேலனை
மாலை + ஐ = மாலையை

32. மூன்றாம் வேற்றுமை உருபுகள் **ஆல், ஒடு, உடன்** என்பன.

(உ-ம்) வேலன் + ஆல் = வேலனால்
வேலன் + ஒடு = வேலனோடு
வேலன் + உடன் = வேலனுடன்

33. நான்காம் வேற்றுமை உருபு கு என்பது.

(உ-ம்) வேலன் + கு = வேலனுக்கு
மாலை + கு = மாலைக்கு

34. ஐந்தாம் வேற்றுமை உருபுகள் இல், இன் என்பன.

(உ-ம்) வேலனில் பெரியன் கணபதி
வேலனின் அழகன் குமரன்

35. ஆறும் வேற்றுமை உருபுகள் அது, உடைய என்பன.

(உ-ம்) வேலனது கை
வேலனுடைய வீடு

36. ஏழாம் வேற்றுமை உருபுகள் இல், கண் இடம் என்பன.

(உ-ம்) வீட்டில் சென்றுன்
வேலன்கண் சென்றுன்
வேலனிடம் சென்றுன்

37. எட்டாம் வேற்றுமைக்குத் தனியாக உருபு இல்லை. ஒரு பொருளைக் கூப்பிடுவதே அதன் அமைப்பாம். அதனுல், அதை விளி வேற்றுமை என்பர்.

(உ-ம்) வேலா ! வேலோய் !
மாலாய் ! மாலையே !

## கேள்விகள்

1. வேற்றுமையாவது என்ன ? அஃது எத்தனை அவை எவை ?
2. உருபாவது யாது ?
3. உருபில்லாத வேற்றுமைகள் யாவை ?
4. எட்டாம் வேற்றுமைக்கு வேறு ஒரு பெயர் என்ன ?

5. ஒரே உருபு பெற்று வரும் இரண்டு வேற்றுமைகள் யாவை? அவற்றிற்கு உதாரணம் தருக.

6. 'இல்' என்னும் உருபு எவ்வெவ்வேற்றுமையில் வரும்?

7. ஒவ்வொரு வேற்றுமையின் உருபுகளையும் எழுதித் தனித்தனி உதாரணம் தருக.

## பயிற்சி-13

கீழ்க்காணும் தொடர்களிலுள்ள வேற்றுமைகளைச் சுட்டி இன்ன வேற்றுமை எனவும் குறிப்பிடுக :—

1. மன்னவரே, இமயத்திலிருந்து சில மக்கள் உம்மைக் காண வந்திருக்கின்றனர். நெறியைக் கண்டு, யாகத்திற்கு வேண்டிய, அரண்மனையில், மக்களே வணக்கம், காரம், நீரால் நனை, அவனோடு என்ன வேலை? உனது பாதம், வீட்டில் என்ன செய்கிறாய்?


2. ——— நான் ———. ——— காண அருள்புரிவீராக. ——— மன்னியுங்கள். ——— செய்த சிறு பிழை எல்லாம் ——— ஆயின் பொறுப்பது கடன். கோடிட்ட இடங்களில் தகுந்த சொற்களை எழுதி, அவை இன்ன வேற்றுமை எனவும் குறிப்பிடுக.

3. சந்திரன் என்ற சொல்லோடு 2, 5, 7 வேற்றுமை உருபுகளைச் சேர்த்து எழுதுக.

4. வேலை, காலை—இச்சொற்களை முதல் வேற்றுமை இரண்டாம் வேற்றுமை ஆகப் பொருள் வேறுபட வாக்கியத்தில் அமைக்க.

5. பாக்கு, உனக்கு, காளை, தாளை—இவற்றுள் எஃது முதல் வேற்றுமை? எஃது இரண்டாம் வேற்றுமை? ஏன்?

# பெயர்ச்சொற்களில் அறிய வேண்டுபவை



## வினைச் சொல்

38. வினைச் சொல்லாவது, பெயர்ச் சொல்லின் தொழிலைக் காட்டுவதாம். (வினை — தொழில்)

(உ-ம்) முருகன் வந்தான்.
வள்ளி பாடினாள்.
சேவல் கூவியது.

39. வினைச்சொல் முடிந்த தொழிலைக் காட்டுவது **வினைமுற்று** எனப்படும்.

(உ-ம்) நடந்தான், வருகிறான், படிப்பான்.

40. வினைச்சொல் முடியாத தொழிலாய் வருவது **எச்சம்** ஆகும்.

(உ-ம்) நடந்து, வருகிற, படிக்க.

41. இவ்வெச்சம் இரண்டு வகைப்படும். அவை **பெயரெச்சம், வினையெச்சம்** என்பன.

42. பெயர்ச்சொல்லைக் கொண்டு முடியும் எச்ச வினை, பெயரெச்சம் ஆகும்.

(உ-ம்) நடந்த பையன், வருகிற வண்டி, ஓடும் மாடு

43. வினைச்சொல்லைக் கொண்டு முடியும் எச்ச வினை, வினை எச்சம் ஆகும்.

(உ-ம்) நடந்து வந்தான், வந்து போனான்,
படிக்க வந்தாள்.

## கேள்விகள்

1. வினைச் சொல்லாவது யாது ?
2. முற்று, எச்சம் என்பவை யாவை ?
3. எச்சம் எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?
4. பெயர் எச்சம், வினை எச்சம் இவற்றிற்குத் தனித் தனி ஐந்து உதாரணம் தருக.

## பயிற்சி-14

1. கீழ் வருவனவற்றுள் காணும் வினைமுற்று, வினையெச்சம், பெயர் எச்சங்களைக் குறிப்பிடுக :—

அதோ பாற்காரன் வருகிறான். அவன் பசுவுக்குப் பின்னே நடந்து வருகிறான். பசுவின் கன்று துள்ளித் துள்ளி வருகின்றது. அவன் பசுவைக் கொண்டு வந்து நம் வீட்டின் முன் கட்டுவான். அவன் பாலைக் கறந்து கொடுப்பான். கன்றுக்குக் குடிக்கப் பாலை விடுவான். அவன் உடைந்த பாத்திரமும் அறுந்த கயிறும் வைத்திருக்கிறான்.

2. கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய்க :—

கந்தன் கடா மாட்டின் மேல் ———— . அது ——— கீழே ————, அதனால் அவன் காலில் ———— ———— காலுடன் அவன் மாடுகளை———— ———— அவன் ஆடு மாடுகளை நன்றாக ——— நீர் ———— இடங்களில் நீரைக் ——— ————.

## வினைச்சொல்லின் வகை

44. வினைச்சொல் பலவகைப்படும். அவற்றுள் இங்குச் செயப்படு பொருள் குன்றிய வினை, செயப்படு பொருள் குன்றாவினை, ஏவல் வினை, வியங்கோள் வினை என்பவை பற்றிப் படிப்போம்:

45. செயப்படுபொருள் குன்றாவினை என்பது, செயப்படு பொருளைப் பெறாத வினையாம்.

குறிப்பு: வினைமுற்றின் முன் யாரை அல்லது எதை என்பவற்றுள் ஏற்ற ஒன்றை அமைத்துக் கேள்வி கேட்கும் போது வரும் விடையே செயப்படுபொருள் எனப்படும். விடையைப் பெறாத வினை செயப்படுபொருள் குன்றிய வினை; விடையைப்பெறும் வினை செயப்படுபொருள் குன்றா வினை.

(உ-ம்) கந்தன் வந்தான். (செயப்படுபொருள் குன்றிய வினை.)

குறிப்பு: 'யாரை வந்தான்? எதை வந்தான்? என்னும் கேள்விக்கு விடை வாராமையை உணர்க.

46. செயப்படுபொருளைப் பெற்று வரும் வினை செயப்படுபொருள் குன்றாவினையாம்.

(உ-ம்) கந்தன் படித்தான்.

குறிப்பு: 'எதைப் படித்தான்?' என்னும் கேள்விக்குப் பாடத்தை என்னும் பதில் வருதல் காண்க. ஆதலின், இது செயப்படு பொருள் குன்றா வினையாம்.

### கேள்விகள்

1. வினைச்சொல் எத்தனை வகைப்படும்?

2. செயப்படு பொருளை அறிவது எப்படி?
3. செயப்படுபொருள் குன்றிய வினை, செயப்படு பொருள் குன்றா வினைகளை விளக்குக.

## பயிற்சி-15

1. பின் வருவன என்ன வினைகள்?

நடந்தாள், வருகிறது, படித்தார், விட்டான், கூவினார், வேய்ந்தாள், வைப்பாள், போயினார்.

2. கருமங்கள் ஆகா, மரங்கள் பழா, பால் சுவையில் குன்றாது, சங்கு வெண்மை தரும், பழுது உண்டு, அவை அல்ல, ஒரு நாள் உணவை ஒழி, இருநாளைக்கு ஏல், என்நோ அறியாய்—இவற்றுள் வந்துள்ள வினைகளைக் காட்டி, அவை இன்ன வினையெனவும் குறிப்பிடுக.

3. கோடிட்ட இடத்தைப் பூர்த்தி செய்க :—

நான் பாடம் ——— அவன் என் வீடு ——— —.
நீ வீட்டை ———. நான் தேவாரம் ———
திருடனை ——— . முருகன் ——— வள்ளி ———

47. ஏவல் வினை கட்டளைப் பொருளில் வரும்.

(உ-ம்) நட, போ, வா.

48. வியங்கோள் வினை மரியாதைப் பொருளில் வரும்.

(உ-ம்) செய்க, வாழிய.

## கேள்விகள்

1. ஏவல் வினையாவது யாது?
2. வியங்கோள் வினையாவது யாது?

## பயிற்சி-16

1. கோடிட்ட இடத்தைப் பூர்த்தி செய்து, வினைமுற்றின் வகையையும் கூறுக:—

 கடைக்கு———. இங்கே———. பொருளை——— குழந்தை———. தயவு செய்து——— நீரை ———.

2. தா, செய்க, தருக, பிடி, நடிக்க, நாடு—இவை என்ன வினைகள்?

3. கீழ் வருவனவற்றுள் வியங்கோள் வினை, ஏவல் வினைகளைக் குறிப்பிடுக:—

 தமிழ் மூன்றுந் தா. மாயோய் வருக. இரண்டும் தாளும் சூடுக.

4. ஏவல் வினை, வியங்கோள் வினை ஒவ்வொன்றுக்கும் மும்மூன்று உதாரணம் எழுதுக.

### காலம்

49. காலம் என்பது வினை (தொழில்) நடந்த, நடக்கிற, நடக்கும் காலத்தைத் தெரிவிப்பது. இது இறந்த காலம், நிகழ் காலம், எதிர் காலம் என மூன்று வகைப்படும்.

50. இறந்த காலம் என்பது, தொழில் முன்னமே நடந்துவிட்டதைத் தெரிவிப்பது.

(உ-ம்) செய்தான், கட்டினேன்.

51. நிகழ் காலம் என்பது, தொழில் இப்பொழுது நடக்கிறதைத் தெரிவிப்பது.

(உ-ம்) செய்கிறான், கட்டுகிறாள்.

52. எதிர் காலம் என்பது, தொழில் இனிமேல் நடப்பதைத் தெரிவிப்பது.

(உ-ம்) செய்வான், கட்டுவாள்.

1. காலமாவது யாது?
2. காலம் எத்தனை வகைப்படும்? அவை யாவை? ஒவ்வொன்றையும் விளக்குக.

## பயிற்சி-17

1. உண், தின், கேள், வாழ்—இவ் வினைச்சொற்களைக் கொண்டு முக்காலங்களுக்கும் உதாரணம் தருக.
2. கோடிட்ட இடங்களில் தகுந்த வினைச் சொற்களை எழுதி, அவை இன்ன கால வினைச்சொற்கள் எனக் குறிப்பிடுக :—

   நான் நேற்று ————. முருகன் பொழுது ————. வேலன் இனி ————. மழை எப்பொழுது ————? முன்னே என்ன ————? அங்கு அவர்கள் என்ன ————? நான் ————.
3. நான் தருவேன். ஊருக்குப்போனான். எங்கே போகிறாய்? நாளைக்கு வருவாயா? பாடம் படித்தானா? ஆசிரியர் அடித்தார்—இங்குக் காணும் வினைச்சொற்கள் எவ்வெக்காலத்தைக் காட்டின?

## இடைச்சொல்

---

53. இடைச்சொல்லாவது, பெயர்ச் சொற்கள் போலவும் வினைச் சொற்கள் போலவும் தனித்து வாராமல், அவற்றோடு சேர்ந்து வருவது.

54. போல, போன்ற, உம், ஐயோ, அம்மா, அந்த, இந்த, எந்த என்பன எல்லாம் இடைச் சொற்களாகும்.

(உ-ம்) புலி போலப் பாய்ந்தான்
தேன் போன்ற இனிமை
நானும் நீயும்
ஐயோ பாவம்!
அம்மா பெரிது!
இந்த வீடு
எந்தப் பையன்

குறிப்பு:- வேற்றுமை உருபுகளும் இடைச் சொற்களே

### கேள்விகள்

1. இடைச் சொல்லாவது யாது?
2. எவை எவை இடைச் சொற்களாகும்?

### பயிற்சி - 18

1. கோடிட்ட இடங்களை இடைச் சொற்களால் பூர்த்தி செய்க :—

கோழி ——— கூவினான். நீ ——— பள்ளியில் படிக்கிறாய்? பால் ——— தேன் ——— பாகு ——— பருப்பு—இவை நான் ——— கலந்து தருவேன்.

——— கட்டடம் யாருடையது ? ———வீணாய்ப் போயிற்றே ?

2. தேவனே, முருகனுடன், தேவனுக்கு, என்னுடைய — இவற்றுள் எவை இடைச்சொற்கள் ? ஏன் ?

## உரிச்சொல்

55. உரிச்சொல்லாவது, பெயர்ச்சொல், வினைச் சொல் ஆகிய இரண்டின் குணத்தை அறிவிப்பது.

(உ-ம்) உறு மீன், சாலப் பேசினான்.
கழி உவகை, நனி தின்றான்.


குறிப்பு: உரிச்சொற்கள் பலவாயினும், நீங்கள் சில உரிச்சொற்களை மறவாமல் இருத்தல் வேண்டும். அவை மிகுதிப் பொருளை யுணர்த்தும் சால, உறு, தவ, கழி, நனி என்பன.

### கேள்விகள்

1. உரிச்சொல்லாவது யாது ?
2. உரிச்சொற்கள் எவை ?

### பயிற்சி-19

1. கீழ் வருவனவற்றுள் எவை உரிச்சொல் ?
   உறுமீன், கழி நன்று, நனி நாணினாள், சாலப் பரிந்து, தவக்கொடிது.
2. கீழ்க்காணும் கோடுகளில் உரிச்சொற்களை அமைக்க :-
   ——— நாள், ——— நகை, ——— தவம், ——— பேதை.


சொல்
பெயர்ச்சொல்
இடைச்சொல்
உரிச்சொல்
வினைச்சொல்
பொருட் பெயர்
இடப் பெயர்
காலப் பெயர்
சினைப் பெயர்
குணப் பெயர்
தொழிற் பெயர்
பெயர் உரிச்சொல்
வினை உரிச்சொல்
முற்று வினை
எச்ச வினை
செயப்படுபொருள் குன்றிய வினை
செயப்படுபொருள் குன்றா வினை
ஏவல் வினை
வியங்கோள் வினை
பெயர் எச்சம்
வினை எச்சம்

# III. புணர்ச்சி

1. சொற்கள் ஒன்றோடொன்று சேர்வது புணர்ச்சியாம்.

(உ-ம்) நான் + வருகிறேன் = நான் வருகிறேன்

2. இப்புணர்ச்சி இரண்டு வகைப்படும். அவை **இயல்புப் புணர்ச்சி, விகாரப் புணர்ச்சி** என்பன

3. இயல்புப் புணர்ச்சியாவது, சொற்கள் ஒன்றோடொன்று சேரும்போது ஒருவித மாறுதலும் பெறுமல் சேர்வதாம்.

(உ-ம்) நீ + படி = நீ படி
யார் + பெரியவர் = யார் பெரியவர்.

4. விகாரப்புணர்ச்சியாவது, சொற்கள் ஒன்றோடொன்று சேரும்போது சில சொற்கள் விகாரப்பட்டுச் சேர்வதாம்.

(உ-ம்) அந்த + பையன் = அந்தப்பையன்
பல் + பொடி = பற்பொடி.

5. விகாரம் மூன்று வகைப்படும். அவை **தோன்றல் விகாரம், திரிதல் விகாரம், கெடுதல் விகாரம்** என்பன.

6. தோன்றல் விகாரமாவது, இரண்டு சொற்கள் ஒன்றோடொன்று சேரும்போது அவற்றின் நடுவில் ஓர் எழுத்துத் தோன்றுவதாம்.

(உ-ம்) தமிழ் + பாடம் = தமிழ்ப்பாடம்

7. திரிதல் விகாரமாவது, இரண்டு சொற்கள் ஒன்றோடொன்று சேரும்போது எழுத்துத் திரிந்து வருவதாம்.

(உ-ம்) பொன் + குடம் = பொற்குடம்
மண் + கலம் = மட்கலம்

8. கெடுதல் விகாரமாவது, இரு சொற்கள் ஒன்றோடொன்று சேரும்போது அவற்றிற்கு இடையில் ஏதாகிலும் ஓர் எழுத்துக் கெட்டுப்போவதாம்.

(உ-ம்) மரம் + நாய் = மரநாய்
நளன் + வெண்பா = நளவெண்பா

## கேள்விகள்

1. புணர்ச்சியாவது யாது?
2. அஃது எத்தனை வகைப்படும்?
3. அவை எவை?
4. இயல்புப் புணர்ச்சியாவது யாது?
5. விகாரப்புணர்ச்சி என்பது என்ன?
6. அஃது எத்தனை? அவை எவை? ஒவ்வொன்றையும் விளக்குக.

## பயிற்சி-20

(1) வருவனவற்றைப் புணர்த்தி இன்ன விகாரம் எனவும் கூறுக :—

வெளி+புறம், நாட்டு+புறம், வாயில்+படி, மண் + வெட்டி, தேர்+தட்டு, கள்+குடம், அல்+திணை.

(2) ஒவ்வொரு விகாரத்திற்கும் மும்மூன்று உதாரணம் தருக.

(3) பிரித்துக் காட்டுக :— கன்மேல் எழுத்துப்போல், கற்பிளவு, தளபதி, எட்டுக்கால், கட்குடம்.

9. புணர்ச்சியில் ஒரு பதத்தோடு மற்றொரு பதம் சேரும்போது முதலில் நிற்கும் பதம் நிலைமொழி என்றும், அதனோடு வந்து சேரும் பதம் வருமொழி என்றும் வழங்கப்படும்.

(உ-ம்) வேல் + நீண்டது (வேல்-நிலைமொழி, நீண்டது வருமொழி).

குறிப்பு : மாணவர்கள் புணர்ச்சியில் நிலைமொழி ஈற்று எழுத்தையும் வருமொழி முதல்எழுத்தையும் கவனித்துக் கொள்ளவேண்டும். 'கிளி பேசியது' என்பதைக் கவனிக்க. 'கிளி' என்பதில் 'ளி' என்பது கடைசி எழுத்தன்று; அதை 'ள்+இ' எனப் பிரித்தால் 'இ' என்பதே கடைசி எழுத்தாகும். ஆகையால், இப்படி வருவதை 'உயிர் ஈற்று மொழி' என்பர். 'பேசியது' என்பதில் 'பே' என்பது முதல் எழுத்தன்று. ப்+ஏ என்பதில் உள்ள 'ப்' என்பதே முதல் எழுத்தாகும். ஆகையால், இப்படி வருவதை 'மெய்ம்முதல் மொழி' என்பர்.

## கேள்விகள்

1. நிலைமொழி என்பது யாது ?
2. வருமொழி என்பது யாது ?
3. நிலைமொழி ஈறு, வருமொழி முதல் — இவற்றை விளக்குக.

## பயிற்சி-21

கீழ் வருவனவற்றுள் நிலைமொழி ஈற்றில் உள்ள எழுத்தையும் வருமொழி முதலில் உள்ள எழுத்தையும் குறிப்பிடுக :— அண்ணா + மலை, திரு + தணிகை, திரு + மால், உமை + அம்மை, கணபதி + துணை, குமர + கோட்டம், மாதா + கோவில், தே + ஆரம், திரு + அருள், மதுரை + நகர்.

## மெய்யோடு உயிர் புணர்தல்

10. நிலைமொழி ஈற்றில் மெய் எழுத்து இருந்து வருமொழி முதலில் உயிர் எழுத்து வந்தால், இரண்டு எழுத்தும் சேர்ந்து ஓர் உயிர்மெய் யெழுத்து ஆகும்.

(உ-ம்) கால் + அசைந்தது = காலசைந்தது.
வேல் + ஊர் = வேலூர்.

11. தனிக் குற்றெழுத்தைச் சார்ந்து நிற்கும் மெய்யீறு, வருமொழி முதலில் உயிர்எழுத்து வரின், தான் இரட்டித்துப் புணரும்.

7. பயனிலை என்பது, எழுவாய் செய்யும் தொழிலைத் தெரிவிப்பது.

(உ-ம்) பல்+அழகு=பல்+ல்+அழகு=பல்லழகு
கல்+அடி =கல்+ல்+அடி=கல்லடி

### கேள்விகள்

1. எப்போது மெய்யும் உயிரும் புணரும்?
2. எப்போது மெய்யெழுத்து இரட்டிக்கும்?

### பயிற்சி-22

கீழ்வருவனவற்றைச் சேர்த்து எழுதிப் புணர்ச்சி இலக்கணம் கூறுக:—

கருப்பும் + இவை, நால் + அடி, மண் + அடி.
கண் + இமை, பொன் + ஒடு, மாண் + இதழ்.
உன் + உயிர், மயில் + ஆட, தானும் + அதுவாக
பல் + உயிர், கல் + உரல்.

- புணர்ச்சி
  - இயல்புப் புணர்ச்சி
  - விகாரப் புணர்ச்சி
    - தோன்றல் விகாரம்
    - திரிதல் விகாரம்
    - கெடுதல் விகாரம்

# IV. பொது

## சொற்றொடர்

1. மலைகள் ஒன்றை ஒன்று தொடர்ந்திருக்குமானால், மலைத்தொடர் என்கிறோம். அது போலச் சொற்கள் ஒன்றை ஒன்று தொடர்வது சொற்றொடராம்.

(உ-ம்) நான் வந்தேன் — 'நான்' என்பது ஒரு சொல். அது 'வந்தேன்' என்னும் மற்றொரு சொல்லைத் தொடர்ந்து வந்தது.

2. இந்தச் சொற்றொடர் இரண்டு வகைப்படும். அவை **எச்சச் சொற்றொடர், முற்றுச் சொற்றொடர்** என்பவை.

3. எச்சச் சொற்றொடராவது, சொற்கள் ஒன்றை ஒன்று தொடர்ந்து வந்தாலும், பொருள் முடிவு பெறாமல் நிற்பது. (எச்சம் = குறைவு.)

(உ-ம்) நான் வந்து — இதில் பொருள் முடியவில்லை.

4. முற்றுச் சொற்றொடராவது, சொற்கள் ஒன்றையொன்று தொடர்ந்து, பொருள் முடிந்து நிற்பது. இது **'வாக்கியம்'** என்றும் வழங்கப்படும்.

(உ-ம்) நான் வந்து போனேன்—இதில் பொருள் முற்றுப் பெற்றது.

## கேள்விகள்

1. 'சொற்றொடர்' என்பது என்ன?
2. சொற்றொடர் எத்தனை வகைப்படும்?
3. அவை யாவை?
4. அவற்றுள் ஒவ்வொன்றையும் விளக்குக.

## பயிற்சி-23

1. கீழ் காண்பவை இன்ன தொடர் எனக் குறிப்பிடுக –

பந்து ஆடினான், என்று வருவாய்? அங்குப் போ கருமங்கள் ஆகா, பால் சுவையில் குன்றுது, மே மக்கள் மேன் மக்களே, நல்ல மரம், மரம் ஏ பழங்களை வாங்கி.

2. பூங்கொத்து,வட்டமேசை,கட்டைத்தொட்டி,தோட் வேலை, பயிர்த் தொழில் — இவற்றை முற்று சொற்றொடராக்குக.

5. முற்றுச் சொற்றொடர் அல்லது வாக்கிய என்பது இரண்டு ம்க்கியமான உறுப்புக்களை உ யது. அவை **எழுவாய், பயனிலை** என்பன.

6. எழுவாயாவது, ஒரு காரியத்தைச் செய்ய கருத்தாவைத் தெரிவிப்பதாம்.

(உ-ம்) கணபதி ஓடினான். இங்கு ஓடுதலாகி காரியத்தைச் செய்தவன் கணபதி. ஆ லால், கணபதி எழுவாயாம்.

7. பயனிலை என்பது, எழுவாய் செய்யும் தொ லைத் தெரிவிப்பது.

(உ-ம்) கணபதி ஓடினான். இங்குக் கணபதியின் காரியத்தை 'ஓடினான்' என்ற சொல் தெரிவிக்கிறது. ஆதலின், இது பயனிலையாம்.

8. ஒரு வாக்கியம், முக்கிய உறுப்புக்களாகிய எழுவாய் பயனிலைகளைப் பெற்று வருவதோடு சிற்சில சமயங்களில் '**செயப்படுபொருள்**' என்னும் மற்றோர் உறுப்பைப் பெற்று வருவதுமுண்டு.

(உ-ம்) கணபதி பாடத்தைப் படித்தான் :— இதில் கணபதி - எழுவாய் ; படித்தான் - பயனிலை 'பாடத்தை' என்பது செயப்படுபொருள்.

குறிப்பு: ஒரு வாக்கியத்தின்எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் இவற்றைக் கண்டுபிடிக்க ஒரு வழி உண்டு. உதாரணமாகத் 'தச்சன் நாற்காலியைச் செய்தான்' என்பதை எடுத்துக்கொள்வோம். முதலில் பயனிலையைக்கண்டு கொள்ளவேண்டும். பயனிலை பொருள் முடிந்த சொல்லாக இருக்கும். இங்கு 'செய்தான்' என்ற சொல்லே பொருள் முடிந்த சொல். ஆதலின், அது பயனிலை. அந்தப் பயனிலையின் முன் யார், எவன், எது என்பவற்றுள் ஏற்றதை வைத்துக் கேள்வி கேட்க வேண்டும். அதற்குப் பதில் வரும் சொல்லே எழுவாயாம். அந்தப் பயனிலையின் முன் எதை அல்லது யாரை என்ற வினாவை வைத்துக் கேட்கும் கேள்விக்குப் பதில்வருவது செயப்படுபொருளாம். 'எதைச் செய்தான் ?'—நாற்காலியைச் செய்தான். ஆதலின், நாற்காலி செயப்படுபொருளாம்.

9. செயப்படுபொருள் இரண்டாம் வேற்றுமை உருபைப் பெற்று வரும்; பெறாது வருவதும் உண்டு.

(உ-ம்) தச்சன் நாற்காலியைச் செய்தான்—இரண்டாம் வேற்றுமை உருபைப் பெற்று வந்தது.

தச்சன் நாற்காலி செய்தான் — இரண்டாம் வேற்றுமை உருபைப் பெறுமல் வந்தது.

10. சில சமயங்களில் எழுவாய் பெறுமலும் வாக்கியம் வருவதுண்டு. அவ்வாறு வந்த வாக்கியத்தில் மறைந்த எழுவாயைத் '**தோன்று எழுவாய்**' என்பர்.

(உ-ம்) எப்பொழுது போனுய்? பழம் வாங்கினுன்.

இங்கு முதல் வாக்கியத்தில் 'நீ' என்னும் எழுவாயும் இரண்டாம் வாக்கியத்தில் 'அவன்' என்னும் எழுவாயும் தோன்றுமல் மறைந்திருப்பதைக் கவனிக்க.

குறிப்பு: வாக்கியம் பயனிலை இல்லாமல் வாராது. ஆதலின், பயனிலையே வாக்கியத்திற்கு மிக முக்கியமானது.

## கேள்விகள்

1. எது வாக்கியம் எனப்படும் ?
2. வாக்கியத்தின் உறுப்புக்கள் எவை ?
3. அவற்றுள் மிக முக்கியமானது எது ?
4. ஒரு வாக்கியம் பெற்றும் பெறுதும் வரும் உறுப்பு எது ?
5. எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் இவற்றை விளக்குக.

6. செயப்படுபொருளின் அறிகுறி என்ன ?

7. எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்களை ஒரு வாக்கியத்தில் எப்படி அறியலாம் ?

8. ‘ தோன்று எழுவாய் ’ என்பது யாது?

## பயிற்சி - 24

1. கீழ் வருவனவற்றுள் வாக்கியங்களையும் சொற்றொடர்களையும் பிரித்தெழுதுக :

கந்தன் வந்து பந்து, நண்டு வளையில் நுழைகிறது, நீ சென்ற ஊர், ஊர் அடங்கிற்று, வேலன் பம்பரம் ஆடினான், பட்டுத் துணி வாங்கு, பாடம் எழுது, ஓடிப் போ, நடந்து போய், எல்லோரும் உட்காருங்கள்.

2. அவன் ஒரு சத்திரத்தில் தங்கினான். அவர்கள் பல இடங்களுக்குச் சென்றனர். கள் குடி பலத்தைக் குறைக்கும். ஆண் குழந்தை பிறந்தது. கண்ணைத் தோண்டினார். நீ நல்ல வழியைப் பின்பற்று. திருவள்ளுவர் திருக்குறளை எழுதினார். அவள் பாட்டுப் பாடினாள். சுந்தரம் பலகை எடுத்தான். பசு பால் கொடுக்கும். நன்றாய்ச் சொன்னாய் ! இப்படிச் சொல்லுகிறான். இன்னும் எழுதுகிறேன். நகை திருடி அகப்பட்டுக்கொண்டான். புறப்படு, போகலாம்—இவற்றுள் எழுவாய் எது ? எப்படி ?

3. செயப்படுபொருள் வராத வாக்கியம் ஐந்து எழுதுக.

4. நடந்தான், வருகிறான், திட்டினான், கட்டுவான், தூங்கினான், வைத்தனர், எழுந்தது, எடுத்தனள், படுத்தது, கெஞ்சினான்—இவற்றுள் செயப்படுபொருள் பெற்றும், பெறாதும் வந்த வினைகள் எவை ?

## நிறுத்துக் குறிகள்

11. நாம் ஒன்றை வாசிக்கும்போது பொருள் விளங்கும்படி வாசிக்க வேண்டும். கட கட என்று வாசிக்கக் கூடாது. எவ்விடங்களில் நிறுத்தி வாசிக்க வேண்டுமோ, அவ்விடங்களில் எல்லாம் நிறுத்தியே வாசிக்க வேண்டும். அவ்வாறு நிறுத்தி வாசிப்பதற்குச் சில குறிகள் (அடையாளங்கள்) இருக்கின்றன. அவை காற்புள்ளி, அரைப்புள்ளி, முக்காற்புள்ளி, முற்றுப்புள்ளி, வினாக்குறி, ஆச்சரியக்குறி என்பன. நீங்கள் இவ்வகுப்பில் முற்றுப்புள்ளியையும், வினாக் குறியையும் உபயோகிக்கும் விதத்தைத் தெரிந்து கொள்ளுதல் போதுமானது.

12. இது முற்றுப்புள்ளி. இதை ஆங்கிலத்தில் (Fullstop) என்பர். இதை நாம் வாக்கியம் முடிந்தவுடன் அமைக்க வேண்டும். இங்கு நான்கு மாத்திரை நேரம் நிறுத்தி வாசிக்க வேண்டும். ஒரு மாத்திரை என்பது, ஒருமுறை கண் இமைக்கும் நேரம்.

(உ-ம்) நான் காலையில் எழுந்தேன்.
நீங்கள் நாளைக்கு வாருங்கள்.

13. ? இது வினாக்குறி. இஃது ஆங்கிலத்தில் 'இண்டராகேஷன் மார்க்கு' (Interrogation mark) என்று வழங்கப்படும். இக்குறியைக் கேள்வி வாக்கியத்தின் இறுதியில் உபயோகப்படுத்த வேண்டும். இங்கு இரண்டு மாத்திரை நேரம் நிறுத்தினல் போதும்.

(உ-ம்) அவன் என்ன செய்கிறான்?
நீ பழம் வாங்கினாயா?

## கேள்விகள்

1. 'நிறுத்துக் குறி' என்பது என்ன?
2. முற்றுப்புள்ளியாவது யாது?
3. இப்புள்ளியிட்ட இடத்தில் எவ்வளவு நேரம் நிறுத்தி வாசிக்க வேண்டும்?
4. மாத்திரையாவது யாது?
5. வினாக்குறியாவது யாது?
6. வினாக் குறியுள்ள இடத்தில் எவ்வளவு நேரம் நிறுத்தி வாசிக்க வேண்டும்?
7. முற்றுப்புள்ளி, வினாக்குறி இவற்றிற்கு ஆங்கிலத்தில் என்ன பெயர்?

## பயிற்சி-25

கீழ்வருவனவற்றிற்குத் தகுந்த குறியிடுக :—

பாடுபட்டு வந்தார்-இன்னும் என்ன செய்கிறாய்-உயர்ந்த பதவியை ஏற்றார்-யாராவது காத்திருப்பாரா-குணங்கள் சிறந்து விளங்குகின்றன - அது எப்படிக் கெட்டது-புண்ணியர் ஆவாரோ-அவர் அடியில் தாழும்-எங்கே பிறந்தாலும் என்ன-கொடுக்கில் வாழும்-செயல் உண்டா-கந்தம் கெடுமோ-நற்குணமே தோன்றும்-எது பயன்-பால் என்று சொல்லுவாரோ-பனை போல்வர்-ஒழுக்கம் விழுப்பம் தரும்-என்று வந்தாய்.

## எழுத்திலக்கணம் கூறுதல்

14. எழுத்திலக்கணம் கூறுதலாவது, ஒரு தொடரில் உள்ள எழுத்துக்கள் தனித்தனி இன்னின்ன எழுத்துக்கள் என்று கூறுதல்.

(உ-ம்) அஃது என் வீடு.

அ உயிர் எழுத்து, குறில், சுட்டு.
ஃ ஆய்த எழுத்து.
து வல்லின உயிர்மெய், குறில்.
எ உயிர் எழுத்து, குறில்.
ன் மெல்லின மெய்.
வீ இடையின உயிர்மெய், நெடில்.
டு வல்லின உயிர்மெய், குறில்.

### கேள்வி

எழுத்திலக்கணம் கூறுதலாவது என்ன ?

### பயிற்சி-26

நீ அந்தக் கடைக்குச் சென்று எஃகினால் ஆன கத்தியையா வாங்கினாய் ?—எழுத்திலக்கணம் கூறுக.

## எழுத்து மாறாட்டம்

15. மாணவர்கள் ஓர் எழுத்துக்குப் பதிலாக வேறு ஓர் எழுத்தை எழுதிவிடுவதுமுண்டு. பின்னே காணும் விதியை மனத்தில் வைத்துக்கொண்டால், அவ்வாறு செய்யமாட்டார்கள். உதாரணமாக **ந், ண், ன்** இந்த எழுத்துக்களை மட்டும் இங்குக் கவனிப்போம் :

16. ந் இந்த எழுத்திற்குத் தந்நகரமெய் என்பது பெயர். ஏன் எனில், இந்த எழுத்து ஒரு சொல்லுக்கு நடுவில் வரும்போது தகர வர்க்க எழுத்தையே சார்ந்து வரும்.

(உ-ம்) நந்தனர், செந்தில், கந்தன்

குறிப்பு: த், ந் இவை ஒன்றுக்கொன்று இன எழுத்துக்கள்.

17. ண் இது டண்ணகரமெய். இது டகரத்திற்கு இனமாதலால், இப்பெயர் பெற்றது. இது டகரத்தைச் சார்ந்து வரும்.

(உ-ம்) பண்டம், திண்டாட்டம், நண்டு

18. ன் இது றன்னகரம். இது றகரத்திற்கு இனமான எழுத்து. ஆகையால், இப்பெயர் பெற்றது. இது றகர வர்க்கத்தையே சார்ந்து வரும்.

(உ-ம்) மன்றம், கன்று, சென்றுன்

## கேள்விகள்

1. ந், ண், ன் இவை எந்த இனத்தைச் சேர்ந்தவை ?
2. இவற்றிற்குரிய பெயர்கள் யாவை ? ஏன் ?

## பயிற்சி-27

1. கீழ் வருவனவற்றைத் திருத்தி எழுதித் திருத்தியதற்குக் காரணமும் கூறுக :—

இன்று ஐன்தாம்வகுப்பு, கொன்டாட்டம், பந்றிக்குட்டி, வன்து போனுன், பன்து, பூண்தி, வான்தி, கண்தன், பன்தல், மூன்று, ஒந்று.

௨. கோடிட்ட இடங்களில் தகுந்த எழுத்துக்களை அமைத்தெழுதுக :—

க — தன், ந — ருக, கொ — டல், கா — டா மிருகம், ந — டு, நுழை — தது, திருச்செ — தூர், வ — டி மாடு.

### ஆடூஉ முன்னிலை, மகடூஉ முன்னிலை

19. முன்னிலை என்பது ஒன்றை முன்னிலைப் படுத்திச் (எதிர் நோக்கி) சொல்லுவது. அஃது இரண்டு வகைப்படும். அவை : **ஆடூஉ முன்னிலை, மகடூஉ முன்னிலை** என்பன. இவை பாட்டில் மட்டுந் தான் வரும்.

20. ஆடூஉ முன்னிலையாவது, ஓர் ஆண் மகனை முன்னிலைப் படுத்திக் கூறுவது.

(உ-ம்) 'இறப்பவே தீய செயினும் தம் நாட்டார்ப்
பொறுத்தல் தகுவதொன் றன்றே?—நிறக்கோங்
குருவவண் டார்க்கும் உயர்வரை நாட!
ஒருவர் பொறையிருவர் நட்பு!

இதில் 'உயர்வரை நாட' என்பது ஆடூஉ முன்னிலை.

21. மகடூஉ முன்னிலையாவது, ஒரு பெண்ணை முன்னிலைப் படுத்திக் கூறுவது.

(உ-ம்) — பூங்குழலாய்

நெல்லின் உமிசிறிது நீங்கிப் பழமைபோல்
புல்லினும் திண்மைநிலை போம்

இதில் 'பூங்குழலாய்' என்பது மகடூஉ முன்னிலை

## கேள்விகள்

1. முன்னிலையாவது என்ன ?
2. அஃது எத்தனை வகைப்படும் ?
3. அவை எவை ?
4. அவை எங்கு வரும் ?
5. ஆடூஉ முன்னிலையாவது யாது ?
6. மகடூஉ முன்னிலையாவது யாது ?

## பயிற்சி-28

பின்வருவன இன்ன இன்ன முன்னிலை எனக் குறிப்பிடுக :

[illegible]குழாய், வளவயல், ஊர, எருமைமேல் நாரை துயில், [illegible]றியும் ஊர், பொற்றொடி, தெரியிழாய், மதியென் முகத்தாய்.

## உபமானம் உபமேயம்

22. புலவர் ஒரு பாட்டில் ஒரு கருத்தை விளக்க வரும்போது அதைச் சாதாரணமாகக் கூருமல் வேறொன்றை ஒப்பிட்டுக் காட்டி விளக்குவர். அவ்வாறு காட்டி ஒப்பிடுவதை **உபமானம்** என்பர். உபமானத்தினல் விளக்கப்படும் பொருளை **உபமேயம்** என்பர்.

(உ-ம்) ‘வெள்ளத்தனைய மலர்நீட்டம் ; மாந்தர் தம்
உள்ளத் தனைய(து) உயர்வு ;
வெள்ளத்தனைய மலர்நீட்டம்—உபமானம்
மாந்தர்தம் உள்ளத்தனையது உயர்வு—உபமேயம்

## கேள்வி

உபமானம் உபமேயம் என்பவற்றை விளக்குக :

## பயிற்சி-29

பொன்னேர் அனைய மலர், காக்கை கலந்துண்ணுவது போல நாமும் சுற்றத்தோடு சேர்ந்து உண்ண வேண்டும், எள் பிளந்தது போன்ற சிறுமை, மயிர் நீப்பின் வாழாக் கவரிமான்போல்வர் மானமுடையவர், பயன் படாச் செல்வம் நச்சுமரம்பழுத்தது போலாம், கயவர் பறைக்குச் சமம்.

# ஏழாம் வகுப்பு

# I. எழுத்து

## அகச்சுட்டு புறச்சுட்டு

1. ஒரு பொருளைச் சுட்டிக் காட்டுவது சுட்டாம். இது இரண்டு வகைப்படும். அவை: அகச்சுட்டு, புறச்சுட்டு என்பனவாம்.

2. அகச்சுட்டு ஒரு சொல்லின் உள்ளேயே இருந்து ஒரு பொருளைச் சுட்டிக்காட்டுவது (அகம்= உள்.)

(உ-ம்) அவன், இது, உவை — இங்கு அ, இ, உ என்னும் சுட்டெழுத்துக்கள் பதத்தினுள் இருந்தே சுட்டி நிற்பதை உணர்க.

3. புறச்சுட்டாவது, ஒரு சொல்லுக்கு வெளியே இருந்து ஒரு பொருளைச் சுட்டிக் காட்டுவதாம். (புறம்—வெளி)

(உ-ம்) அம்மனிதன், இவ்வீடு, உப்பலகை — இங்கு அ, இ, உ என்னும் சுட்டெழுத்துக்கள் சொல்லுக்கு வெளியில் இருந்து சுட்டி நிற்பதை உணர்க.

## கேள்விகள்

1. சுட்டாவது யாது?
2. அஃது எத்தனை வகைப்படும்?
3. அவை எவை?
4. அகச்சுட்டாவது யாது? மூன்று உதாரணம் தரு
5. புறச்சுட்டாவது யாது? மூன்று உதாரணம் தரு
6. அகம், புறம் என்பவற்றின் பொருள் என்ன?
7. அகச்சுட்டுக்கும் புறச்சுட்டுக்கும் உள்ள வேறுபா என்ன?

## பயிற்சி-1

1. பலகை, தட்டு, நாடு, மங்கை, கடவுள், தோட்டம் இவை புறச்சுட்டாக வருமாறு உதாரணம் தருக.
2. முருகன் இங்கு வந்தான். அவன் சில புத்தகங்களை எடு துச் சென்றான். அவை கிழிந்த புத்தகங்கள். இஃ எனக்குத் தெரியாது—இவற்றுள் அகச்சுட்டு எவை
3. கோடிட்ட இடங்களில் தகுந்த சுட்டுப் பெயர்க அமைத்து, அவற்றிலுள்ள சுட்டு இன்ன சுட்டு எ வும் குறிப்பிடுக:

———ஒரு நல்ல பையன். ——— ப் பையன் தினமும் கா யில் எழுந்திருப்பான். ———எழுந்திருப்பது நல்ல ——— நீ ஏன் செய்யக்கூடாது? ——— நடத் யைக் கண்டு எவரும் மெச்சுவர். ———நிலையை நீ அடைய வேண்டும். ——— ஒரு சகோதரி உண் ——— பெயர் கமலம் என்பது. ——— நல்லவ ——— இருவரும் பெற்றோர்க்கு அடங்கி நடப்பர்

3. [illegible], அகலம், இந்திரன், இரவு, உப்பளம், உரல் — இவற்றிலுள்ள அ, இ, உ என்ன எழுத்துக்கள்? ஏன்? அவை ஏன் அகச்சுட்டு புறச்சுட்டு ஆகா ?

## அக வினா, புற வினா

4. ஒரு பொருளை வினவுவது வினாவாம். (வினா— கேள்வி) இவ்வினாவும் அகவினா புறவினா என இரு வகைப்படும். சொல்லுக்கு உள்ளிருந்து வினவுவது அக வினாவாம்.

(உ-ம்) எவன்? ஏது ?

5. சொல்லுக்கு வெளியே இருந்து வினவுவது புற வினாவாம்.

(உ-ம்) எப்பையன் ? கந்தனா ?

குறிப்பு : (1) அக வினா எப்போதும் சொல்லுக்கு முன்னே நிற்கும். புற வினா சொல்லுக்கு முன்னும் பின்னும் நிற்கும்.

(உ-ம்) எவன் ? யாவன் ? — அக வினா சொல்லுக்கு முன்னே நிற்கிறது.

எப்பையன் — புற வினா சொல்லுக்கு முன்னே நிற்கிறது.

பையனா ? = பையன் + ஆ — புற வினா சொல்லுக்குப் பின்னே நிற்கிறது.

(2) எ, யா என்னும் எழுத்துக்கள், சொல்லுக்கு முதலில் அக வினாவாகவும், புற வினாவாகவும் வரும்.

(உ-ம்) எவன்? } ஏ, யா என்பன சொல்லுக்கு
யாது } முதலில் அகவினாவாய்வந்தன

எப்பையன்? } சொல்லுக்கு முதலில்
யாங்ஙனம்? } புறவினாவாய் வந்தன.

(3) ஆ, ஓ என்னும் வினா எழுத்துக்கள் சொல்லுக்கு ஈற்றில் புற வினாவாக மட்டும் வரும்.

(உ-ம்) கந்தனா? } ஆ, ஓ சொல்லுக்கு ஈற்றில்
முருகனோ? } புற வினாவாய் வந்தன.

(4) ஏ என்னும் வினா எழுத்து சொல்லுக்கு முன்னே அக வினாவாகவும், சொல்லுக்குப் பின்னே புற வினாவாகவும் வரும்.

(உ-ம்) ஏது? — சொல்லுக்கு முன் அகவினா
அவனே? — சொல்லுக்குப் பின்னே புற வினா.

## கேள்விகள்

1. வினாவாவது யாது?
2. வினா எழுத்து எத்தனை?
3. அவை எவை?
4. அக வினாவாவது யாது?
5. புற வினாவாவது யாது?
6. அக வினாவுக்கும் புற வினாவுக்கும் இரண்டிரண்டு உதாரணம் தருக.
7. எந்தெந்த எழுத்து அகவினாவாகவும் புற வினாவாகவும் வரும்?

8. புறவினவாக மட்டும் வரும் எழுத்துக்கள் எவை ?

9. முதலில் அகவினவாகவும் புற வினவாகவும் வரும் எழுத்துக்கள் எவை ?

10. அக வினவாக வராத எழுத்துக்கள் எவை ?

## பயிற்சி-2

1. எத்தாயர் ? எத்தந்தை? எம்மாடு ? ஊர் எது ? உற்றூர் யார் ? ஆவது உண்டே ? வெறும்பானை பொங்குமோ மேல் ? வள்ளல் வந்தனனா?—இவற்றுள் அக வின வாகவும், புற வினவாகவும் வந்தவை எவை ?

2. கோடிட்ட இடங்களில் அகவின புறவினச் சொற்களை அமைத்தெழுதுக :—

நீ ——— ? ——— கந்தன் ? ——— ப்பையன் நல்ல பையன் ? முருகன் ஏறும் வாகனம் ——— ? நேற்று ——— ? உனக்கு ——— இந்தப் பெட்டி ?

3. குலம், பணம், மடந்தை, வேல், மலை—இவற்றோடு புற வினவைச் சேர்த்து எழுதுக.

4. எக்கர், ஏற்றம், கஞ, அதோ, யாளி—இச்சொற்களில் உள்ள எ, ஏ, ஆ, ஓ, யா என்ன எழுத்துக்கள் ? ஏன் ?

## இன எழுத்துக்கள்

6. எழுத்துக்கள் உருவத்தாலும், ஓசையாலும் ஏறக்குறைய ஒன்றை ஒன்று ஒத்து வருவன இனமாம்.

7. உயிர் எழுத்துக்களில் அ ஆ வும், இ ஈ யும், உ ஊ வும், எ ஏ வும், ஒ ஓ வும் ஒன்றுக்கொன்று இனமாம்.

குறிப்பு : தமக்கென இனம் இல்லாத உயிர் எழுத்துக்கள் ஐ, ஔ என்பன. ஆனால், இவற்றில் ஐகாரத்திற்கு இகரமும் ஔகாரத்திற்கு உகரமும் இனமாகக் கொள்ள வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| (உ-ம்) | அ-ஆ | எ-ஏ | ஔ-உ |
| | இ-ஈ | ஐ-இ | |
| | உ-ஊ | ஒ-ஓ | |

8. மெய்யெழுத்துக்களில் கஙவும், சஞவும், டணவும், தநவும், பமவும், றனவும் ஒன்றுக்கொன்று இனமாம்.

| | | |
|---|---|---|
| (உ-ம்) | க-ங | த-ந |
| | ச-ஞ | ப-ம |
| | ட-ண | ற-ன |

குறிப்பு : இனம் இல்லாத மெய்யெழுத்துக்கள் இடையினமாகிய ய, ர, ல, வ, ழ, ள என்னும் ஆறுமாம். இவை ஒரே இனம்.

## கேள்விகள்

1. இனமாவது யாது ?
2. எவ்வெவ்வெழுத்துக்கள் ஒன்றுக்கொன்று இனமாம் ?
3. உயிர் எழுத்துக்களில் இனம் இல்லாத எழுத்துக்கள் எவை ? அவற்றிற்கு எவற்றை இன எழுத்தாகக் கொள்ள வேண்டும் ?
4. வல்லினத்திற்கு எவை இன எழுத்துக்கள் ?
5. இனம் இல்லாத மெய்யெழுத்துக்கள் எவை ?

## பயிற்சி-3

1. பின்வரும் எழுத்துக்களுக்கு இன எழுத்தைக் குறிப்பிடுக :—இ, உ, ஐ, ஔ, ப, ற.

2. பின் வருவனவற்றைத் திருத்தி, அவ்வாறு திருத்தியதற்குக் காரணமும் கூறுக :— மன்சள், கன்டம், பன்தல், மண்றம், வண்து, பூன்டு, வன்தான்.

## குற்றியலுகரம்

9. சாதாரணமாக உகரத்திற்கு மாத்திரை ஒன்று. அந்த மாத்திரையிற் குறைந்து வரும் உகரம் குற்றியலுகரமாம். குறுகிய ஓசையை உடைய உகரம் குற்றியலுகரம் (குறு + இயல் + உகரம்)

10. இக்குற்றியலுகரம் எப்போதும் சொல்லின் கடைசியில் வரும். அவ்வாறு வரும் உகரம் வல்லின மெய்களின்மேல் ஏறிய உகரமாக இருக்க வேண்டும். அவை கு, சு, டு, து, பு, று என்பன. க் + உ = கு, ச் + உ = சு, ட் + உ = டு, த் + உ = து ப் + அ = பு, ற் + உ = று.)

| | |
|---|---|
| (உ-ம்) சுக்கு | பந்து |
| பஞ்சு | அம்பு |
| துண்டு | கன்று |

குறிப்பு: மாணவர்கள் இவ்விடத்தில் ஒன்றைமனத்தில் நன்கு பதியவைத்துக்கொள்ளவேண்டும். அதாவதுஇந்தக் கு, சு, டு, து, பு, று என்னும் வல்லின மெய்யின்மேல் ஏறிய உகரமும், நகு,பசு, அடு என்பன போலத் தனிக்குற்றெழுத்தோடு வரக்கூடாது என்பது. அவ்வாறு வரும் உகரம் குற்றியலுகரம் ஆகாது.

### கேள்விகள்

1. 'குற்றியலுகரம்' என்பதற்குப் பொருள் என்ன ? இத்தொடரைப் பிரித்துக் காட்டுக.

2. குற்றியலுகரம் சொல்லில் எங்கே வரும்?

3. குற்றியலுகரம் ஏறி வரும் மெய் எழுத்துக்கள் எவை?

4. இயற்கையாக வரும் உகரத்திற்கும் குற்றியலுகரத்திற்கும் உள்ள வேறுபாடு என்ன?

5. எப்போது வல்லின மெய்யின்மேல் ஏறிய உகரம் குற்றியலுகரம் ஆகாது?

## பயிற்சி - 4

1. குற்றியலுகரத்திற்குப் பத்து உதாரணம் தருக.

2. பகு, முசு, விடு—இவற்றிலுள்ள உகரம் ஏன் குற்றியலுகரமாகாது?

## முற்றியலுகரம்

11. ஓசையில் முற்றுப்பெற்ற உகரம் முற்றியலுகரமாம் (முற்று + இயல் + உகரம்)

குறிப்பு: குற்றியலுகரம் அல்லாத உகரங்கள் எல்லாம் முற்றியலுகரமாம். அவை மெல்லின மெய்யின்மேல் ஏறிய உகரமும், இடையின மெய்யின்மேல் ஏறிய உகரமும், தனிக் குறிலையடுத்த வல்லின மெய்யின்மேல் ஏறிய உகரமுமாம்.

| | |
|---|---|
| (உ-ம்) தும்மு, நண்ணு | மெல்லின மெய்யின்மேல் ஏறிய முற்றியலுகரம். |
| கதவு, வாயு | இடையின மெய்யின்மேல் ஏறிய முற்றியலுகரம். |
| பசு, தடு | வல்லின மெய்யின்மேல் ஏறித் தனிக் குறிலையடுத்து வந்த முற்றியலுகரம். |

## கேள்விகள்

1. முற்றியலுகரமாவது யாது? 'முற்றியலுகரம்' என்னுந் தொடரைப் பிரித்துக் காட்டுக.
2. வல்லின மெய்யின்மேல் ஏறிய உகரம் எப்போது முற்றியலுகரமாகாது?

## பயிற்சி-5

கீழ் வருவனவற்றுள் எவை குற்றியலுகரம்? எவை முற்றியலுகரம்? ஏன்?

கரும்பு, திருமு, தாக்கு, துள்ளு, நுங்கு, உரிஞு, அம்பு, தாணு, மார்பு, ஒரு, நாலு, ஏழு, எள்ளு, நண்டு, பட்டு, கொடு, புகு, பசு, துரும்பு.

## குற்றியலிகரம்

12. குற்றியலுகரச் சொற்களோடு யகரம் வந்து புணரின், குற்றியலுகரம் குற்றியலிகரமாய்த் திரியும்.

(உ-ம்) வரகு + யாது = வரகியாது?
இன்று + யாம் = இன்றியாம்


## கேள்வி

குற்றியலிகரமாவது யாது?

## பயிற்சி-6

1. குற்றியலிகரத்திற்குப் பத்து உதாரணம் தருக.
2. கீழ்வருவனவற்றைப் புணர்த்தி எழுதுக:—

உணர்ந்து+யாம், பாக்கு+யாருடையது?


எழுத்து
சுட்டு
வினா
இனம்
குற்றிய லுகரம்
முற்றிய லுகரம்
குற்றிய லுகரம்
அகச்சுட்டு
புறச்சுட்டு
அகவினா
புறவினா

# II. சொல்

## சொல் அல்லது பதம்

1. பதம் இரண்டு வகைப்படும். அவை **பகாப் பதம், பகுபதம்** என்பன.

2. பகாப்பதமாவது, பகுதி முதலிய உறுப்புக்க ளாகப் பிரிக்க முடியாத நிலையில் வருவது.

(உ-ம்) நான், மாடு, நில்.

3. பகுபதமாவது, பகுதி முதலிய உறுப்புக்க ளாகப் பிரிக்கக்கூடிய பதம்.

(உ-ம்) பொன்னன் — பொன் + ன் + அன்
மதுரையான் — மதுரை + ய் + ஆன்

### கேள்விகள்

1. சொல்லுக்குரிய வேறு ஒரு பெயர் என்ன ?
2. பதம் எத்தனை வகைப்படும் ?
3. பகுபதம், பகாப்பதம் என்பவற்றை விளக்குக.
4. பகுபதத்தை எவ்வாறு பிரிக்க வேண்டும் ?

### பயிற்சி - 7

1. கீழ் வருவனவற்றுள் பகுபதம் பகாப்பதம் எவை ?

பழம், மரங்கள், ஆடு, செய்தான், வீடு, சித்திரையான், மண், மலையன், அண்ணன், மூக்கன்.

2. கீழ் வருவனவற்றை உதாரணத்திற் காட்டியுள்ளபடி பிரித்துக் காட்டுக :—

(உ-ம்) உண்டான் = உண் + ட் + ஆன்.

ஓதுவான், செய்வார், ஓடுகிறுள், நின்றுன், உண்பார், திருடுகின்றுன், நெய்தான், கண்டான்.

பதம்

| | |
|---|---|
| பகுபதம் | பகாப்பதம் |

## பகுபத உறுப்புக்கள்

4. பகுபதத்திற்குரிய உறுப்புக்கள் ஆறு. அவை பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி விகாரம் என்பன. அவற்றுள் இவ்வகுப்பில் பகுதி, விகுதி, இடைநிலைகளை மட்டும் கற்போம்.

5. பகுதியாவது, பகுபதத்தின் முதலில் நிற்கும் உறுப்பு.

(உ-ம்) கூனன் = கூன் + அன்
செய்க = செய் + க.

குறிப்பு: பகுபதத்தில் பெயர்ச்சொல் பகுதியாக வருமானுல், அது பெயர்ப்பகுபதம்; வினைச்சொல் பகுதியாக வருமானுல், அது வினைப்பகுபதம். வினைச்சொல்லில் உள்ள பகுதி கட்டளை இடுவது போல் வரும்.

(உ-ம்) சித்திரையான் (பெயர்ப் பகுபதம்)
சித்திரை + ய் + ஆன் —பெயர்ப் பகுதி.

வாழ்க (வினைப் பகுபதம்) வாழ் + க — வினைப்பகுதி.

6. விகுதியாவது, பகுபதத்தின் ஈற்றில் (முடிவில்) நிற்கும் உறுப்பு.

(உ-ம்) கூனன் — கூன் + அன்

செய்க — செய் + க

குறிப்பு : விகுதிகளாக வரக்கூடியவை அன், ஆன், அள் ஆள், அர், ஆர், து, வை, கள் முதலியன.

7. இடைநிலையாவது, பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் (நடுவில்) நிற்கும் உறுப்பாம்.

(உ-ம்) செய்வான் = செய் + வ் + ஆன்

செய்கிறான் = செய் + கிறு + ஆன்

குறிப்பு : வினை இடைநிலைகளாக வரக்கூடியவை த், ட், ற், இன், கிறு, கின்று, ப், வ் முதலியவை.

## கேள்விகள்

1. பகுபத உறுப்புக்கள் எத்தனை ?
2. அவை யாவை ?
3. பகுதியாவது யாது ?
4. பெயர்ப் பகுபதமாவது யாது ?
5. வினைப் பகுபதமாவது யாது ?
6. விகுதியாவது யாது ?
7. விகுதிகளாக வரக்கூடியவை எவை ?
8. இடைநிலையாவது யாது ?
9. வினை இடைநிலைகளாக வரக்கூடியவை எவை ?

## பயிற்சி - 8.

1. கீழ் வருவனவற்றிற்குப் பகுதி மட்டும் கூறுக :—
தோன்றினார், தாமரையாள், புகழினான், பாடினான், கேட்டார், கண்ணன், மலைகள், வாழ்கின்றன, எழும்பூரார், வலைஞன், தையான்.

2. மேற்காட்டிய சொற்களுக்கு விகுதி மட்டும் கூறுக.

3. கீழ் வருவனவற்றிற்கு இடைநிலை மட்டும் கூறுக.

செய்தான், கண்டான், நின்றாள், பேசினாள், ஓடுகிறாள், நெய்கின்றான், ஓதுவார், உண்பார்.

4. மேற்கண்ட சொற்களுக்குப் பகுதி, விகுதி, இடைநிலைகளைக் குறிப்பிடுக.

5. பெயர்ப் பகுபதத்திற்கு மூன்று உதாரணமும், வினைப் பகுபதத்திற்கு மூன்று உதாரணமும் தருக. (வெவ்வேறு விகுதிகளும் வெவ்வேறு இடைநிலைகளும் வருமாறு உதாரணம் தர வேண்டும்.

### பகுபத உறுப்புக்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பகுதி | விகுதி | இடைநிலை | சாரியை | சந்தி | விகாரம் |

## பெயர்ச்சொல்

8. பெயர்கள் பல பொருள்களுக்குப் பொதுவாகவும், ஒரு பொருளுக்கே சிறப்பாகவும் வரும். அவற்றை முறையே **பொதுப் பெயர், சிறப்புப் பெயர்** என்பர்.

(உ-ம்) பறவை — பறப்பனவற்றிற்கெல்லாம் அமைந்த பொதுப் பெயர்.

காக்கை — ஒருவகைப் பறவைக்கே உரிய சிறப்புப் பெயர்.

## கேள்விகள்

1. பெயர் எத்தனை வகைப்படும்?
2. அவை எவை?
3. பொதுப் பெயராவது யாது?
4. சிறப்புப் பெயராவது யாது?

1. பொதுப் பெயருக்கும் சிறப்புப் பெயருக்கும் பத்துப் பத்து உதாரணம் தருக.

2 கீழ் வருவனவற்றில் எவை பொதுப் பெயர்? எவை சிறப்புப் பெயர்?

மனிதன், பாலன், மீன், சுறு, குருவி, பறவை, செடி, மல்லிகை, பூ, கரடி, மிருகம், மதுரை, ஊர், கிராமம், பாலூர், வண்டி, மாட்டு வண்டி.

## வினையால் அணையும் பெயர்

9. ஒரு வினைமுற்று, பெயர்ச்சொல் தன்மை அடைந்து வேற்றுமை உருபுகளைப் பெற்று வருவது வினையாலணையும் பெயராம்.

(உ-ம்) வந்தான் — வினைமுற்று.
வந்தானை — வினையால் அணையும் பெயர்.

## கேள்விகள்

1. வினையால் அணையும் பெயராவது யாது?
2. வினையால் அணையும் பெயருக்குப் பத்துஉதாரணம் தருக.

1. கீழ் வருவனவற்றுள் எவை வினையால் அணையும் பெயர்கள் ?

கெடுவான் கேடு நினைப்பான். நன்கு படிப்பவன் தேர்வில் வெற்றி பெறுவான். நேற்று வந்தவனை இன்று கண்டேன். படிப்பவனை எவரும் விரும்புவர். வந்தவர்களுக்கு உபசாரம் செய்ய வேண்டும். ஓடிப்போனவனுக்கு ஒன்பதாம் மடத்தில் குரு.

2. கோடிட்ட இடங்களில் தகுந்த வினையால் அணையும் பெயர்களை அமைக்க :—

——— காமுறுவர். ——— இகழ்ச்சி அடையார்.

——— புல்லும் ஆயுதம் ——— சொல்லு.

வாய்க்கு ——— உளறுதே. ——— திருந்தச் செய்.

## அளவைப் பெயர்

10. அளவைக் குறிப்பது அளவைப் பெயர். அது நான்கு வகைப்படும். அவை **எண்ணல் அளவைப் பெயர், எடுத்தல் அளவைப் பெயர், முகத்தல் அளவைப் பெயர், நீட்டல் அளவைப் பெயர்** என்பவை.

11. எண்ணல் அளவைப் பெயர்கள் என்பன எண்ணைக் குறித்து வருவனவாம்.

(உ-ம்) ஒன்று, இரண்டு, நூறு, ஆயிரம்.

12. எடுத்தல் அளவைப் பெயர்களாவன : நிறுக்கப்படும் அளவைக் குறித்து வருவனவாம்.

(உ-ம்) பலம், சேர், வீசை, மணங்கு.

13. முகத்தல் அளவைப் பெயராவது முகக்கும் அளவைக் குறிப்பதாம்.

(உ-ம்) ஆழாக்கு, படி, கலம், மரக்கால்.

14. நீட்டல் அளவைப் பெயராவது, நீட்டி அளக்கும் அளவைக் குறிப்பதாம்.

(உ-ம்) அடி, அங்குலம், கெஜம், மைல்.

## கேள்விகள்

1. அளவாவது யாது?
2. அஃது எத்தனை? அவை எவை?
3. எடுத்தலளவைக்கு மற்றொரு பெயர் என்ன?
4. ஒவ்வோர் அளவைப் பெயரையும் விளக்குக.

## பயிற்சி-11

1. கோடிட்ட இடங்களில் தகுந்த பெயர்களை அமைத்து அவை இன்ன பெயர் எனவும் குறிப்பிடுக :—

தலைக்கு ——— அஞ்ஞ கொடு. இந்த மாடு ——— ——— பால் கொடுக்கும். நான் ——— — ——— நடந்தேன். ஒரு ——— மிட்டாய் கொடு. ——— ——— எண்ணெய் என்ன விலை? இரண்டு ——— கொண்டது ———. ஒரு ——— துணி வாங்கு.

2. காதம் இருபத்து நான்கு, நாழி அரிசி, கலைகள் அறுபத்து நான்கு, பலம் பைசா — இவற்றுள் எந்தெந்த அளவுப் பெயர்கள் வந்துள்ளன?

3. ஒவ்வோர் அளவைக்கும் ஐந்து உதாரணம் தருக.

## பலவகைப் பெயர்கள்

15. இதுகாறும் கூறப்பட்டு வந்த பெயர்களே அன்றி முதல் பாரத்தில் படித்த சுட்டு, வினா, திணை, பால், எண், இடம் முதலியவற்றால் வந்த பெயர்கள் அவ்வப்பெயர்களைப் பெறும்.

| | | | |
|---|---|---|---|
| (உ-ம்) | அவன் | சுட்டுப் பெயர் | |
| | அது | வினாப் பெயர் | |
| | இடையன் | ஆண் பால் பெயர் | உயர்திணைப் பெயர்கள் |
| | இடைச்சி | பெண் பால் பெயர் | |
| | இடையர் | பலர் பால் பெயர் | |
| | அது | ஒன்றன் பால் பெயர் | அஃறிணைப் பெயர்கள் |
| | அவை | பலவின் பால் பெயர் | |
| | குதிரை | ஒருமைப் பெயர் | |
| | குதிரைகள் | பன்மைப் பெயர் | |
| | நான் | தன்மைப் பெயர் | |
| | நீ | முன்னிலைப் பெயர் | |
| | அவன் | படர்க்கைப் பெயர் | |

### கேள்விகள்

பெயர்களின் வகைகள் யாவை ?

### பயிற்சி-12

1. கீழ் வருவன என்னென்ன பெயர்கள் ?
   சிவன், மண், கோமான், பொன்னி, தேவிமார், யாம், நீவிர்.

2. கீழ்வருவனவற்றிற்கு எதிரான பாற்பெயர்கள் கூறுக :
   பாங்கன், தோழன், குறத்தி, குசத்தி, கண்ணன், பார்ப்பனன், பாக்கியவதி, வேலைக்காரன், அம்மை, தமக்கை, நம்பி.

## வேற்றுமை

16. வேற்றுமை என்பது இன்னது என்பதும், அதன்வகை இத்தனை என்பதும், உருபுகள் இவை என்றும் படித்தீர்கள். இப்போது இவ்வேற்றுமை உருபுகள் மறைந்தும் மறையாமலும் வழங்குவதைப் படிப்பீராக.

17. ஒரு தொடரில் வேற்றுமை உருபு மறைந்து வருவது **வேற்றுமைத் தொகையாம்.** எந்த வேற்றுமை மறைந்து வருகிறதோ, அந்த வேற்றுமையால் அத்தொகை பெயர் பெறும்.

குறிப்பு: முதல் வேற்றுமைக்கும் எட்டாம் வேற்றுமைக்கும் உருபு இல்லாமையால், அவற்றில் தொகையும் இல்லை.

| | | |
|---|---|---|
| (உ-ம்.) | பால் குடி | இரண்டாம் வேற்றுமைத்தொகை |
| | வாள் வீசினான் | மூன்றாம் ,, ,, |
| | கூலி வேலை | நான்காம் ,, ,, |
| | சென்னை வடக்கு | ஐந்தாம் ,, ,, |
| | என் குடை | ஆறாம் ,, ,, |
| | வீடு நுழைந்தான் | ஏழாம் ,, ,, |

18. வேற்றுமை விரியாவது, வேற்றுமை உருபு வெளிப்பட்டு வருவது.

| | | |
|---|---|---|
| (உ-ம்.) | பாலைக்குடி — | இரண்டாம் வேற்றுமை விரி |
| | வாளால் வீசினான் — | மூன்றாம் ,, |
| | கூலிக்கு வேலை — | நான்காம் ,, |
| | சென்னையின் வடக்கு — | ஐந்தாம் ,, |
| | எனது குடை — | ஆறாம் ,, |
| | வீட்டில் நுழைந்தான் — | ஏழாம் ,, |

## கேள்விகள்

1. வேற்றுமைத் தொகையாவது யாது?
2. வேற்றுமை விரியாவது யாது?
3. எவ்வெவ்வேற்றுமைகள்தொகையாகவாரா?ஏன்?

## பயிற்சி-13.

1. கீழ் வருவனவற்றுள் இவை தொகை, இவை விரி எனக் குறிப்பிடுக :—

மன்னனின் கற்ருேன் சிறப்புடையன், என் செல்வமே, உள்ளத்தின் உள்ளே, கண்ணில் கருமணி, அமரர் ஏறு, நல்லாரோடு இசைந்திலேன், வழித்துணை, நோய் மருந்து, தோடு உடைய செவியன், விடை ஏறி, மதி சூடி, காடுடைய சுடலை, மலரால் நாளும் பணிந்து.

2. கீழ் வருவனவற்றுள் தொகைக்கு விரியும், விரிக்குத் தொகையும் கூறுக :—

எங்களது பள்ளிக்கூடம், சென்ற வாரத்தில், தேர்வில் தேறினேன், அச்சம் பெற்றேன், புத்தகங்களைக் கொணர்வேன், சிந்தை வை.

3. காடு, சிதம்பரம், வேல், வீடு—இச்சொற்களோடு 3, 4, 6, 7 இந்த வேற்றுமை உருபுகள் தொகையாகவும் விரியாகவும் வர உதாரணம் தருக.

## வேற்றுமை உருபு ஏற்கும்போது திரியும் பெயர்கள்

19. **யான்** என்னும் தன்மை ஒருமைப் பெயர் வேற்றுமை உருபை ஏற்கும்போது **என்** எனத் திரியும்.

(உ-ம்) யான்+ஐ = என்னை
யான்+ஆல் = என்னால்
யான்+கு = எனக்கு
யான்+இன் = என்னின்
யான்+அது = எனது
யான்+இடம் = என்னிடம்

20. **யாம், நாம்** என்னும் தன்மைப் பன்மைப பெயர்கள், **எம்** எனவும் **நம்** எனவும் முறையே திரியும்.

(உ-ம்) யாம்+ஐ = எம்மை
யாம்+ஒடு = எம்மோடு
யாம்+கு = எமக்கு
யாம்+இல் = எம்மில்
யாம்+அது = எமது
யாம்+கண் = எம்கண்

(உ-ம்) நாம்+ஐ = நம்மை
நாம்+ ஒடு = நம்மோடு
நாம்+ கு = நமக்கு
நாம்+ தின் = நம்மின்
நாம்+ அது = நமது
நாம்+ இடம் = நம்மிடம்

21. **நீ** என்னும் முன்னிலை ஒருமைப் பெயர் வேற்றுமை உருபை ஏற்கும்போது **நின்** என்றாகிலும், **உன்** என்றாகிலும் திரியும்.

| | | | | |
|---|---|---|---|---|
| (உ-ம்) | நீ + ஐ | = | நின்னை | உன்னை |
| | நீ + ஆல் | = | நின்னால் | உன்னால் |
| | நீ + கு | = | நினக்கு | உனக்கு |

| | | | |
|---|---|---|---|
| நீ + இன் | = | நின்னின் | உன்னின் |
| நீ + அது | = | நினது | உனது |
| நீ + இடம் | = | நின்னிடம் | உன்னிடம் |

22. **நீர்** என்னும் முன்னிலைப் பன்மைப் பெயர் வேற்றுமை உருபை ஏற்கும்போது **நும்** எனவும், **உம்** எனவும் திரியும்.

| | | | | |
|---|---|---|---|---|
| (உ-ம்) | நீர் + ஐ | = | நும்மை | உம்மை |
| | நீர் + ஆல் | = | நும்மால் | உம்மால் |
| | நீர் + கு | = | நுமக்கு | உமக்கு |
| | நீர் + இன் | = | நும்மின் | உம்மின் |
| | நீர் + அது | = | நுமது | உமது |
| | நீர் + இடம் | = | நும்மிடம் | உம்மிடம் |

23. **தான்** என்னும் படர்க்கை ஒருமைப் பொதுப் பெயர் வேற்றுமை உருபை ஏற்கும்போது **தன்** எனத் திரியும்.

| | | | |
|---|---|---|---|
| (உ-ம்) | தான் + ஐ | = | தன்னை |
| | தான் + ஆல் | = | தன்னால் |
| | தான் + கு | = | தனக்கு |
| | தான் + இன் | = | தன்னின் |
| | தான் + அது | = | தனது |
| | தான் + இடம் | = | தன்னிடம் |

24. **தாம்** என்னும் படர்க்கைப் பன்மைப் பொதுப்பெயர் வேற்றுமை உருபை ஏற்கும்போது **தம்** எனத் திரியும்.

| | | | |
|---|---|---|---|
| (உ-ம்) | தாம் + ஐ | = | தம்மை |
| | தாம் + ஆல் | = | தம்மால |

தாம்+கு = தமக்கு
தாம்+அன் = தம்மின்
தாம்+அது = தமது
தாம்+இடம் = தம்மிடம்

## கேள்விகள்

1. தன்மை ஒருமைப்பெயர் எது? அது வேற்றுமை உருபை ஏற்கும்போது எப்படித் திரிந்து வரும்?

2. தன்மைப் பன்மைப் பெயர்கள் எவை? அவை எவ்வாறு வேற்றுமை உருபை ஏற்கையில் திரிந்து வரும்?

3. முன்னிலை ஒருமைப்பெயர் எது? அது வேற்றுமை உருபை ஏற்கையில் எவ்வாறு திரிந்து வரும்?

4. முன்னிலைப் பன்மைப்பெயர் எது? அது வேற்றுமை உருபை ஏற்கையில் எவ்வாறு திரிந்து வரும்?

5. படர்க்கை ஒருமைப் பொதுப்பெயர் எது? அது வேற்றுமை உருபை ஏற்கையில் எப்படித் திரிந்து வரும்?

6. படர்க்கைப் பன்மைப் பொதுப்பெயர் எது? அது வேற்றுமை உருபை ஏற்கையில் எப்படித் திரிந்து வரும்?

## பயிற்சி-11

பின் வருவனவற்றைப் பிரித்துக் காட்டுக :— நமது, தன் மேல், நின்னால், எனக்கு, தம்மிடம், உம்முடன், எங்களோடு, நின்னை, என்னை, தனக்கு.

## வினைச்சொல்

---

25. பெயர்ச் சொல்லின் தொழிலைக் காட்டுவது வினைச் சொல்லாம். இது பலவகைப்படும். அவற்றுள் சில **செய்வினை, செயப்பாட்டுவினை, தன்வினை பிறவினை** என்பன.

26. செய்வினையாவது, கருத்தா செய்யும் செய்கையை (வினையை) நேரே உணர்த்துவது.

(உ-ம்) நான் பாடத்தை எழுதுகிறேன்.
கமலம் கோலம் போடுகிருள்.

27. செயப்பாட்டு வினையாவது எழுவாயின் செயலைச் செயப்படுபொருள் ஏற்று வருவதை உணர்த்துவது.

(உ-ம்) பாடம் என்னுல் எழுதப்பட்டது.
கோலம் கமலத்தால் போடப்பட்டது.

குறிப்பு : (1) செயப்பாட்டு வினையின் வினைச்சொல் படு என்னும் விகுதியைப் பெற்று வரும்.

(2) செய்வினையில் எழுவாயாக வருவது செயப்பாட்டு வினையில் மூன்ரும் வேற்றுமை உருபை ஏற்று வரும். செய்வினையில்செயப்படுபொருளாக வருவதுசெயப்பாட்டுவினையில் எழுவாயாக வரும்.

(உ-ம்) குமரன் குளத்தைக் கண்டான்.
குளம் குமரனுல் காணப்பட்டது.

## கேள்விகள்

1. வினைச்சொல்லாவது யாது ?
2. செய்வினையாவது யாது ?
3. செயப்பாட்டு வினையாவது யாது ?
4. செயப்பாட்டு வினையில் வினைச்சொல் எவ்வாறு வரும் ?
5. செய்வினை வாக்கியத்திற்கும் செயப்பாட்டு வினை வாக்கியத்திற்கும் உள்ள பேதம் என்ன ?

## பயிற்சி-15

1. நட, வா, மடி, விடு, கூ—இவ்வினைகள் செய்வினை, செயப்பாட்டு வினைகளாக வரும்படி உதாரணம் எழுதுக.

2. கீழ்வரும் செய்வினை வாக்கியங்களைச் செயப்பாட்டு வினை வாக்கியங்களாக மாற்றுக :—

   கந்தன் வண்டியை ஓட்டினான். குயவன் பானைகளைச் செய்கிறான். உபாத்தியாயர் நாளைக்குக் கணக்கைப் போதிப்பார். நண்டு சேற்றை வாரி அடிக்கிறது.

3. கீழ்வரும் செயப்பாட்டு வினை வாக்கியங்களைச் செய்வினை வாக்கியங்களாக மாற்றுக :—

   கூடம் என்னால் மெழுகப்பட்டது. பேனா உன்னால் வாங்கப்பட்டது. பலகை குழந்தையால் உடைக்கப்பட்டது. வேலனால் வேலை செய்யப்பட்டது. நாடு அரசர்களால் காக்கப்படுகிறது.

4. கீழ்வருவனவற்றுள் செய்வினை, செயப்பாட்டு வினைகளைக் குறிப்பிடுக :—

   நடத்தப்பட்டது, நடந்தான், வருவான், தேய்க்கப்பட்டது, நடித்தான், ஓதப்பட்டது.

## இடைச்சொல்

28. வேற்றுமை உருபுகளும், விகுதிகளும், இடைநிலைகளும், வினா எழுத்துக்களும், சுட்டெழுத்துக்களும் இடைச்சொற்களாகும்.

(உ-ம்) முருகனை = முருகன் + ஐ—வேற்றுமை உருபு
செய்தான் = செய் த் + ஆன்—விகுதி
செய்தான் = செய் + த் + ஆன்—இடைநிலை
எத்தட்டு = எ + தட்டு—வினா
அப்பையன் = அ + பையன்—சுட்டு

29. ‘மற்று, தான்’ என்னும் அசைச் சொற்களும் இடைச்சொற்களாக வரும்.

(உ-ம்) மற்றொரு பொருள்
அவனேதான் செய்தான்.

### கேள்விகள்

1. எவை எவை இடைச் சொற்களாக வரும்?
2. இடைச்சொற்களாக வரும் அசைச் சொற்கள் எவை?

### பயிற்சி-16

கீழ்வருவனவற்றில் எவை இடைச்சொற்கள்?

முருகனுக்கு, உண்பார்கள், எந்தக் கடை? இப்பலகை, காட்டில், அந்த வீடு, யார் வந்தவர்? கந்தனின் பெரியவன், மற்றுங்கே பசும்புல், எவன்தான் செய்வான்?

## உரிச்சொல்

30. உரிச் சொல் இரண்டு வகை. அவை **பெயர் உரிச்சொல், வினை உரிச்சொல்** என்பன.

31. பெயர் உரிச்சொல் பெயரை அடுத்து வருவது.

(உ-ம்) உறு மீன், நனி பேதை.

32. வினை உரிச்சொல் வினைச் சொல்லை அடுத்து வருவது.


(உ-ம்) நனி தின்ருன், சாலப் பேசினுன்.

### கேள்விகள்

1. உரிச்சொல் எத்தனை வகை ?
2. அவை எவை ?
3. பெயர் உரிச்சொல்லாவது யாது ?
4. வினை உரிச்சொல்லாவது யாது ?

### பயிற்சி-17

1. ஊதினுன், பொருள், மகிழ்ந்தான், நாகரிகம்—இவற்ருேடு தகுந்த உரிச்சொற்களைச் சேர்த்து, அவை என்ன உரிச்சொல் எனவும் குறிப்பிடுக.
2. தவப் பெரிது, கழி உவகை, நனி பேசினுன், உறுமீன்—இவற்றுள் எவை உரிச்சொற்கள் ? அவை என்ன உரிச்சொற்கள் ?


சொல்
பெயர்ச்சொல்
வினைச்சொல்
இடைச்சொல்
உரிச்சொல்
பெயர்
வினை
பொதுப் பெயர்
சிறப்புப் பெயர்
வினையால் அணையும் பெயர்
அளவைப்பெயர்
எண்ணல் அளவை
எடுத்தல் அளவை
முகத்தல் அளவை
நீட்டல் அளவை
செய்வினை
செயப்பாட்டு வினை
தன்வினை
பிறவினை

# III. புணர்ச்சி

## குற்றியலுகரப் புணர்ச்சி

1. நிலைமொழி ஈற்றில் குற்றியலுகரம் இருந்து வருமொழி முதலில் உயிர் எழுத்து வந்தால், குற்றிய லுகரம் நீங்கி நின்ற மெய்யோடு வந்த உயிர் சேர்ந்து புணரும்.

(உ-ம்) பந்து (உ)+ஆடினன்
பந்(த்+ ஆ)டினன் = பந்தாடினன்
ஓடு(உ)+எடுத்தான்
ஓ(ட்+எ)டுத்தான்= ஓடெடுத்தான்

2. நிலைமொழி ஈற்றில் முற்றியலுகரம் இருந்து வருமொழி முதலில் உயிர் எழுத்து வந்தாலும், மேற் சொன்னவாறு சேர்ந்து புணரும்.

(உ-ம்) கதவு (உ) + அசைந்தது
கத(வ்+அ) சைந்தது = கதவசைந்தது
புறவு (உ)+ஓடியது
புற(வ்+ஓ) டியது = புறவோடியது

குறிப்பு: பல இடங்களில் முற்றியலுகரம் கெடாமல் புணர்வதும் உண்டு.

(உ-ம்) மழு + ஆயுதம் = மழுவாயுதம்
பசு + அழகு = பசுவழகு

## கேள்விகள்

1. குற்றியலுகரம் உயிர் வரும்போது எவ்வாறு புணரும் ?
2. முற்றியலுகரம் உயிர் வருகையில் எப்படிப் புணரும் ?
3. உகரங் கெடாது புணரும் இடம் எது ?

## பயிற்சி-18

1. கீழ்வருவனவற்றைப் பிரித்துப் புணர்ச்சி விதி கூறுக::

மாடெங்கே ? இஃதேன் இங்கு வந்தது ? மார்பகலம் போழ்தாயிற்று, நாடாண்டான்.

2. கீழ்வருவனவற்றைப் புணர்த்தி எழுதுக :—

ஓடு+எடுத்தான், பாக்கு+அறுத்தான், நுங்கு + உண்டான், இலகு+ஒளி, நடு+ஊர், செலவு + ஆயிற்று.

3. வல்லின மெய்யோடு வருகின்ற குற்றியலுகரத்தின் முன் வல்லின மெய் வந்து புணர்ந்தால், அம் மெய் மிகுந்தே வரும்.

(உ-ம்) பட்டு + துணி = பட்டுத் துணி
கச்சு + பட்டை = கச்சுப் பட்டை

4. வல்லின மெய்யோடு வராமல் மற்றைய மெய்யெழுத்துக்களோடு வரும் குற்றியலுகரத்திற்கு முன் வல்லினம் வந்தால் மிகாது புணரும்.

(உ-ம்) நுங்கு + தின்றான் = நுங்கு தின்றான்.
போழ்து + போயிற்று = போழ்து போயிற்று.

5. மெய்யெழுத்துக்களோடு வராத குற்றிய லுகரத்திற்குப் பின்னும் வல்லினம் மிகாது.

நாடு + கடந்தான் = நாடு கடந்தான்
அலகு + பெரியது = அலகு பெரியது

குறிப்பு : அங்கு, இங்கு, எங்கு என்னும் இடப் பொருளை உணர்த்தி வரும் குற்றியலுகரத்திற்குப்பின் வல்லினம் மிகும்.

(உ-ம்) அங்கு + சென்றான் = அங்குச் சென்றான்.
இங்கு + கண்டான் = இங்குக் கண்டான்.
எங்கு + போனாய் = எங்குப் போனாய் ?

## கேள்விகள்

1. எந்தக் குற்றியலுகரத்திற்குப் பின் வல்லினம் மிகும் ?
2. எந்தக் குற்றியலுகரத்திற்குப் பின் வலி மிகாது ?
3. இடப் பொருளை உணர்த்தும் சொற்கள் எவை? அவற்றின் பின் வல்லினம் என்ன ஆகும் ?

## பயிற்சி-19

1. கீழ் வருவன புணர்ந்தமைக்குக் காரணம் என்ன ?

அங்குக் கண்டேன், இங்குக் கண்டேன், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, கட்டுச்சோறு, வந்துபோனான், சோறு தின்றான், கயிறு திரிப்பான்.

2. கீழ் வருவனவற்றைப் புணர்த்தி விதி கூறுக :—

நாட்டு + காவல், மருந்து + புட்டி, சிறிது + போழ்து சிறிது + தின்றான், பாடு + பட்டான்.

## வல்லினம் மிகும் இடங்கள்

6. அந்த, இந்த, எந்த என்னும் சுட்டுவினாத் திரி சொற்களுக்குப் பின்வரும் வல்லினம் மிகும்.

(உ-ம்) அந்த + கடிதம் = அந்தக் கடிதம்
இந்த + பெட்டி = இந்தப் பெட்டி
எந்த + தட்டு = எந்தத் தட்டு ?

7. அகர இகர ஈற்று வினைஎச்சத்தின் பின் வலி மிகும்.

(உ-ம்) படிக்க + சென்றான் + படிக்கச் சென்றான்.
தேடி + கண்டான் + தேடிக் கண்டான்.

### கேள்விகள்

1. சுட்டும் வினாவும் திரிந்த சொற்கள் எவை ?
2. அச்சொற்கள்வல்லினத்தோடுபுணர்கையில்என்ன நேரிடும் ?
3. எந்த ஈற்று வினை எச்சத்தின்பின் வலி மிகும் ?

### பயிற்சி-20

1. கீழ்வருவனவற்றைப் புணர்த்தி விதி கூறுக :—

அந்த + காணி, எந்த + பாடல், இந்த + துணி, ஓடி + போ, எடுக்க + சொல்.

2. கீழ்வருவன புணர்ந்திருக்கின்றமைக்கு விதி என்ன ?

இருக்கச் சொன்னான், ஆடப் போனான், நடக்கக் கற்பி நாடிச் செல்.

## வல்லினம் மிகா இடங்கள்

8. ஆ, ஏ, ஓ, என்னும் வினா ஈற்றுச் சொல் முன் வரும் வல்லினம் மிகாது.

(உ-ம்) அவனா + செய்தான் = அவனா செய்தான்?
அவனே + கொன்றான் = அவனே கொன்றான்?
அவனோ + தந்தான் = அவனோ தந்தான்?

9. விளிப்பெயர் முன்வரும் வல்லினம் மிகாது.

(உ-ம்) தம்பீ + கொடு = தம்பீ கொடு.
அண்ணா + தா = அண்ணா தா

10. பெயரெச்சத்தின் முன்வரும் வலி மிகாது.

(உ-ம்) வந்த + பையன் = வந்த பையன்
சென்ற + காடு = சென்ற காடு

11. 'படி' என்னும் இடைச்சொல் வினைச்சொல் லோடு வருகையில் அதன் முன்வரும் வல்லினம் மிகாது.

(உ-ம்) வரும்படி + சொன்னான் = வரும்படி சொன்னான்
செய்யும்படி + கேட்டான் = செய்யும்படி கேட்டான்

குறிப்பு : 'படி' என்னும் இடைச்சொல் அ, இ, எ என்னும் சுட்டு வினாவோடு வருகையில் அதன் முன் வரும் வல்லினம் மிகும்.

(உ-ம்) அப்படி + போ = அப்படிப் போ
இப்படி + செய் = இப்படிச் செய்.
எப்படி + கண்டாய் = எப்படிக்கண்டாய்

## கேள்விகள்

1. வல்லினம் எங்கெங்கு மிகாது ?

2. ' படி ' என்னும் இடைச்சொல்லின் முன் எப்பொழுது வலி மிக்கு வரும் ? எப்பொழுது மிகாது வரும் ?

## பயிற்சி - 21

1. கந்தனை + சென்றான் ? முருகனோ + போனான்? நாயோ தக்கியது ? ஐயா + தாரும், நடந்த + பையன், பார்க்கும்படி + சொல்—இவற்றைப் புணர்த்தி விதி கூறுக.

2. 'படி' என்னும் சொல்லுக்குப் பின் வலி மிக்கும் மிகாதும் வருதற்கு மும்மூன்று உதாரணம் தருக.

## மகர ஈற்றுப் புணர்ச்சி

12. நிலைமொழி ஈற்றில் மகரமெய் இருந்து வருமொழி முதலில் உயிர் எழுத்து வந்தால், மகர மெய்யோடு உயிர் சேரினும் சேரும் ; அன்றி, மகரம் கெட்டு வகரமெய் தோன்றிப் புணரினும் புணரும்.

(உ-ம்) மரம் + ஏறு = மரமேறு (மெய்யோடு உயிர் புணர்ந்தது.)

மரம் + அடி = மரவடி (மகரம் கெட்டு வகரம் தோன்றிப் புணர்ந்தது.)

13. மகர மெய்யை ஈற்றில் பெற்ற சொல்லின் முன் வல்லினம் வரின், மகரம் கெட்டு, வந்த எழுத்தே

மிகினும் மிகும்; மகரம் வந்த எழுத்தின் இன எழுத்தாகத் திரியினும் திரியும்.

(உ-ம்) மரம்+கிளை = மரக்கிளை (மகரம் கெட்டு வந்த எழுத்து மிகுந்தது)

மரம்+செடி = மரஞ்செடி (மகரம் வந்த எழுத்தின் இன எழுத்தாகத் திரிந்தது)

14. மகர ஈற்றுச் சொற்களின் முன் மெல்லினமும் இடையினமும் வரின், மகரம் கெடும்.

(உ-ம்) மரம்+நாய் மரநாய்
மரம்+வேர் = மரவேர் } மகரம் கெட்டது.

### கேள்விகள்

1. மகர ஈற்றுச் சொல் வருமொழி முதலில் உயிர் வரின் எவ்வெவ்வாறு புணரும்?

2. வல்லினம் வரின் எவ்வெவ்வாறு புணரும்?

3. மெல்லினமும் இடையினமும் வரின் எவ்வாறு புணரும்?

### பயிற்சி-22

கீழ் வருவனவற்றைப் பிரித்துப் புணர்ச்சி விதியும் கூறுக:—

பலமிலான், சலங்கொண்டான், மரப்பலகை, நிலவேர் சீல நெஞ்சினன், தவவொழுக்கம்.

# IV. பொது

## சொல்லிலக்கணம் கூறுதல்

1. சொல்லிலக்கணம் கூறுதலாவது, ஒரு தொடரில் உள்ள ஒவ்வொரு சொல்லுக்கும் இலக்கணம் கூறுதலாம். அதாவது, பெயர்ச் சொல்லுக்குத் திணை, பால், எண், இடம், வேற்றுமைகளையும் முடிபையும் வினைச்சொல்லுக்குத் திணை, பால், எண், இடம், வினை, வகை, காலம் ஆகிய இவற்றையும் கூறுவதாம்.

(உ-ம்) முருகன் வள்ளியைக் கண்டான்.

முருகன் — பெயர்ச்சொல், உயர்திணை, ஆண் பால், ஒருமை, படர்க்கை, முதல் வேற்றுமை, கண்டான் என்னும் பயனிலைக்கு எழுவாய் வந்துள்ளது.

வள்ளியை—பெயர்ச் சொல், உயர்திணை, பெண்பால், ஒருமை, படர்க்கை, இரண்டாம் வேற்றுமை, கண்டான் என்னும் ' பயனிலைக்குச் செயப்படுபொருளாய் வந்துள்ளது.

கண்டான் — வினைமுற்று, செய்வினை, இறந்த காலம், உயர்திணை, ஆண் பால், ஒருமை, படர்க்கை, 'முருகன்' என்னும் எழுவாய்க்குப் பயனிலையாயிற்று.

### கேள்விகள்

1. சொல்லிலக்கணம் கூறுதலாவது யாது?
2. பெயர்ச் சொல்லுக்கும் வினைச்சொல்லுக்கும் எவ்வெவற்றைக் குறிப்பிட வேண்டும்?

## பயிற்சி-23

அரசன் ஆலயம் கட்டினுன். நான் பள்ளிக்கூடம் போகிறேன். நீ என்ன செய்கிருய்? பார்வதி பாட்டுப் பாடுவாள். மாமரம் கொத்துக் கொத்தாய்க் காய்த்திருக்கிறது—இவற்றிற்குச் சொல்லிலக்கணம் கூறுக.

## இடையின ரகரமும் வல்லின றகரமும்

2. மாணவர்கள் ர், ற், என்னும் எழுத்துக்களைச் சரியாக உபயோகப்படுத்துவதில்லை. ர் என்னும் எழுத்து ஒரு சொல்லுக்குக் கடைசியில் வரும். ற் என்னும் எழுத்துச் சொல்லுக்குக் கடைசியில் வராது.

(உ-ம்) தேர்
அவற்—தவறு
அவர்—சரி

3. ர் என்னும் எழுத்துக்குப் பிறகு க், ச், த், ப் என்னும் மெய்கள் வரும்; ற் என்னும் எழுத்துக்குப் பின்னே வராது.

| | |
|---|---|
| (உ-ம்) ஈர்க்கு | செயற்கை |
| தேர்ச்சி | பயிற்சி |
| பார்த்தல் | வெற்பு |
| பயிர்ப்பு | கற்பு |

குறிப்பு: ர் என்னும் எழுத்து இடையின ரகரம் என்றும், ற் என்னும் எழுத்து வல்லின றகரமென்றும் உணர்க. பெரிய றகரம் சிறிய ரகரம் என்று சொல்லுதல் கூடாது.

## கேள்விகள்

1. ரகர றகர மெய்களுக்குரிய பெயர் என்ன ?
2. ரகர றகர மெய்களின் தன்மை என்ன ?

## பயிற்சி-24

கீழ் வருவனவற்றைத் திருத்தி, அவ்வாறு திருத்தியதற்குக் காரணமும் கூறுக :—

இயற்க்கை விற்க்கப்படும், நாற்க்காலி, தயிர்குடம், தேர்தட்டு, நார்பெட்டி, வார்சேணம், தோர்கருவி, ஏற்ப்பாடு, காற்ப்பங்கு, சொற்ச் சோர்வு.

## அன்னுவயம்

4. பாட்டில் சொற்கள் நேராக பொருள் கொள்ளும்படி அமைவதில்லை. முன்னே இருக்கவேண்டிய சொற்கள் பின்னேயும், பின்னிற்கவேண்டிய சொற்கள் முன்னேயும் அமைந்து வரும். சொற்கள் முன் பின்னாக இருப்பின், அவற்றைப் பொருளுக்கு ஏற்ப கொண்டு கூட்டி முடிக்க வேண்டும். அவ்வாறு செய்வதை இலக்கணத்தில் அன்னுவயம் என்பர்.

(உ-ம்) 'நன்றி மறப்பது நன்று; அன்று' சொற்கள் நேராக நின்று பொருள் தருகின்றன.

நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்— இதை 'நல்லொழுக்கம் நன்றிக்கு வித்தாகும்' என்று கொண்டு கூட்டிப் பொருள்படுத்த வேண்டும்.

## கேள்விகள்

1. பாடல்களில் சொற்கள் எவ்வெம்முறையில் நிற்கும்?

2. 'அன்னுவயம்' என்பது என்ன?

## பயிற்சி-25

கீழ் வருவனவற்றை அன்னுவயப்படுத்தி எழுதுக :—

அகர முதல எழுத்தெல்லாம், ஆதிபகவன் முதற்றே உலகு, கற்றதனுல் ஆய பயன் என், வால் அறிவன் நல்தாள் தொழாஅர் எனின், குணமிலவே எண் குணத்தான் தாளை வணங்காத் தலை, பிறவிப் பெருங்கடல் நீந்தார் இறைவனடி சேராதார்.

## நிறுத்தக் குறிகள்

5. , இக்குறிக்குக் காற்புள்ளி என்பது பெயர். இதை ஆங்கிலத்தில் 'கமா' (Comma) என்பர். இக் குறியிட்ட இடத்தில் ஒரு முறை கண் இமைக்கும் நேரம் நிறுத்த வேண்டும். வினை எச்சத்திற்குப் பின் னும், ஆனுல் என்பதற்குப் பின்னும், பெயர்கள் அடுக்கிவரும் பொழுதும் இக்குறி இட வேண்டும்.

(உ-ம்) நீ அவ்வாறு செய்யின், உனக்கு ஓர் ஆபத்தும் நேராது.

அவன் நல்ல குணமுடையவன்; ஆனுல், பாடங்களை மட்டும் படிக்க மாட்டான்.

வாழை இலை, பூ, காய், பழம் ஆகிய யாவும் பயன்படும்.

6. ! இக்குறிக்கு ஆங்கிலத்தில் எக்ஸ்கிளமேஷன் (*Exclamation*) என்பது பெயர். இந்தக் குறியுள்ள இடத்தில் நான்கு முறை கண் இமைக்கும் நேரம் நிறுத்த வேண்டும். இக்குறியை அச்சம், ஆச்சரியம் இரக்கம் ஆகிய இவற்றை உணர்த்தும் சந்தர்ப்பங் களில் இட வேண்டும்.

(உ-ம்) அதோ ! புலி ! — அச்சம்
ஆஹா ! என்ன அழகு ! — ஆச்சரியம்
ஐயோ ! பாவம் ! என்ன செய்வான் ! — இரக்கம்.

## கேள்விகள்

1. , ! இந்தக் குறிகளுக்குரிய ஆங்கிலப் பெயர்கள் எவை ?
2. இக்குறிகளை இட்ட இடங்களில் எவ்வளவு நேரம் நிறுத்த வேண்டும் ?
3. இக்குறிகளை எங்கெங்கு இட வேண்டும் ?

## பயிற்சி-26

பின் வரும் வாக்கியங்களில் தகுந்த நிறுத்தக் குறிகளை அமைக்க —

அந்தோ யான் என் செய்வேன் என்னே அதிசயம் நீ எப்பொழுது வந்தாய் யான் என் தம்பி தங்கை தாயார் தகப்பனார் முதலியவர்களுடன் ஊருக்குப் போனேன்.

# எட்டாம் வகுப்பு

# I. எழுத்து

1. மொழி உண்டாவதற்கு முதற்காரணமாகிய அணுத்திரளின் ஒலி எழுத்தாகும். அஃது ஒலி வடிவில் இருக்கும்போது ஒலி வடிவு எழுத்து என்றும் வரி வடிவில் இருக்கும்போது வரி வடிவு எழுத்து என்றும் பெயர் பெறும்.

(உ-ம்) பேசுவது ஒலி வடிவு எழுத்து
எழுதுவது வரி வடிவு எழுத்து

2. இவ்வெழுத்து முதல் எழுத்து, சார்புஎழுத்து என இரு வகைப்படும்.

நன். சூ. மொழிமுதற் காரண மாம்அணுத் திரள்ஒலி
எழுத்து; அதுமுதல்சார் பெனஇரு வகைத்தே.

3. முதல் எழுத்து என்பன உயிர் எழுத்தும் மெய்யெழுத்தும் ஆகும்.

நன். சூ. உயிரும் உடம்புமாம் முப்பதும் முதலே.

4. சார்பெழுத்துப் பத்து. அவற்றுள் உயிர்மெய், ஆய்தம், குற்றியலுகரம், குற்றியலிகரம் ஆகிய இந்நான்கை மட்டும் இவ்வகுப்பில் கற்போம்.

குறிப்பு: உயிர் அளபெடை, ஒற்றளபெடை, ஐகாரக் குறுக்கம், ஔகாரக் குறுக்கம், மகரக் குறுக்கம், ஆய்தக் குறுக்கம் என்பனவற்றை மேல் வகுப்பில் படிப்பீர்கள்.

நன். சூ. உயிர்மெய் ஆய்தம் உயிர்அளபு ஒற்றளபு
அஃகிய இ, உ, ஐ, ஔ மஃகான்
தனிநிலை பத்தும் சார்பெழுத்தாகும்.

## கேள்விகள்

1. எழுத்தாவது யாது?
2. முதல் எழுத்து என்பவை எவை?
3. சார்பெழுத்து என்பவை எவை? அவை எத்தனை?
4. ஒலி வடிவு, வரி வடிவு என்பவை யாவை?

## பயிற்சி-1

கீழ் வருவனவற்றினின்றும் முதல் எழுத்துக்களையும் சார்பெழுத்துக்களையும் எடுத்து எழுதுக :—

'குழலினி தியாழினி தென்பர்தம் மக்கள்
மழலைச்சொற் கேளா தவர்.'

'அன்பின் வழிய துயிர்நிலை; அஃதிலார்க்
கென்புதோல் போர்த்த உடம்பு.'

## மாத்திரை

5. எழுத்துக்களை உச்சரிக்கும் கால அளவு **மாத்திரை** எனப்படும். கண் இமைப்பதும், கை நொடிப்பதும் ஒரு மாத்திரைக்கு அளவாம்.

நன். சூ. இயல்பெழு மாந்தர் இமைநொடி மாத்திரை.

6. குற்றியலுகரம், குற்றியலிகரம், மெய்யெழுத்து, ஆய்த எழுத்து ஆகிய இவற்றிற்கு மாத்திரை அரையாம்.

7. உயிர்க் குற்றெழுத்திற்கும், உயிர்மெய்க் குற்றெழுத்திற்கும் மாத்திரை ஒன்றும்.

8. உயிர் நெட்டெழுத்துக்கும், உயிர்மெய் நெட்டெழுத்துக்கும் மாத்திரை இரண்டாம்.

குறிப்பு:

(1) அவ்வவ்வெழுத்திற்குச் சொன்ன மாத்திரையின் அளவை மாணவர்கள் உச்சரித்து உணர்ந்துகொள்க.

(2) பண்டம் மாற்றும் போதும், அழும் போதும், பாடும் போதும், கூப்பிடும் போதும் எழுத்துக்கள் தமக்குச் சொன்ன மாத்திரையினின்றும் நீண்டு ஒலிக்கும்.

## கேள்விகள்

1. மாத்திரையாவது யாது?
2. மாத்திரைக்கு அளவு யாது?
3. எவ்வெவற்றிற்கு மாத்திரை அரை?
4. ஒரு மாத்திரை அளவுள்ள எழுத்துக்கள் எவை?
5. எவற்றிற்கு இரண்டு மாத்திரைகள் உண்டு?
6. மாத்திரையின் அளவை எவ்வாறு அறிந்து கொள்ள வேண்டும்?
7. எழுத்துக்கள் எப்போது தமக்குச் சொன்ன மாத்திரையளவிலிருந்து நீண்டு உச்சரிக்கும்?

## மொழிக்கு முதலாகும் எழுத்துக்கள்

9. தமிழ் மொழியில் உயிர் எழுத்துக்கள் பன்னிரண்டும் மொழிக்கு முதலாய் வரும்.

(உ-ம்) அழகு, ஆடை, இலை, ஈசல், உரல், ஊர், எது, ஏணி, ஐந்து, ஒன்று, ஓணான், ஔவையார்.

10. மெய்யெழுத்துக்கள் மொழிக்கு முதலாய் வரமாட்டா; ஆனால், உயிர் எழுத்துக்களோடு கூடி உயிர்மெய்யாகி மொழிக்கு முதலாய் வரும். அப்பொழுதும் எல்லா மெய்களும் உயிருடன் கூடி மொழிக்கு முதலாய் வாரா. க், ச், த், ந், ப், ம், வ், ய், ஞ், ங் என்னும் மெய்கள் மட்டும் உயிருடன் கூடி மொழிக்கு முதலாய் வரும். ட், ண், ர், ல், ழ், ள், ற், ன் என்னும் மெய்யெழுத்துக்கள் உயிருடன் கூடியும் மொழிக்கு முதலாய் வாரா.

(உ-ம்) கல், சக்கை, தண்டு, நகம், படம், மரம், வயல், யாளி, ஞாயிறு, ஙனம்.

குறிப்பு: டங்கா, ராமன், லாடம் என்னும் இச்சொற்களில் ட், ர், ல் என்னும் எழுத்துக்கள் மொழிக்கு முதலாய் வருகின்றனவே எனில், இவை தமிழ் மொழி அல்ல; வேறு மொழிகள் என்று உணர்க.

நன். சூ. பன்னீ ருயிருங் கசதந பமவய
ஞஙவீ ரைந்துயிர் மெய்யும் மொழிமுதல்

### கேள்விகள்

1. எவ்வெழுத்துக்கள் மொழிக்கு முதலாய் வரும்?
2. எவை மொழிக்கு முதலாய் வரமாட்டா?

3. மெய்கள் எப்போது மொழிக்கு முதலாய் வரும்?

4. உயிருடன் கூடி மொழிக்கு முதலாய் வரும் மெய் எழுத்துக்கள் எவை?

5. உயிருடன் கூடியும் மொழிக்கு முதலாயும் வாராத மெய் எழுத்துக்கள் எவை?

## பயிற்சி-2

1. பன்னிரண்டு உயிர் எழுத்துக்களும் மொழிக்கு முதலாய் வரத் தனித்தனி மும்மூன்று உதாரணம் தருக.

2. வ, ய, ஞ என்பவற்றில் ஒவ்வொன்றும் முதலாய் வரக் கூடியசொல்ஒவ்வொன்றிற்கும்ஒவ்வோர் உதாரணம் தருக.

3. க, ச, த, ந, ப, ம — இவற்றின் வருக்கம் ஒவ்வொன்றும் மொழிக்கு முதலாய் வரும்படி ஒவ்வோர் உதாரணம் தருக.

## மொழிக்கு ஈறு ஆகும் எழுத்துக்கள்

**11.** ஒரு மொழிக்கு ஈற்றில் (கடைசியில்) எகரம் ஒழிந்த மற்ற உயிர் எழுத்துக்கள் வரும்.

(உ-ம்) பல, பலா, பனி, தீ, படகு, பூ, தே, கதை, நொ, போ, கௌ.

(தீ=நெருப்பு, பூ=மலர், தே=கடவுள், நொ=துன்பம், கௌ=பற்று.)

குறிப்பு: 'ஏ' என்னும் உயிர் எழுத்து மொழிக்கு ஈற்றில் வருவது பாட்டில் அளபெடையில் மட்டுந்தான்.

12. மெய்யெழுத்துக்களில் ஞ், ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள் என்னும் பதினொரு மெய்யும் மொழிக்கு ஈற்றில் வரும்.

(உ-ம்) உரிஞ், கண், வெரிந், மரம், அவன், நெய், தேர், பல், தெவ், வாழ், கள்.
(வெரிந் = முதுகு, தெவ் = பகை.)

குறிப்பு : ஞ், ந், வ் என்னும் இம்மூன்று மெய்களும் அடிக்கடி வழக்கத்தில் வாரா.

நன்-சூ. ஆவி ஞணநமன யரல வழளமெய்
சாயும் உகரம் நாலாறும் ஈறே.

## கேள்விகள்

1. மொழிக்கு ஈற்றில் வாராத உயிர் எழுத்து எது ?
2. எந்த எழுத்துக்கள் வழக்கில் மொழிக்கு முதலாய் வாரா ?
3. மெய்யெழுத்துக்களில் மொழிக்கு ஈற்றில் வருவன யாவை ?
4. மொழிக்கு ஈற்றில் வாராத மெய்கள் எவை ?

## பயிற்சி-3

1. உயிர் எழுத்து ஒவ்வொன்றும் மொழிக்கு ஈற்றில் வரத் தனித்தனி இரண்டிரண்டு உதாரணம் தருக.
2. மெய்யெழுத்து ஒவ்வொன்றும் மொழிக்கு ஈற்றில்வரத் தனித்தனி ஒவ்வோர் உதாரணம் தருக.
3. ஊ, ஏ, ஈ, ஓ, ஔ—இந்த எழுத்துக்கள் மொழிக்கு ஈற்றில் வரும்படி உதாரணம் எழுதுக.
4. ழ், ஞ்—இந்த மெய்கள் மொழிக்கு ஈற்றில் வரும்படி உதாரணம் தருக.

## போலி

13. சில சொற்களில் ஓர் எழுத்து நிற்கவேண்டிய இடத்தில் மற்றோர் எழுத்து நிற்பினும், பொருள் கெடாதிருப்பது போலி எனப்படும். (போல வருவது போலியாம்.)

| | | |
|---|---|---|
| (உ-ம்) | குளம் | குளன் |
| | ஐயர் | அய்யர் |

14. இப்போலி மூன்று வகைப்படும். அவை **மொழி முதற்போலி**, **மொழி இடைப்போலி** **மொழிக் கடைப்போலி** என்பன.

15. மொழி முதல் போலி என்பது, சொல்லின் முதலில் ஓர் எழுத்துக்குப் பதிலாக வேறு ஓர் எழுத்து வருவதாம்.

| | | |
|---|---|---|
| (உ-ம்) | ஔவை | அவ்வை |
| | பௌத்தர் | பவுத்தர் |
| | நாயிறு | ஞாயிறு |

16. மொழியிடைப் போலி என்பது, சொல்லுக்கு நடுவில் ஓர் எழுத்துக்குப் பதிலாக வேறு ஓர் எழுத்து வருவதாம்.

| | | |
|---|---|---|
| (உ-ம்) | அரசன் | அரைசன |
| | பித்து | பிச்சு |

17. மொழிக கடைப்போலி யாவது, சொல்லுக்கு ஈற்றில் ஓர் எழுத்துக்குப் பதிலாக வேறு ஓர் எழுத்து வருவதாம்.

(உ-ம்) அறம் அறன்
இடக்கு இடக்கர்
பந்தல் பந்தர்

## கேள்விகள்

1. போலியாவது யாது?
2. போலி என்பதற்குப் பொருள் யாது?
3. போலி எத்தனை வகைப்படும்? அவை எவை? ஒவ்வொன்றையும் விளக்கி உதாரணமும் தருக.

## பயிற்சி-4

கீழ் வருவனவற்றினின்றும் போலிச் சொற்களை எடுத்து எழுதி, அவை இன்ன போலி எனவும் குறிப்பிடுக:—

நுனிக் கொம்பர் ஏறினர், அகன் அமர்ந்து ஈதலின், சிறகர் இலாப் பறவை, மயல் மானுட வாழ்க்கை, அவ்வியம் பேசேல்.

## 1. எழுத்து

- முதல் எழுத்து
  - உயிர் எழுத்து
  - மெய்யெழுத்து
- சார்பெழுத்து
  - உயிர்மெய் எழுத்து
  - ஆய்த எழுத்து
  - உயிரளபெடை
  - ஒற்றளபெடை
  - குற்றியலுகரம்
  - குற்றியலிகரம்
  - ஐகாரக் குறுக்கம்
  - ஔகாரக் குறுக்கம்
  - மகரக் குறுக்கம்
  - ஆய்தக் குறுக்கம்

## 2. போலி

- முதற்போலி
- இடைப்போலி
- கடைப்போலி

# II. சொல்

## பதம்

1. பதமாவது, எழுத்துக்கள் தனித்தேனும் தொடர்ந்தேனும் பொருளைத் தருவதாம். இப்பதம் **பகாப்பதம், பகுபதம்** என இரு வகைப்படும்.

நன்-சூ. எழுத்தே தனித்தும் தொடர்ந்தும் பொருள்தரின்
பதமாம் அது பகாப் பதம்பகு பதம்என
இருபா லாகி இயலும் என்ப.

2. பகாப்பதம் என்பது, பகுதி விகுதி முதலிய உறுப்புக்களாகப் பிரிக்க இயலாத பதமாம்.

3. பகாப்பதம், பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என்னும் நான்கு சொல்லிலும் உண்டு.

| | | |
|---|---|---|
| (உ-ம்) | மண்<br>கண் | பெயர்ப் பகாப்பதம் |
| | நட<br>வா | வினைப் பகாப்பதம் |
| | அந்தோ<br>ஐயோ | இடைப் பகாப்பதம் |
| | சால்<br>உறு | உரிப் பகாப்பதம் |

4. பகுபதம் என்பது, பகுதி விகுதி முதலிய உறுப்புக்களாகப் பிரிக்கக்கூடிய பதமாம்.

5. பகுபத உறுப்புக்கள் ஆறு. அவை **பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம்** என்பன.

6. பகுபதம் பெயர்ச்சொல்லிலும், வினைச்சொல்லிலும் மட்டும் வரும்.

7. பகுதியாவது, பகுபதத்தின் முதலில் நிற்கும் பகாப்பதமாகிய உறுப்பாம்.

(உ-ம்) கூனன் = கூன் + அன்

குறிப்பு: இப்பகுதி இரு வகைப்படும். அவை பெயர்ப் பகுதி, வினைப்பகுதி என்பன. பெயர்ப் பகுதி என்பது, பெயர்ச்சொல் பகுதியாக வருவதாம்; வினைப்பகுதி என்பது, வினைச்சொல் பகுதியாக வருவதாம்.

8. விகுதியாவது, பகுபதத்தின் ஈற்றில் நிற்கும் பகாப்பதமாகிய உறுப்பாம்.

(உ-ம்) கூனன் = கூன் + அன்

9. இடைநிலையாவது, பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் நிற்கும் உறுப்பாம்.

(உ-ம்) ஓதுவான் = ஓது + வ் + ஆன்

குறிப்பு: இவ்விடைநிலை, பெயர் இடைநிலை, வினை இடைநிலை என இருவகைப்படும். பெயர் இடைநிலை காலங் காட்டாது. வினை இடை நிலை காலங் காட்டும்.

(உ-ம்) வலைச்சி = வலை + ச் + சி — பெயர் இடைநிலை.

செய்தான் = செய் + த் + ஆன்—வினை இடைநிலை.

10. சாரியை என்பது, இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் நிற்கும் உறுப்பாம்.

(உ-ம்) செய்தனன் = செய் + த் + அன் + அன்.

11. சந்தியாவது, பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையே தோன்றும் உறுப்பாம்.

(உ-ம்) படித்தான் = படி + த் + த் + ஆன்.

12. விகாரமாவது ஓர் எழுத்து மற்றோரெழுத்தாக விகாரப்பட்டு (மாறுபட்டு) வருவதாம்.

(உ-ம்) கண்டான் = காண் + ட் + ஆன்
வந்தான் = வா + த் + த் + ஆன்

குறிப்பு: இவற்றில், 'காண்' என்னும் பகுதி 'கண்' என்றும் 'வா' என்னும் பகுதி 'வ' என்றும், 'த்' என்னும் சந்தி 'ந்' என்றும் விகாரப்பட்டு வந்திருப்பதை அறிக.

## கேள்விகள்

1. பதமாவது யாது? அப்பதம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
2. பகுபதம், பகாப்பதம் என்பவை யாவை?
3. பகாப்பதம் எவ்வெச்சொற்களில் வரும்?
4. பகுபதம் எவ்வெச்சொற்களில் வரும்?
5. பகுபத உறுப்புக்கள் எத்தனை? அவை எவை? ஒவ்வொன்றையும் விளக்குக.
6. இடைநிலை எத்தனை வகைப்படும்? அவை எவை?

7. பெயர்இடைநிலைக்கும்வினைஇடைநிலைக்கும்உள்ள வேறுபாடு யாது ?

8. பகுதி எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

9. பெயர்ப்பகுதி, வினைப்பகுதி என்பவை யாவை ?

## பயிற்சி - 5

1. கீழ்வருவனவற்றுள் எழுத்துத் தனித்துவந்து பொருள் தந்த சொற்களும், தொடர்ந்து வந்து பொருள் தந்த சொற்களும் எவை ?

தீம்பால், பூக்கொண்டு, நீ வா, மா மரம், தூ மொழி.

2. கீழ் வரும் கோடிட்ட இடங்களைத் தகுந்த சொல்லாற் பூர்த்தி செய்து, அச்சொல் இன்ன பதம் எனவும் குறிப்பிடுக :—

————ப் பறவை,————ஒரு சாதுவான மிருகம்——— எங்கே போனாய் ? அண்ணா ஓர் அணா ———— ———— ஒன்று வாங்கு.

3. கீழ் வருவனவற்றுள் எவை பகுபதம், எவை பகாப் பதம் ?

பொன்னன்கடைக்குச்சென்றான். மலையன்மாடுமேய்க்கிறான். மதுரையார் புண்ணியம் செய்தார். சேலத்தார் சென்னைக்கு வந்தார்.

4. நான்கு சொல்லிலும் பகாப்பதம் வரும்படி தனித்தனி மும்மூன்று உதாரணம் தருக.

5. கண்ணன், செய்தான், மயிலாப்பூரான், நடக்கிறான், நடையன், பூரட்டாதியான்—இவற்றுள் பெயர்ப் பகுபதம், வினைப் பகுபதம் இவை எனக் குறிப் பிட்டுப் பகுதிகளையும் எடுத்துக் காட்டுக.

6. கீழ் வருவனவற்றிற்கு விகுதிகளை மட்டும் குறிப்பிடுக:—
செய்தான், வந்தனர், போகிறது, நடந்தவை, முருகன்

7. கீழ் வருவனவற்றுள் பெயர் இடை நிலை எவை, வினை இடைநிலை எவை ?

வண்ணாத்தி, படித்தான், குறத்தி, புலைச்சி, செய்வான், செட்டிச்சி, அறிஞன், ஓதுவான், படிக்கிறாள்.

8. கீழ் வருவனவற்றிலுள்ள சாரியைகளை மட்டும் குறிப்பிடுக :—

வந்தனன், படித்தனன், ஓதுவித்தனன்.

9. கீழ் வருவனவற்றிலுள்ள சந்திகளை மட்டும் காட்டுக:—
பிடிக்கிறாள், படித்தாள், கடிப்பன.

10. கீழ் வரும் சொற்களில் எவை எவ்வாறு விகாரப் பட்டன ?

தருகிறான், வந்தான், செத்தான், வெந்தது.

11. கீழ்வரும் சொற்களுக்கு உறுப்பிலக்கணம் கூறுக:—
ஓடுவாள், காண்பான்; செய்கின்றன, படிக்கிறார்கள், பேசினார்கள், கற்றான், கண்டனன், கடித்தது.

## இடுகுறிப் பெயரும், காரணப் பெயரும்

13. பெயர்ச்சொல் இடுகுறிப் பெயராகவும் காரணப் பெயராகவும் வழங்கப் பெறும்.

14. இடுகுறிப் பெயராவது, ஒன்றை அறிவதற்குப் பெரியோர்களால் தொன்றுதொட்டு இடப்பட்டு வழங்கிவரும் பெயராம்.

(உ-ம்) மரம், கல், மண்.

15. இவ்விடுகுறிப் பெயரே, எல்லாப் பெயருக்கும் பொதுவாக வரின், அதனை இடுகுறிப் பொதுப் பெயர் என்றும், ஒன்றற்கே சிறப்பாக வரின், அதனை இடுகுறிச் சிறப்புப் பெயர் என்றும் கூறுவர்.

(உ-ம்) மரம், பட்சி — இடுகுறிப் பொதுப்பெயர்.
மாமரம், கிளி — இடுகுறிச் சிறப்புப்பெயர்.

16. காரணப் பெயராவது, யாதானும் ஒரு காரணம் பற்றி ஒரு பொருளுக்கு வழங்கும் பெயராகும்;

(உ-ம்) பறவை, நாற்காலி.

17. காரணப் பெயர் சில பொருள்களுக்குப் பொதுவாக வழங்கிவரின், காரணப் பொதுப் பெயர் என்றும், ஒரு பொருளுக்கே சிறப்பாக வழங்கிவரின், காரணச் சிறப்புப் பெயர் என்றும் வழங்கப்பெறும்.

(உ-ம்) அணி, பறவை—காரணப் பொதுப் பெயர்.
முடி, மீன்குத்தி—காரணச் சிறப்புப் பெயர்.

நன்-சூ. இடுகுறி காரணப் பெயர் பொதுச் சிறப்பின.

## கேள்விகள்

1. இடுகுறிப் பெயர், காரணப் பெயர் என்பவை யாவை ?
2. இடுகுறிப் பெயரும் காரணப் பெயரும் எத்தனை வகைப்படும்? அவை யாவை? ஒவ்வொன்றையும் நன்கு விளக்குக.

## பயிற்சி-6

1. இடுகுறிப் பொதுப் பெயர், இடுகுறிச் சிறப்புப் பெயர், காரணப் பொதுப் பெயர், காரணச் சிறப்புப் பெயர் என்னும் இவற்றிற்குத் தனித் தனி மும்மூன்று உதாரணம் தருக.

2. கீழ் வருவனவற்றுள் இவை இவை இன்னின்ன பெயரெனக் குறிப்பிடுக :—

வளை, பலா, அணி, பறவை, நாற்காலி, சிலம்பு வாழை, கல், முள்ளி, முக்கண்ணன், மரம்.

## மூவிடப் பெயர்கள்

18. பெயர்ச் சொற்கள் எல்லாம், தன்மைப் பெயர், முன்னிலைப் பெயர், படர்க்கைப் பெயர் என மூன்று வகைப்படும்.

19. தன்மைப் பெயர் பேசுவோனையும், பேசுவோரையும் குறித்து வரும்.

(உ-ம்) நான், யான்—பேசுவேன்
நாங்கள், யாங்கள்—பேசுவோர்

20. முன்னிலைப் பெயராவது, பேசுபவனுக்கு முன்னிற்போனையும் முன்னிற்போரையும் குறித்து வருவது.

(உ-ம்) நீ — முன்னிற்போன்
நீங்கள், நீர் — முன்னிற்போர்.

21. தன்மைப் பெயர், முன்னிலைப் பெயர் அல்லாத பெயர்கள் எல்லாம் படர்க்கைப் பெயர்களாம்.

(உ-ம்) அவன், அவள், அது, அவர், அவை.

குறிப்பு : (1) 'எல்லாம்' என்னும் சொல், தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்று இடங்களிலும் வரும். ஆதலின் அதை இடப் பொதுப் பெயர் என்பர்.

(2) 'எல்லாம்' என்னும் இடப்பொதுப் பெயர் பன்மையில் மட்டுந்தான் வரும்.

(உ-ம்) நாம் எல்லாம் — தன்மையில் வந்தது.
நீங்கள் எல்லாம் — முன்னிலையில் வந்தது.
அவர்கள் எல்லாம் — படர்க்கையில் வந்தது.

நன்-சூ. தன்மை யான்நான் யாம்நாம் ; முன்னிலை
எல்லீர் நீயீர் நீவிர் நீர்நீ ;
அல்லன படர்க்கை எல்லாம் எனல்பொது.

## கேள்விகள்

1. தன்மை, முன்னிலை, படர்க்கைப் பெயர்கள் என்பவை யாவை ?
2. இடப் பொதுப் பெயர் என்பது எது ?
3. இடப் பொதுப் பெயர் எவ்வெண்ணில் மட்டும் வரும் ?

## பயிற்சி - 7

1. கீழ் வருவனவற்றில் வந்துள்ள தன்மை, முன்னிலை, படர்க்கைப் பெயர்களைக் குறிப்பிடுக :—

யான் அல்லேன். அவர்கள் வருவார்கள். நான் செல்வேன். நீ வா. நீர் போமின். மரம் வளர்ந்தது. யாம் கூறுவோம். நீவிர் யாவிர் ? பறவை பறக்கும். நாம் சொல்வதைக் கேள். நீவிர் யாண்டுச் செல்வீர் ? நீவிர் எல்லீரும் நம் தோழர். மிருகம் காட்டில் வசிக்கும்.

2. 'எல்லாம்' என்பது இடப் பொதுப் பெயர் ஆதலைஉதாரணத்தால் நன்கு விளக்குக.

## ஆகு பெயர்

22. ஒன்றன் இயற்பெயர் அதனோடு சம்பந்த முடைய மற்றொரு பொருளுக்கு ஆகி வருவது ஆகு பெயராம்.

(உ-ம்) வெள்ளை அடித்தான்—இங்கு 'வெள்ளை' என்னும் நிறத்தை உணர்த்தும் இயற் பெயர், அதனோடு சம்பந்தமுடைய வெள்ளை நிறத்தையுடைய சுண்ணாம்பை உணர்த்தி நின்றமை உணர்க.

23. இவ் வாகுபெயர் பல வகைப்படும். அவற் றுள் சில: பொருளாகுபெயர், இடவாகுபெயர், கால வாகுபெயர், சினை ஆகுபெயர், குண வாகுபெயர் தொழிலாகு பெயர், அளவை ஆகுபெயர், தானி யாகுபெயர், கருத்தாவாகுபெயர், உவம ஆகு பெயர் என்பன.

24. பொருளாகு பெயராவது, முதற்பொருள் அதன் சினைக்கு ஆகி வருவது.

(உ-ம்) தாமரைப் பாதம்—இங்கு 'தாமரை' என் பது கொடியை உணர்த்தாமல் அதன் பூவை உணர்த்தினமை அறிக.

குறிப்பு: பொருளாகு பெயர்க்கு முதலாகு பெயர் என் னும் மற்றொரு பெயரும் உண்டு.

25. இடவாகு பெயராவது : இடப் பெயர் இடத்தை உணர்த்தாமல், அவ்விடத்தில் உள்ள பொருளுக்கு ஆகி வருவது.

(உ-ம்) ஊர் அடங்கிற்று — இங்கு 'ஊர்' என்னும் இடப்பெயர் இடத்தை உணர்த்தாமல், ஊரில் உள்ள மக்களுக்கு ஆகி வந்தமை உணர்க.

26. கால ஆகுபெயராவது : காலப் பெயர் காலத்தை உணர்த்தாமல், அக்காலத்துத் தோன்றும் பொருளுக்கு ஆகி வருவது.

(உ-ம்) சித்திரை வந்தான் — இங்குச் 'சித்திரை' என்னும் காலப் பெயர் அக்காலத்தில் பிறந்த மனிதனுக்கு ஆனமை உணர்க.

27. சினையாகு பெயராவது, சினைப் பெயர் சினையை உணர்த்தாமல், அதன் முதலுக்கு ஆகி வருவது.

(உ-ம்) வெற்றிலை நட்டான் — இங்கு 'வெற்றிலை' என்னும் சினைப் பெயர் அதன் முதலாகிய கொடிக்கு ஆகி வந்தமை அறிக.

குறிப்பு : பொருளாகு பெயர் சினையை உணர்த்தும்; சினையாகு பெயர் முதலை உணர்த்தும். இதனை மாணவர்கள் மனத்தில் நன்கு பதியவைத்துக் கொள்ள வேண்டும்.

28. குணவாகு பெயராவது : குணப் பெயர் அக் குணத்தை உணர்த்தாமல், அக்குணத்தை ஏற்ற பெயருக்கு ஆகி வருவது.

(உ-ம்) வெள்ளை ஓட்டினான் — இங்கு 'வெள்ளை' என்னும் நிறப் பெயர் அந்நிறத்தை உணர்த்தாமல் வெள்ளை நிறமுடைய மாட்டுக்கு ஆனமை உணர்க.

குறிப்பு : இவ்வாகு பெயர், பண்பாகு பெயர் எனவும் வழங்கப்பெறும்.

29. தொழிலாகு பெயராவது : தொழிற் பெயர் செயலை உணர்த்தாமல், அச்செயலை ஏற்ற பொருளுக்கு ஆகி வருவது.

(உ-ம்) சுண்டல் உண்டான்—இங்குச் 'சுண்டல்' என்னும் தொழிற்பெயர் சுண்டுதலாகிய தொழிலை உணர்த்தாமல் அத்தொழிலை ஏற்ற பொருளுக்கும் பெயராகி வந்தமை உணர்க.

30. அளவை ஆகு பெயர் ஆவது : அளவைப் பெயர் அளவையை உணர்த்தாமல், அவ்வளவையை ஏற்ற பொருளுக்குப் பெயராகி வருவது.

(உ-ம்) படி கறந்தான் — இங்குப் 'படி' என்னும் அளவைப்பெயர் அளவையை உணர்த்தாமல் அவ்வளவு கொண்ட பொருளுக்கு ஆனமை உணர்க.

குறிப்பு: அளவையாகு பெயர் நான்கு வகைப்படும். அவை எண்ணல் அளவை ஆகுபெயர், எடுத்தல் அளவை ஆகுபெயர், முகத்தல் அளவை ஆகுபெயர், நீட்டல் அளவை ஆகுபெயர் என்பன.

31. எண்ணல் அளவை ஆகு பெயராவது, எண்களைக் குறிக்கும் பெயர் அவ்வெண்களை உணர்த்தாமல், அவ்வெண்ணிக்கையினைக் கொண்ட பொருளுக்கு ஆகி வருவது.

(உ-ம்) பத்துக் கொடுங்கள் — இங்குப் 'பத்து' என்னும் எண்ணல் அளவைப் பெயர் அவ்வெண்ணிக்கையினைக் கொண்ட பொருளுக்கு ஆனமை உணர்க.

32. எடுத்தல் அளவை ஆகு பெயராவது, எடுத்தல் அளவைப் பெயர்கள் அவ்வளவினைக் கொண்ட பொருளுக்கு ஆகி வருவதாம்.

(உ-ம்) சேர் பத்தணா—இங்குச் 'சேர்' என்னும் எடுத்தல் அளவைப் பெயர் அவ்வளவினைக் கொண்ட பொருளுக்கு ஆனமை உணர்க.

33. முகத்தல் அளவை ஆகு பெயராவது, முகக்கும் அளவையைக் குறிக்கும் பெயர் அவ்வளவையைக் குறிக்காமல் அவ்வளவினைக் கொண்ட பொருளுக்கு ஆகி வருவதாம்.

(உ-ம்) படி அளந்துபோடு — இங்குப் 'படி' என்னும் முகத்தல் அளவைப் பெயர் அவ்வளவினைக் கொண்ட பொருளுக்கு ஆன்மை காண்க.

34. நீட்டல் அளவை ஆகுபெயராவது, நீட்டல் அளவைப்பெயர் அவ்வளவினைக் கொண்ட பொருளுக்கு ஆகி வருவதாம்.

(உ-ம்) ஒரு முழம் தந்தான் — இங்கு 'முழம்' என்னும் நீட்டல் அளவைப் பெயர் அவ்வளவைக் குறியாமல், அவ்வளவினையுடைய துணியை உணர்த்தினமை அறிக.

35. தானியாகு பெயராவது, இடத்தில் உள்ள பொருளின் பெயர் இடத்துக்கு ஆகி வருவதாம்.

(உ-ம்) முடி அசைத்தான் — இங்கு 'முடி' என்னும் கிரீடமாகிய பொருட்பெயர் அதற்கு இடமாகிய தலைக்கு ஆனமை உணர்க.

குறிப்பு: இட ஆகு பெயர், இடத்தில் உள்ள பொருளை உணர்த்தும். தானி ஆகுபெயர், பொருள் உள்ள இடத்தை உணர்த்தும்.

36. கருத்தாவாகு பெயராவது, கருத்தாவின் பெயர், அக்கருத்தாவால் செய்யப்பட்ட பொருளுக்கு ஆகி வருவதாம்.

(உ-ம்) சுந்தரர் படித்தான் — இங்குச் 'சுந்தரர்' என்னும் கருத்தாவின் பெயர், அக் கருத்தாவால் எழுதப்பட்ட தேவாரமாகிய நூலுக்கு ஆனமை காண்க.

37. உவம ஆகுபெயராவது உவமானத்தின் பெயர் உவமேயத்துக்கு ஆகி வருவது.

(உ-ம்) கிளி பேசினாள் — இங்குக் 'கிளி' என்னும் பெயர் அக் கிளி போலும் பேச்சையுடைய ஒரு பெண்ணுக்கு ஆனமை உணர்க.

## கேள்விகள்

1. ஆகுபெயர் என்பது என்ன? அஃது எத்தனை வகைப்படும்? அவை எவை? ஒவ்வொன்றையும் விளக்கி உதாரணம் தருக.

2. பொருளாகு பெயர், குணவாகு பெயர் இவற்றிற் குரிய வேறு பெயர்கள் எவை?

3. பொருளாகு பெயருக்கும், சினையாகு பெயருக்கும் உள்ள வேறுபாடு யாது?

4. இடஆகுபெயர்க்கும், தானியாகு பெயர்க்கும் உள்ள வேறுபாடு யாது?

5. அளவை ஆகுபெயர் எத்தனை வகைப்படும்? அவை யாவை? அவற்றை விளக்கி உதாரணமும் தருக.

## பயிற்சி - 8

1. ஆம்பல், உலகம், கார், வெற்றிலை, நீலம், எழுத்து, ஒன்று, வீசை, கலம், குமுதம், விளக்கு, ஔவையார், சிங்கம்— இச்சொற்களை ஆகுபெயராக அமைத்து எழுதி, இன்ன ஆகுபெயரெனவும் குறிப்பிடுக.

2. கீழ்வருவனவற்றுள் வந்துள்ள ஆகுபெயர்களை எடுத்து எழுதி, அவை இன்ன ஆகுபெயர் எனவும் குறிப்பிடுக:

பாவை வந்தாள். தேன்மொழி பாடினாள். திருவள்ளுவர் வாசி. கழல் வணங்கினான். விளக்கு முறிந்தது. நெஞ்சு நோகிறது. கெஜம் வாங்கினான். ஒரு காதம் நடந்தான். ஆழாக்கு வாங்கினான். வீசை போடு. சேர் வாங்கு. அரை நாண் கட்டு. கால் வலிக்கிறது. வற்றல் உண்டான். நன்மை கடைப்பிடி. மருக்கொழுந்து நட்டான். ஒரு கை ஆட வருவீரா? வைகாசி பூத்தது. கார் அறுவடையாயிற்று. சென்னைக்கு அபாயம் இல்லை. சிதம்பரம் சிரிக்கிறது. குவளைக்கண். ஆம்பல் வாய்.

3. ஆகுபெயர் அமைந்த வாக்கியம் ஐந்து எழுதுக.

## வினையால் அணையும் பெயர்

38. ஒரு வினைமுற்று பெயர்த்தன்மை அடைந்து, வேற்றுமை உருமை ஏற்று வருவது வினையால் அணையும் பெயராம்.

(உ-ம்) வந்தான்—வினைமுற்று
வந்தானை—வினையால் அணையும் பெயர்.

குறிப்பு: தொழிற்பெயரும், வினையால் அணையும் பெயரும் வெவ்வேறு. அவற்றிற்கு நிரம்ப வேறுபாடு உண்டு.

1. தொழிற்பெயர் தொழிலுக்குப் பெயராய் வரும். வினையால் அணையும் பெயர் தொழிலைச் செய்த பொருளுக்குப் பெயராய் வரும்.

2. தொழிற்பெயர்படர்க்கை இடத்தில்மட்டும்வரும். வினையாலணையும் பெயர் தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்று இடத்திலும் வரும்.

### கேள்விகள்

1. வினையாலணையும் பெயராவது யாது ?
2. தொழிற்பெயர்க்கும்வினையாலணையும்பெயர்க்கும் உள்ள வேறுபாடு யாது ?

### பயிற்சி-9

1. அடைக்கலம் பகர்கின்றானைக் காண். வந்தேனுக்கு முன்னேஅருள். நடந்தவன் கால்கள் நோகும். அன்பர் உள்ளம் அமர்ந்தவனே. செய்தவன்கண் சென்றேன். இருந்தேனுக்கு எங்கே இடம்? — இவற்றுள் வினையால் அணையும் பெயர்கள் எவை ?
2. மடித்தாள், செய்தது, வருகின்றார், கண்டனன், ஓடின— இவ் வினைமுற்றுக்களை வினையாலணையும் பெயர்களாக மாற்றி வாக்கியங்களில் அமைக்க.

### வேற்றுமை

39. பெயர்ச்சொற்களின் பொருளை வேறுபடுத்துவது வேற்றுமையாம். அ∴து எட்டு வகைப்படும்.

40. முதல் வேற்றுமை என்பது, பெயர்ச்சொல் ஒரு வேறுபாடும் இல்லாமல் வருவது. இதற்கு எழுவாய் வேற்றுமை என்றும் பெயராம். இது வினைப் பயனிலையையும், பெயர்ப் பயனிலையையும், வினாப் பயனிலையையும் கொண்டு முடியும்.

(உ-ம்) முருகன் வந்தான் — வினைப் பயனிலை.
அவன் முருகன் — பெயர்ப் பயனிலை.
முருகன் யாவன் ? — வினாப் பயனிலை.

குறிப்பு : (1) இவ் வேற்றுமைக்கு ஆனவன், ஆனவள் ஆனவர், ஆனது, ஆனவை என்பன சொல்லுருபுகளாம்.

(உ-ம்) கந்தனானவன் வந்தான்.
வள்ளியானவள் வந்தாள்.
மனிதரானவர் வந்தனர்.
வேலானது வந்தது.
மயில்களானவை வந்தன.

2. இவ்வேற்றுமை, கருத்தா வேற்றுமை எனவும் பெயர் பெறும். அக்கருத்தா ஏவுதல் கருத்தா இயற்றுதல் கருத்தா என இரண்டு வகைப்படும். ஏவுதல் கருத்தா என்பது,பிறரைக்கொண்டு ஒருசெயலைச்செய்விப்பது. இயற்றுதல் கருத்தா என்பது தானே ஒரு செயலைச் செய்வது.

(உ-ம்) அரசன் நாற்காலி செய்தான்—ஏவுதல் கருத்தா.

தச்சன் நாற்காலி செய்தான்—இயற்றுதல் கருத்தா.

நன்-சூ. எழுவாய் உருபு திரிபில் பெயரே ;
வினைபெயர் வினாக்கொளல் அதன்பய னிலையே.

41. இரண்டாம் வேற்றுமை என்பது, செயப்படுபொருள் வேற்றுமையாம்.

(உ-ம்) முருகன் கணபதியைக் கண்டான்.

42. மூன்றாம் வேற்றுமை என்பது கருவி கருத்தா, உடன் நிகழ்ச்சிப் பொருள்களில் வரும்

(உ-ம்) வாளால் வெட்டினான்—கருவிப் பொருள்.

அரசனால் கட்டப்பட்டது—கருத்தாப் பொருள்.

தந்தையோடு சென்றான் — உடனிகழ்ச்சிப் பொருள்.

குறிப்பு : (1) கருவி இரண்டு வகைப்படும். அவை முதற் கருவி, துணைக்கருவி என்பன. முதற்கருவி என்பது பொருளை விட்டு நீங்காதது. துணைக்கருவி என்பது அப் பொருளுக்குத் துணையாக வருவது.

(உ-ம்) மண்ணால் செய்த குடம்—முதற் கருவி.

உளியால் செய்த மத்து—துணைக்கருவி.

(2) கருத்தா ஏவுதல் கருத்தா, இயற்றுதல் கருத்தா என இரண்டு வகைப்படும்.

(உ-ம்) அரசனால் மேசை செய்யப்பட்டது—ஏவுதற் கருத்தா.

தச்சனால் மேசை செய்யப்பட்டது—இயற்றுதல் கருத்தா.

(3) முதல்வேற்றுமைக் கருத்தாவிற்கும்மூன்றாம்வேற்றுமைக் கருத்தாவிற்கும் வேறுபாடு உண்டு. முதல் வேற்றுமைக் கருத்தா செய்வினை கொண்டு முடியும். மூன்றாம் வேற்றுமைக்கருத்தாசெயப்பாட்டுவினைகொண்டுமுடியும்.

(உ-ம்) கந்தன் பாடம் படித்தான்—செய்வினை கொண்டு முடிந்தது.

பாடம் கந்தனல் படிக்கப்பட்டது—செயப்
பாட்டு வினை கொண்டு முடிந்தது.

(1) மூன்றும் வேற்றுமைக்குக் கொண்டு, உடன் என்
பன சொல்லுருபுகளாம்.

(உ-ம்) வாள் கொண்டு வெட்டினன்.
அவனுடன் சென்றன்.

43. நான்காம் வேற்றுமை, கொடை, பகை, நேர்ச்சி, தகுதி, அதுவாதல், பொருட்டு, முறை என்னும் பொருள்களில் வரும்.

(உ-ம்) ஏழைகளுக்குச் சோறு அளித்தான்.
பாம்புக்குப் பகை கீரி.
எனக்கு நண்பன் அவன்.
அரசர்க்குச் செங்கோல் உரியது.
நகைக்குப் பொன் கொடு.
கூலிக்கு வேலை செய்.
கந்தனுக்குத் தந்தை சிவன்.

குறிப்பு : இதன் சொல்லுருபுகள் பொருட்டு, ஆக, நிமித்தம் என்பன.

(உ-ம்) வயிற்றின் பொருட்டு வேலை செய்கிறேன்.
வயிற்றிற்காக வேலை செய்கிறேன்.
வயிற்றி னிமித்தம் வேலை செய்கிறேன்.

44. ஐந்தாம் வேற்றுமை நீங்கல் பொருள், ஒப்புப் பொருள், எல்லைப்பொருள், ஏதுப் பொருளில் வரும்.

(உ-ம்) ஊரின் நீங்கினான் — நீங்கல்பொருள்.
காக்கையிற் கரிய மேனியன் — ஒப்புப்பொருள்.

சென்னையின் தெற்குச் சிதம்பரம் — எல்லைப் பொருள்.

அன்பில் பெரியார் சேக்கிழார் — ஏதுப் பொருள் (ஏது = காரணம்)

குறிப்பு: இவ்வேற்றுமையின் சொல்லுருபுகள் இருந்து, நின்று என்பன.

(உ-ம்) வீட்டிலிருந்து புறப்பட்டான்.
மலையினின்று இறங்கினான்.

45. ஆறும் வேற்றுமை உரிமைப் பொருளில் வரும்.

(உ-ம்) எனது வீடு.

குறிப்பு: இதன் சொல்லுருபு 'உடைய' என்பது.

(உ-ம்) என்னுடைய வீடு.

46. ஏழாம் வேற்றுமை. இடப் பொருள் வேற்றுமையாம்.

(உ-ம்) அவன் வயின் சென்றான்.

குறிப்பு: ஏழாம் வேற்றுமைக்குப் பல உருபுகள் உண்டு.

நன்-சூ. கண்கால் கடைஇடை தலைவாய் திசைவயின்
முன்சார் வலம்இடம் மேல்கீழ் புடைமுதல்
பின்பாடு அளைதேம் உழைவழி உழிஉளி
உள்அகம் புறம் இல் இடப்பொருள் உருபே

47. எட்டாம் வேற்றுமை விளிப்பொருளில் வரும். ஆதலின், இதை **விளி வேற்றுமை** என்றும் கூறுவர்.

(உ-ம்) கடவுளே, என்னைக் கா.

குறிப்பு: (1) விளி இரண்டு வகைப்படும். அவை: அண்மை விளி, சேய்மை விளி என்பன. அண்மை விளி என்பது அருகில் உள்ளவரை அழைப்பது. சேய்மை விளி என்பது தூரத்தில் உள்ளவரை விளிப்பது.

(உ-ம்) அரச, கேள் — அண்மை விளி.
அரசனே, கேள் — சேய்மை விளி.

(2) விளி வேற்றுமைச்சொல் ஒருவித விகாரமும் அடையாமல், உச்சரிப்பில் மட்டும் வேறுபட்டு வருதலும் உண்டு. அதனை இயல்புவிளி என்பர்.

(உ-ம்) தம்பி, இங்கு வா.

(3) தன்மைப் பெயர்களும், முன்னிலைப் பெயர்களும் வினாப் பெயர்களும், சுட்டுப் பெயர்களும், தான், தாம் முதலிய பொதுப் பெயர்களும் விளி வேற்றுமையை ஏலா.

## கேள்விகள்

1. வேற்றுமையாவது யாது? அஃது எத்தனை?
2. முதல் வேற்றுமை எவ்வெப் பயனிலைகளைக் கொண்டு முடியும்?

3. முதல் வேற்றுமையின் சொல்லுருபுகள் எவை ?
4. முதல் வேற்றுமைக்குரிய வேறு பெயர்கள் எவை?
5. கருத்தா எத்தனை வகைப்படும் ? அவை எவை ? ஒவ்வொன்றையும் விளக்குக.
6. முதல் வேற்றுமைக் கருத்தாவிற்கும் மூன்றும் வேற்றுமைக் கருத்தாவிற்கும் உள்ள வேறு பாடு யாது ?
7. இரண்டாம் வேற்றுமை எப்பொருளில் வரும் ?
8. மூன்றும் வேற்றுமைப் பொருள்கள் எவை ?
9. முதற்கருவி துணைக்கருவி என்பன யாவை ? உதாரணம் தந்து விளக்குக.
10. மூன்றும் வேற்றுமைச் சொல்லுருபுகள் எவை ?
11. நான்காம் வேற்றுமைப் பொருள்கள் யாவை ? இவ்வேற்றுமையின் சொல்லுருபுகள் யாவை ?
12. ஐந்தாம் வேற்றுமைப் பொருள்கள் யாவை ? இவ்வேற்றுமையின் சொல்லுருபுகள் எவை ?
13. ஆறும் வேற்றுமையின் பொருள் எது? அதன் சொல்லுருபு எது ?
14. ஏழாம் வேற்றுமை எந்தப் பொருளில் வரும் ? இவ்வேற்றுமையின் உருபுகள் எவை ?
15. எட்டாம் வேற்றுமை எப்பொருளில் வரும் ? இவ்வேற்றுமைக்குரிய வேறு பெயர் யாது ?
16. விளி எத்தனை வகைப்படும் ? அவை யாவை ? ஒவ்வொன்றையும் விளக்குக.
17. இயல்பு விளியாவது யாது ? உதாரணம் தருக.

18. எவ்வெப்பெயர்கள் விளியேலா ?

19. சொல்லுருபு பெருத வேற்றுமைகள் எவை ?

## பயிற்சி-10

1. கீழ் வருவனவற்றுள் கருத்தா வேற்றுமை எவ்வெப்பயனிலே கொண்டு முடிந்தன ?

தாயார் சென்ருர். அவரே என் ஆசிரியர். நான் ஆர் ? நீரே பழிபட்டீர். இது சிவன் கோயில்.

2. செயப்படுபொருள் வேற்றுமைக்குப் பத்து உதாரணம் தருக.

3. கீழ்வருவனவற்றில் முதல் வேற்றுமைக் கருத்தா, மூன்ரும் வேற்றுமைக் கருத்தாக்களைக் குறிப்பிடுக.

கண்ணவனுல் கடகம் செய்யப்பட்டது. முருகன் சென்ருன். கொத்தனுல் கோயில் கட்டப் பட்டது. சேணியன் நூல் நூற்கிருன். என்னுல் பாட்டுப் பாடப் பட்டது. நான் ஓதினேன்.

4. ஏவுதல் கருத்தா இயற்றுதல் கருத்தா—இவற்றுள் ஒவ்வொன்றிற்கும் பப்பத்து உதாரணம் தருக.

5. கீழ் வரும் மூன்ரும் வேற்றுமைகள் எவ்வெப் பொருளில் வந்துள்ளன ?

வள்ளுவரால் அறிவிக்கப் பட்டது. அம்பால் அடிக்கப் பட்டது. தாயுடன் சென்ருன். மரத்தால் செய்யப்பட்ட பெட்டி இது. கொல்லனுல் செய்யப்பட்ட ஆணி இது. உளியால் செய்யப் பட்ட மத்து இது.

6. கீழ் வருவனவற்றில் முதற் கருவி, துணைக் கருவிகளைக் குறிப்பிடுக :—

வெட்டிரும்பால் பிளந்த கட்டை, பொன்னால் செய்த மோதிரம், மண்ணால் செய்த பாண்டம், மரத்தால் செய்த பலகை.

7. நான்காம் வேற்றுமைப் பொருட்குப் பத்து உதாரணம் தருக.

8. நகரின் நீங்கினான். சிதம்பரத்தின் வடக்குச் சென்னை. கல்வியில் பெரியர் கம்பர். சென்னையின் தெற்குக் குமரி முனை. அழகிற் சிறந்தவன் ஆறுமுகன் — இவை எந்தெந்தப் பொருளில் வந்துள்ளன ?


9. உரிமைப் பொருட்கும், இடப் பொருட்கும் பத்து உதாரணம் தருக.

10. கணபதி, அருள் செய்வாயாக. திருவே, வா. என் செல்வமே, நில். தேனே, நட. குமர, கூறுவதைக் கேள். ஆறுமுகம், என்ன செய்கிறாய் ? வேலவா நீ செய்வது வீண் — இவற்றுள் அண்மை விளி எவை ? சேய்மை விளி எவை ? இயல்பு விளி எது ?


11. கீழ்க் காணும் சொற்களில் உள்ள சொல்லுருபுகளைக் காட்டி, அவை இன்ன வேற்றுமைச் சொல்லுருபுகள் எனவும் குறிப்பிடுக :—

தந்தையானவர் ஐவராம். குயிலானது கூவியது. தன்னுடைய வேலை. அங்கயற்கண்ணி தன்னுடன் அமர்ந்தவன். கண்கொண்டு காணாதார். வாளினின்று தப்பினான். வேலையிலிருந்து புறப்படு. உன் நிமித்தம் சென்றேன். என்பொருட்டு வரவேண்டா. யாருக்காக இவ்வளவு பாடு ?


## 1. பதம்




## 2. பகுபத உறுப்புக்கள்



## 3. பெயர்


இடுகுறிப் பெயர்
காரணப் பெயர்
இடப் பெயர்
ஆகு பெயர்
வினையால் அணையும் பெயர்
பொது
சிறப்பு
பொது
சிறப்பு
தன்மை
முன்னிலை
படர்க்கை
பொருள்
இடம்
காலம்
சினை
குணம்
தொழில்
கருத்தா
உவமை
அளவை
தானி
எண்ணல்
எடுத்தல்
முகத்தல்
நிறுத்தல்

## வினைச்சொல்

---

48. வினைச்சொல் இரண்டு வகைப்படும். அவை **தெரிநிலைவினை, குறிப்பு வினை** என்பன.

49. தெரிநிலை வினையாவது, இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்னும் மூன்று காலங்களில் ஒன்றை வெளிப்படையாகக் காட்டி வருவது.

(உ-ம்) செய்தான் — இறந்தகாலத் தெரிநிலைவினை
செய்கிறான் — நிகழ்காலத் தெரிநிலை வினை
செய்வான் — எதிர்காலத் தெரிநிலை வினை

50. குறிப்பு வினையாவது, காலத்தை வெளிப்படையாக உணர்த்தாமல் சொல்வோனது குறிப்பால் காலம் உணர வருவது.

(உ-ம்) அவன் பொன்னன் — இங்குப் பொன்னன் என்னும் குறிப்புவினை பொன்னை யுடையன் என்னும் பொருளை மட்டும் நமக்கு வெளிப்படையாகக் காட்டி இதுபோது பொன்னனு அல்லது இனிப் பொன்னனு என்று வெளிப்படையாகக் காலத்தை உணர்த்தாமல் இருப்பதை அறிக.

குறிப்பு :(1) இக் குறிப்பு வினை பொருள், இடம், காலம், **சினை**, குணம், தொழில் என்னும் ஆறின் அடியாகவும் **பிறக்கும்.**

| | | | |
|---|---|---|---|
| உ-ம்) | அவன் | செல்வன். | பொருள் |
| | அவன் | மதுரையான். | இடம் |
| | அவன் | சித்திரையான். | காலம் |
| | அவன் | ஆறுமுகன். | சினை |
| | அவன் | அழகன். | குணம் |
| | அவன் | தாழ்நடையன். | தொழில் |

நன். சூ. பொருள்முதல் ஆறினும் தோற்றிமுன் ஆறனுள்
வினைமுதல் மாத்திரை விளக்கல் வினைக் குறிப்பே.

(2) வேறு, இல்லை, உண்டு, யார் என்னும் சொற்களும் குறிப்பு வினை முற்றுக்களாம்.

| | | |
|---|---|---|
| (உ-ம்) | நான் | வேறு. |
| | அவன் | இல்லை |
| | அது | உண்டு. |
| | நீர் | யார் ? |

## கேள்விகள்

1. வினைச் சொல் எத்தனை வகைப்படும் ? அவை எவை ?
2. தெரிநிலை வினை, குறிப்பு வினை என்பவை யாவை ?
3. குறிப்பு வினை எவ்வெவற்றின் அடியாகப் பிறக்கும்?
4. குறிப்பு வினையாக வரும் வேறு சொற்கள் எவை ?

## பயிற்சி-11

1. கீழ்வருவனவற்றினின்று தெரிநிலை வினைகளையும் குறிப்பு வினைகளையும் குறிப்பிட்டுக் காட்டுக :—

அறஞ்செய விரும்பு. இயல்வது கரவேல். அவள் பட்டாடையாள். அவன் தெற்கத்தியான். ஈவது விலக்கேல். ஊக்கமது கைவிடேல். மதுரையார் புண்ணியர். நெடுங்கழுத்தன் பேசினான். ஐயமிட்டுண். ஒப்புரவொழுகு. அவர்கள் நல்லவர்கள். அவன் கடுநடையன்.

2. நட, வா, மடி, விடு, கூ, போ, மலை, சிறுமை, பூரட்டாதி, மயில் — இவற்றைக் கொண்டு தெரிநிலை வினை, குறிப்பு வினை இவற்றிற்கு உதாரணம் எழுதுக.

3. கீழ்வருவனவற்றிற்கு இலக்கணக் குறிப்பு எழுதுக :— நான் வேறு எனாதிரு. நீயும் தவறு இலை. நெஞ்சு உண்டு கரியே. அவர் யார் ?

## வினை வகை

51. தெரிநிலை வினை, தன் வினை, பிற வினை என இரண்டு வகைப்படும்.

52. தன் வினையாவது, கருத்தா தானே செய்யும் வினையாம்.

(உ-ம்) தந்தையார் படித்தார்.

53. பிறவினையாவது, கருத்தா பிறரால் செய்விக்கும் வினையாம்.

(உ-ம்) தந்தையார் படிப்பித்தார்.

## கேள்விகள்

1. வினை எத்தனை வகைப்படும் ? அவை எவை ?

2. தன்வினை, பிறவினை என்பவை யாவை ?

## பயிற்சி-12

1. கீழ்வருவனவற்றினின்றும் தன்வினை பிறவினைகளைப் பொறுக்குக :—

வாசிக்கிறான், செய்விக்கிறான், ஓடுகிறாள், நடப்பிக்கின்றன, இழுக்கிறது, உண்பிக்கிறார், வருவித்தார், நொந்தார், போக்குவித்தார்.

போ, உருள், துயில், பாய், நட, எழு, ஆடு, உருகு, தோன்று, திருந்து—இவற்றைப் பிறவினையாக மாற்றுக.

## உடன்பாட்டு வினை எதிர்மறை வினை

54. உடன் பாட்டு வினையாவது, தொழில் நிகழ்ச்சியை உணர்த்துவதாம்.

(உ-ம்) அவன் செய்தான்

55. எதிர்மறை வினையாவது, தொழில் நிகழாமையை உணர்த்துவதாம்.

(உ-ம்) அவன் செய்திலன்

குறிப்பு : உடன்பாட்டு வினைக்கு விதி வினை என்றும், எதிர்மறை வினைக்கு மறை வினை என்றும் பெயர் உண்டு.

## கேள்விகள்

1 உடன்பாட்டு வினை, எதிர்மறை வினை என்பவை யாவை ?

2. இவ்வினைகட்குரிய வேறு பெயர்கள் யாவை ?

## பயிற்சி-13

1. உரிஞ், உண், தின், வாழ், கேள், பாய், வெல்—இப்பகுதி களைக் கொண்டு எதிர்மறை வினை, உடன்பாட்டு வினை களை அமைக்க.

2. கீழ்வருவனவற்றில் எதிர்மறை வினை எவை ? உடன் பாட்டு வினை எவை ?

உண்டான், பேசான், இல்லாத, இலன், படிக்கவில்லை, உண்ணுன், படித்திலன், செய்தான்.

### முற்று வினை

56 பால் காட்டும் விகுதி பெற்று வரும் வினை முற்று வினையாம்.

(உ-ம்) செய்தான்—இங்கு ஆன் என்னும் விகுதி ஆண்பாலைக் காட்டி நிற்கிறது.

### எச்ச வினை

57. எச்ச வினையாவது, பால் காட்டும் விகுதி பெருது வரும் வினையாம்.

(உ-ம்) செய்த, நடந்து.

58. இவ்வெச்ச வினை இரண்டு வகைப்படும். அவை பெயரெச்சம். வினை எச்சம் என்பன.

(உ-ம்) வந்த மனிதன் — பெயரெச்சம்
வந்து போனுன் — வினை எச்சம்

59. பெயரெச்சம் இரண்டு வகைப்படும். அவை தெரிநிலைப் பெயரெச்சம், குறிப்புப் பெயரெச்சம் என்பன.

(உ-ம) வந்த பையன்—தெரிநிலைப் பெயரெச்சம்
நல்ல பையன்—குறிப்புப் பெயரெச்சம்

60. வினையெச்சம் இரண்டு வகைப்படும். அவை **தெரிநிலை வினையெச்சம், குறிப்பு வினையெச்சம்** என்பன.

(உ-ம்) வந்து போனான் — தெரிநிலை வினையெச்சம்
மெல்லப்போனான் — குறிப்பு வினையெச்சம்

குறிப்பு : (1) தெரிநிலைப் பெயரெச்ச வினையெச்சங்களில் வினைச்சொல் பகுதியாக அமைந்து வரும். குறிப்புப் பெயரெச்ச வினையெச்சங்களில் பண்புப் பெயர் பகுதியாக அமைந்து வரும்.

(உ-ம்) செய்த பெட்டி — செய் பகுதி.
வந்து போனான் — 'வா' பகுதி
செய்ய கமலம் — செம்மை பகுதி
மெல்லப் பேசினான் — மென்மை பகுதி.

(2) தெரிநிலை எச்சம் காலங் காட்டும். குறிப்பு எச்சம் காலங் காட்டாது.

(உ.ம்) வந்த பையன்
வருகின்ற மாடு
வரும் காலம்
} தெரிநிலை எச்சம் முக்காலத்திலும் வந்தது.

நல்ல காலம் — குறிப்பு எச்சம் காலம் காட்டிலது.

## கேள்விகள்

1. எச்சம் எத்தனை வகைப்படும்? அவை எவை? அவற்றுள் ஒவ்வொன்றும் எத்தனை வகைப் படும்?
2. தெரிநிலை எச்சத்திற்கும், குறிப்பு எச்சத்திற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

## பயிற்சி-14

குறிப்புப் பெயரெச்சம், குறிப்பு வினை எச்சம், தெரிநிலைப் பெயரெச்சம், தெரிநிலை வினையெச்சம் இவற்றிற்குத் தனித்தனி மும்மூன்று உதாரணம் தருக.

2. கீழ் வருவனவற்றினின்றும் எச்சங்களைப் பொறுக்கி, அவை இன்ன எச்சம் எனவும் குறிப்பிடுக :—

படித்த பையன், ஓடும் குதிரை, வருகின்ற மாடு, நல்ல காலம், பெரியபொருள், சிறியமரம், செய்து வந்தான், ஓடிப்போனான், கூவி ஓடினான், ஓடக் கண்டான், உண்ண வருவான், வந்தால்தருவேன் பாட வரின் வா, உதவி செய்தக்கால் மறவாதே, கேட்டுவா, மெல்லப்போவான், பைய நடந்தான்.

## 'செய்யும்' என்னும் வாய்பாட்டு வினைமுற்று.

61. நட, வா முதலிய வினைப்பகுதிகள் உம் என்னும் விகுதி பெற்று வரின், 'செய்யும்' என்னும் வாய்பாட்டு வினை முற்றாம்.

(உ-ம்) நடக்கும், வரும்.

62. இவ் வினைமுற்று, ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால், பலவின்பால் என்னும் நான்கு பாலில் மட்டும் வரும்; தன்மை முன்னிலைகளிலும் பலர் பாலிலும் வாராது. இது எதிர்காலத்தையும் நிகழ் காலத்தையும் மட்டும் காட்டும்.

| | | | |
|---|---|---|---|
| (உ-ம்) கந்தன் | படிக்கும். | அது | பாயும். |
| வள்ளி | வரும். | அவை | ஆடும். |

நன் - சூ. பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையில்
செல்லா தாகும் செய்யுமென் முற்றே.

## கேள்விகள்

1. 'செய்யும்' என்னும் வாய்பாட்டு வினைமுற்றுவது யாது? இவ்வினைமுற்று எங்கெங்கு வரும்? எங்கெங்கு வாராது?

கீழ் வருவனவற்றுள் 'செய்யும்' என்னும் வாய்பாட்டு வினைமுற்றுக்களைக் குறிப்பிடுக :—

முருகன், அருளும், பசு அருந்தும், ஓடும் மாடு, பாடும் கிளி, மான் துள்ளும், பறவைகள் பறக்கும், ஆடும் பம்பரம், நாடும் பொருள், கடவுள் அருள் செய்யும், பாடும் பணி.

63. வியங்கோள் வினைமுற்று, வாழ்த்தல், வைதல், வேண்டல், விதித்தல் என்னும் பொருளில் வரும்.

## வியங்கோள் வினைமுற்று

(உ-ம்) வாழ்க ! — வாழ்தல் தருக ! — வேண்டல்
அழிக ! — வைதல் ஏறுக ! — விதித்தல்

குறிப்பு : (1) இவ் வினைமுற்றுப் பெரும்பாலும் ஈற்றில் 'க' என்றும், சிறு பான்மை 'இய, இயர், இ' என்றும் முடியும்.

(உ-ம்) வாழ்க — க வாழியர் — இயர்
வாழிய—இய வாழி — இ

2. இவ் வினைமுற்று, ஐம்பால் மூவிடத்திலும் வரும்

(உ-ம்) அவன் வாழ்க — ஆண்பாலில் வந்தது.
நீ வாழ்க — முன்னிலையில் வந்தது.

ஏனைய பால் இடங்கட்கும் இவ்வாறே கொள்க.

## கேள்விகள்

1. வியங்கோள் வினைமுற்றாவது யாது ?
2. இவ் வினைமுற்று எந்தெந்தப் பொருளில் வரும் ?
3. இவ் வினைமுற்றிற்குரிய அடையாளம் என்ன ?

## பயிற்சி-16

1. கீழ் வரும் வியங்கோள் வினைமுற்றுக்கள் இன்னின்ன பொருளில் வந்துள்ளன என்பதைக் குறிப்பிடுக :—

ஓதுக, உண்க, அருளுக, கெடுக, ஓங்குக, வீழ்க, மலர்க, வீக, ஆழ்க, சூழ்க, செலீயர், உண்ணி.

2. இவ் வினைமுற்று ஒவ்வொரு பாலிலும் ஒவ்வோர் இடத்திலும் வரும்படி தனித்தனி உதாரணம் தருக.

## ஏவல் வினைமுற்று

64. ஏவல் வினைமுற்று என்பது, கட்டளைப் பொருளில் வரும்.

(உ-ம்) நட, வா. நடமின், வருவீர்.

குறிப்பு: இவ் வினைமுற்று முன்னிலையில் மட்டும் ஒருமை பன்மை என்னும் எண்களில் வரும்.

(உ-ம்) நீ படி—முன்னிலை ஒருமை.
நீங்கள் படியுங்கள்—முன்னிலைப் பன்மை.

### கேள்விகள்

1. ஏவல் வினையாவது யாது ?
2. ஏவல்வினை எவ்விடத்தில், எவ்வெண்ணில் வரும் ?

## பயிற்சி-17

1. ஏவல் வினைமுற்று ஒருமையிலும் பன்மையிலும் வரத் தனித்தனிப் பத்து உதாரணம் தருக.

2. கீழ் வருவனவற்றில் ஒருமை ஏவல் வினைமுற்று எவை ? பன்மை ஏவல் வினைமுற்று எவை ?

செய்வாய், செய்தி, நடவாய், கூறுதி, செய்மின், கூறுமின், போற்றுவீர், கூவும், நில், வா.

1. வினைச்சொல்
   - தெரிநிலை வினை
     - தன் வினை
     - பிற வினை
     - உடன்பாட்டு வினை
     - எதிர்மறை வினை
   - குறிப்பு வினை

2. வினை
   - முற்று
     - தெரிநிலை வினைமுற்று
     - குறிப்பு வினைமுற்று
     - 'செய்யும்' என்னும் வாய்பாட்டு வினைமுற்று
     - ஏவல் வினை முற்று
     - வியங்கொள் வினை முற்று
   - எச்சம்
     - பெயர் எச்சம்
       - தெரிநிலைப் பெயரெச்சம்
       - குறிப்புப் பெயரெச்சம்
     - வினை எச்சம்
       - தெரிநிலை வினை எச்சம்
       - குறிப்பு வினை எச்சம்

## இடைச்சொல்

**65.** இடைச்சொல்லாவது, தனித்து வாராமல், பெயரோடும் வினையோடும் சேர்ந்து வருவது.

**66.** இடைச்சொல்லாக வரக்கூடியவை: வேற்றுமை உருபுகள், விகுதிகள், இடைநிலைகள், சுட்டு வினா, உவம உருபு, குறிப்பு மொழி, அசைநிலை ஆகிய இவையாம்.

| | | | |
|---|---|---|---|
| (உ-ம்) | முருகனை | ஐ | வேற்றுமை உருபு |
| | முருகன் | அன் | விகுதி |
| | செய்தான் | த் | இடைநிலை |
| | அவன் | அ | சுட்டு |
| | எவன் ? | எ | வினா |

புலியைப்போலப் பாய்ந்தான் — உவமவுருபு
திடுமென — குறிப்பு
அவன்தான் — அசை

குறிப்பு :—ஏ, ஓ, உம், கொல், மற்று, இனி, ஆவது, தான், மாது, அன்று—இவை போன்ற சொற்கள் எல்லாம் இடைச்சொற்களாக வரும்.

### கேள்விகள்

1. இடைச்சொல்லாவது யாது ?
2. எவை எவை இடைச்சொற்களாக வரும் ?

### பயிற்சி-18

1. பின்வருவனவற்றில் இன்னின்ன இன்ன இடைச்சொல் எனக் குறிப்பிடுக :—

அவனுக்கு, செய்தேன், ஏது? மயிலொப்ப ஆடுகிறான். முருகனென்ன அழகன், சோவெனப் பெய்தது, பொள் ளெனப் பறந்தது, மளாரென ஒடிந்தது, திடுதிடென நுழையாதே, திடுக்கெனவந்தான், பளிச்செனமின்னி யது, மயில் கொல்! குயில் கொல்! இனிப் பேசு.

## உரிச்சொல்

67. உரிச்சொல் என்பது, ஒரு குணத்தை யேனும் பல குணத்தையேனும் காட்டி வருவது. இதுவும் இடைச்சொல்லைப்போலத் தனித்து வாரா மல் பெயருடனும் வினையுடனும் சேர்ந்து வரும்.

(உ-ம்) சாலப்பெரியன்—பெயருடன் வந்தது.
சாலப்பேசினேன்—வினையுடன் வந்தது.

—இங்குச் சால என்னும் இச்சொல் மிக்க, மிக் என் னும் ஒரு பொருளையே உணர்த்தியது.

(உ-ம்) கடிக் கமலம்
கடி வாள்
கடி நகர்
கடிப் பேய்
கடி பேரிகை

இங்குக் கடி என்னும் உரிச் சொல், வாசனை, கூர்மை, காவல், அச்சம், ஒலி என்னும் பலபொரு ளில் வந்தது.

### கேள்விகள்

உரிச்சொல்லாவது யாது? அஃது எவ்வெவ்வாறு வரும்?

### பயிற்சி-19

1. பின் வருவனவற்றுள் வந்துள்ள உரிச்சொற்களை எடுத்தெழுதுக :—

உறுமீன், தவக்கொடிது, நனிபேதை, கூர்வேல், கழி வேகம்.

2. கீழ்க்காணும் 'கடி' என்னும் உரிச்சொல் எவ்வெப்பொருளில் வந்துள்ளது?

கடிமதில், கடிசிலம்பு, கடிப்பூ, கடிப்பூதம், கடிமுரசு

**சொல்**

பெயர்ச்சொல் | வினைச்சொல் | இடைச்சொல் | உரிச்சொல்

# III. புணர்ச்சி

1. புணர்ச்சியாவது, நிலைமொழியீறும் வருமொழி முதலும் ஒன்றுபடப் புணர்வதாம்.

(உ-ம்) மணி + அழகு = மணியழகு.

2. இப்புணர்ச்சி வேற்றுமைப் புணர்ச்சி, அல்வழிப் புணர்ச்சி என இரண்டு வகைப்படும்.

3. வேற்றுமைப் புணர்ச்சியாவது, இரு சொற்கள் ஒன்றோடொன்று புணர்கையில் வேற்றுமை உருபுகளைப் பெற்றேனும் பெறாது அவ்வுருபுகள் மறைந்தேனும் புணர்வது.

(உ-ம்) வேல் + ஐ + தாங்கினான் = வேலைத் தாங்கினான். —வேற்றுமை உருபு வெளிப்படையாய் நின்ற வேற்றுமைப் புணர்ச்சி.

வேல் + கையன் = வேற்கையன் — வேற்றுமை உருபு மறைந்து நின்று புணர்ந்த வேற்றுமைப் புணர்ச்சி.

4. அல்வழிப் புணர்ச்சியாவது இரண்டு சொற்கள் புணரும்போது வேற்றுமை அல்லாத வழியில் புணர்வது.

(உ-ம்) ஓடி + வந்தான் = ஓடி வந்தான் — இச்சொற்களுக்கிடையே எதுவும் மறைந்திலது.

இரா+பகல் = இராப்பகல் — இங்கு 'உம்' மறைந்திருக்கிறது. ஆனால், அது வேற்றுமை அன்று. ஆதலின் இவ்விரண்டு உதாரணங்களும் அல்வழிப் புணர்ச்சியாம்.

## கேள்விகள்

1. புணர்ச்சியாவது யாது? அஃது எத்தனை? அவை எவை?
2. வேற்றுமைப் புணர்ச்சியாவது யாது? உதாரணத்துடன் விளக்குக.
3. அல்வழிப் புணர்ச்சியாவது யாது? உதாரணத்துடன் விளக்குக.

## பயிற்சி-20

கீழ் வருவனவற்றில் இன்ன வேற்றுமைப் புணர்ச்சி, இன்ன அல்வழிப் புணர்ச்சி எனக் குறிப்பிடுக:—

மரம் வெட்டினான், தலையால் வணங்கினான், காடு புக்கான், நாடு ஆண்டான், கந்தன் வேல், மலைக்குகை, பெய் மழை, தோய் தயிர், கருங்குவளை, இன்சொல், தாமரைக் கண், மதிமுகம், ஒன்றே முக்கால், செடி கொடி, படித்த பையன், முருகா அருள், நனி பெரிது.

## உடம்படு மெய்

5. நிலைமொழியீற்றுயிரும் வருமொழி முதலுயிரும் புணர்கையில் இடையில் இரண்டையும் இணைப்பதற்கு வரும் மெய் **உடம்படு மெய்** எனப்படும். அவை ய், வ் என்பன.

(உ-ம்) மணி+அழகு = மணி+ய்+அழகு = மணியழகு
பல+அரசர் = பல+வ்+அரசர் = பலவரசர்.

6. நிலைமொழியீற்றில் இ, ஈ, ஐ என்னும் மூன்று உயிர் எழுத்துக்களுள் ஒன்று நின்று, வருமொழி

முதலில் உயிர் எழுத்துவரின், இடையில் யகர உடம் படு மெய் தோன்றும்.

(உ-ம்) துணி + எடு = துணி + ய் + எடு = துணியெடு.

தீ + அணை = தீ + ய் + அணை = தீயணை.

கை + ஒடி = கை + ய் + ஒடி = கையொடி.

7. நிலைமொழியீற்றில் மேற்கூறப்பட்ட இ, ஈ, ஐ என்னும் மூன்று உயிர் எழுத்துக்கள் நீங்கலாக மற்றைய ஒன்பது உயிர் எழுத்துக்களுள் ஒன்று நின்று, வருமொழி முதலில் எந்த உயிர் எழுத்து வரினும், வகர உடம்படுமெய் தோன்றும்.

(உ-ம்) பல + வ் + அரசர் = பலவரசர் — அ

பலா + வ் + அழகு = பலாவழகு — ஆ

தானு + வ் + அழகன் = தானுவழகன் — உ

பூ + வ் + அழகு = பூவழகு — ஊ

சே + வ் + அடி = சேவடி — ஏ

போ + வ் + என்றான் = போவென்றான் — ஓ

குறிப்பு: (1) எ, ஒ, ஔ ஈற்றுச் சொற்கள் வருவது அருமையாதலின் உதாரணம் காட்டப்படவில்லை.

(2) ஏ என்னும் ஈற்றுச் சொல் இடைச்சொல்லாயின், யகர மெய்யும், பெயர்ச்சொல்லாயின், வகர மெய்யும் ஏற்றுவரும்.

(உ-ம்) அதுவே + ய் + இது + அதுவேயிது.

சே = அடி + சேவடி

### கேள்விகள்

1. உடம்படுமெய் என்பது என்ன ?
2. எவை உடம்படு மெய்கள் ?

3. யக்ரமெய்யும், வகரமெய்யும் எவ்வெப்போது வரும் ?

4. 'ஏ' என்பதன் முன் எப்பொழுது யகரமெய் தோன்றும்? எப்பொழுது வகரமெய் தோன்றும் ?

5. எவ்வெவ்வீற்றுச் சொற்கு உதாரணம் காட்டப் படவில்லை ? ஏன் ?

## பயிற்சி-21

1. கீழ் வருவனவற்றைப் பிரித்துப் புணர்ச்சி விதி கூறுக :- மணியடி, நீயிரு, தலையோடு, பூவழகு, பலவாடுகள், தேவாரம், நீயேயுணர், கலாவரங்கம், சோவரண், கோயில், மாவிலை, அணியணியாக, பையொழுங்கு, பறவையிறகு.

2. யகர வகர உடம்படு மெய்க்குத் தனித்தனி ஐந்தைந்து உதாரணம் எழுதுக.

## வந்த எழுத்து மிகுதல்

8. நிலைமொழி ஈற்றில் உயிர் எழுத்து இருந்து வருமொழி முதலில் க, ச, த, ப என்னும் எழுத்துக்களேனும் அவ்வெழுத்துக்களின் வர்க்கமேனும் வரின், வந்த எழுத்திலுள்ள மெய்யெழுத்து மிகும்.

| | |
|---|---|
| (உ-ம்) ஓடி+கண்டான் | ஓடிக்கண்டான் |
| தேட+சென்றான் | தேடச்சென்றான் |
| பேரா+தட்டு | பேராத்தட்டு |
| தை+பொங்கல் | தைப்பொங்கல் |

## மெய் திரிதல்

9. ண், ன் என்னும் மெய்களின் முன் க, ச, த, ப என்னும் வல்லினம் வந்தால், சில இடங்களில் ண், ட் ஆகவும், ன், ற் ஆகவும் திரியும்.

(உ-ம்) மண் + குடம் = மட்குடம்
பொன் + பலகை = பொற்பலகை

10. நிலைமொழியீற்றில் ல், ள் என்னும் மெய்கள் இருந்து வருமொழி முதலில் க, ச, த, ப வரின், ல், ற் ஆகவும், ள், ட் ஆகவும் திரியும்.

(உ-ம்) பல் + பொடி = பற்பொடி
கள் + குடம் = கட்குடம்

### ஒன்று இரட்டித்து மிகுதல்

11. டு, று என்னும் எழுத்துக்களை ஈற்றில் உடைய நெடிற்றொடர்க் குற்றியலுகரங்களுக்கும், உயிர்த்தொடர்க் குற்றியலுகரங்களுக்கும் பிறகு, வல்லினம் வரின், அவ்வுகரமேறிய மெய் இரட்டித்து வரும் வல்லினம் மிகும்.

(உ-ம்) நாடு + காவல் = நாட்டுக்காவல்
ஆறு + கால் = ஆற்றுக்கால்

நெடிற்றொடர்க் குற்றியலுகர மெய் இரட்டித்து, வலி மிகுந்தது.

முரடு + பையன் = முரட்டுப்பையன்
களிறு + தோல் = களிற்றுத் தோல்

உயிர்த்தொடர்க் குற்றுகர மெய் இரட்டித்து, வலி மிகுந்தது.

### கேள்விகள்

எத்தொடர்க் குற்றியலுகர மெய் இரட்டித்து வலி மிகும்?

### பயிற்சி - 22

சேர்த்து எழுதுக :—

மிடறு+கருமை, நாடு+பாடல், வயிறு+குத்தல், ஆடு + கால், வீடு + கதவு, வெளிறு + குணம், காடு+கட்டை

# IV. பொது

## வட சொல்

1. தமிழில் வடமொழிச் சொற்களும் வந்து வழங்குகின்றன. அவற்றைத் தமிழில் **வட சொல்** என்பர்.

(உ-ம்) கஜம் —யானை
ஸரஸ்வதி—கலைமகள்

## திசைச் சொல்

2. வடசொல் தவிர மற்றைய மொழிச் சொற்களும் தமிழில் வந்து வழங்குகின்றன. அவற்றைத் **திசைச் சொல்** என்பர்.

(உ-ம்) லட்டு, நாஸ்தா

## கேள்விகள்

1. வடசொல்லாவது யாது ?
2. திசைச்சொல் என்பது யாது ?

## பயிற்சி-23

1. திசைச்சொற்குப் பத்து உதாரணமும், வட சொற்குப் பத்து உதாரணமும் தருக.
2. கீழ் வருவன என்ன சொற்கள் ?

ஹரன், அவுல்தார், கணபதி, புஜம், சுபேதார், பெஞ்சு, டாணா, பூந்தி, புஸ்தகம், சாக்ஷி, மோக்ஷம், இன்ஸ்பெக்டர், கஜானா.

## நிறுத்தக் குறிகள்

3. முன் வகுப்புக்களில் சில நிறுத்தக் குறிகளை அறிந்தீர்கள். இவ்வகுப்பிலும் இரண்டு நிறுத்தக் குறிகளைப் பற்றிப் படிப்பீராக.

4. ; இக்குறிக்கு ஆங்கிலத்தில் செமிகோலன் (Semi-Colon) என்பது பெயர். இதைத் தமிழில் அரைப்புள்ளி என்னலாம். இக்குறியிட்ட இடத்தில் இரண்டு மாத்திரை அளவு நிறுத்த வேண்டும்.

5. : இக்குறிக்கு ஆங்கில மொழியில் கோலன் (Colon) என்பது பெயர். இதனைத் தமிழ் மொழியில் முக்காற்புள்ளி என்னலாம். இக்குறியிட்ட இடத்தில் மூன்று மாத்திரை அளவு நிறுத்த வேண்டும்.

குறிப்பு :—(1) இக்குறிகளைத் தவிர மேற்கோள் குறி என்று ஒன்று இருக்கிறது. அக்குறியைப் பெரியோர்கள் சொன்ன பழமொழி, நீதி முதலியவற்றை எடுத்து நாம் எழுதும்போது இட வேண்டும்.

(உ-ம்) ஔவையார், "அறஞ்செயவிரும்பு" என்று கூறியிருக்கின்றார்." " இக்குறிக்குத்தான் மேற்கோள் குறி என்பது பெயர்.

(2) இக்குறியை ஒருவன் சொன்னதை அப்படியே எடுத்து எழுதும்போதும் இட வேண்டும். இதைத் தன் கூற்று (*Direct Speech*) என்பர்.

(உ-ம்) கந்தன், "நான் நாளைக்கு வருவேன்" என்று சொன்னான்.

6. பிறகூற்று என்பது (*Indirect Speech*). பிறன் சொல்வதை அப்படியே எடுத்துச் சொல்லாமல், அவன் சொன்ன பொருள் கெடாமல் மாற்றி எழுதுவது.

(உ-ம்) கந்தன் தான் நாளைக்கு வருவதாகச் சொன்ஞன்.

## கேள்விகள்

1. ; : இக்குறிகளுக்குரிய ஆங்கிலப் பெயர்கள் யாவை?
2. இக்குறிகள் இட்ட இடத்தில் எவ்வளவு நேரம் நிறுத்தி வாசிக்க வேண்டும்?
3. மேற்கோள் குறி எங்கெங்கு வரும்?
4. தன்கூற்று, பிறகூற்று என்பவை யாவை?

## பயிற்சி-24

1. மேற்கோள் குறியிட்டுப் பத்து வாக்கியங்கள் எழுதுக.
2. தன்கூற்றுக்கும, பிறகூற்றுக்கும், தனித்தனி பப்பத்து உதாரணம் தருக.

# அநுபந்தம்

## விகுதிகள்

1. ஆண்பால் விகுதிகள் : அல், அன், ஆன், மன், மான் என்பவை.

| | | |
|---|---|---|
| (உ-ம்) | செய்வல் | அல் |
| | செய்வன் | அன் |
| | செய்வான் | ஆன் |
| | வடமன் | மன் |
| | கோமான் | மான் |

2. பெண்பால் விகுதிகள் : அள், ஆள் என்பன.

| | | |
|---|---|---|
| (உ-ம்) | செய்வள் | அள் |
| | செய்வாள் | ஆள் |

3. பலர்பால் விகுதிகள் : அர், ஆர், கள், மார், ப என்பவை.

| | | |
|---|---|---|
| (உ-ம்) | செய்வர் | அர் |
| | செய்வார் | ஆர் |
| | செய்வார்கள் | கள் |
| | குருமார் | மார் |
| | செய்ப | ப |

4. ஒன்றன்பால் விகுதிகள் : து, டு, று என்பவை.

| | | |
|---|---|---|
| (உ-ம்) | செய்தது | து |
| | உண்டு | டு |
| | ஓடிற்று | று |

5. பலவின்பால் விகுதிகள் அ, ஆ, கள், வை என்பன.

(உ-ம்) செய்தன அ
செய்யா ஆ
செய்தவைகள் கள்
செய்தவை வை

6. தன்மை ஒருமை விகுதிகள்: அல், அன், என், ஏன் என்பவை.

(உ-ம்) செய்வல் அல் செய்வென் என்
செய்வன் அன் செய்வேன் ஏன்

7. தன்மைப் பன்மை வினை முற்று விகுதிகள்: அம், ஆம், எம், ஏம், ஓம் என்பன.

(உ-ம்) செய்வம் அம் செய்வேம் ஏம்
செய்வாம் ஆம் செய்வோம் ஓம்
செய்வெம் எம்

8. முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதிகள் ஐ, ஆய், இ என்பன.

(உ-ம்) செய்வை ஐ
செய்வாய் ஆய்
செய்தி இ

9. முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதிகள்: இர், ஈர், உம், மின், கள் என்பன.

(உ-ம்) செய்திர் இர்
செய்யீர் ஈர்
செய்யும் உம்
செய்ம்மின் மின்
செய்ம்மின்கள் கள்

10. வியங்கோள் வினைமுற்று விகுதிகள் : க, இய, இயர், இ, அ என்பன.

| | | | | |
|---|---|---|---|---|
| (உ-ம்) | செய்க | க | வாழி | இ |
| | செய்யிய | இய | செய்ய | அ |
| | செய்யியர் | இயர் | | |

11. பெயரெச்ச விகுதிகள் : அ, உம் என்பன.

| | | |
|---|---|---|
| (உ-ம்) | செய்ய | அ |
| | செய்யும் | உம் |

12. வினையெச்ச விகுதிகள் : உ, இ, ய், பு, ஆ, அ, இன், ஆல், கால் என்பன.

| | | | | |
|---|---|---|---|---|
| (உ-ம்) | செய்து | உ | செய்ய | அ |
| | ஓடி | இ | செய்யின் | இன் |
| | போய் | ய் | செய்தால் | ஆல் |
| | செய்பு | பு | செய்தக்கால் | கால் |
| | செய்யா | ஆ | | |

13. தொழிற்பெயர் விகுதிகள் தல், அல், அம், ஐ, வை, கை, கு, பு, வு, தி, சி, காடு, பாடு, அடம், மை, து என்பன.

| | | | | |
|---|---|---|---|---|
| (உ-ம்) | செய்தல் | தல் | வரவு | வு |
| | செயல் | அல் | மறதி | தி |
| | ஆட்டம் | அம் | உணர்ச்சி | சி |
| | கொலை | ஐ | வேக்காடு | காடு |
| | பார்வை | வை | கூப்பாடு | பாடு |
| | செய்கை | கை | கட்டடம் | அடம் |
| | போக்கு | கு | செய்தமை | மை |
| | நிரப்பு | பு | செய்தது | து |

14. பண்புப் பெயர் விகுதிகள் : மை, ஐ, சி பு, கு, றி, று, அம், பம், நர் என்பன.

| | | | | |
|---|---|---|---|---|
| (உ-ம்) | நன்மை | மை | நன்றி | றி |
| | தொல்லை | ஐ | நன்று | று |
| | நேர்ச்சி | சி | நலம் | அம் |
| | நட்பு | பு | திட்பம் | பம் |
| | நன்கு | கு | நன்னர் | நர் |

## இடைநிலைகள்

15. இறந்தகால இடைநிலைகள் : த், ட், ற், இன் என்பன.

| | | |
|---|---|---|
| (உ-ம்) | செய்தான் | த் |
| | உண்டான் | ட் |
| | கற்றான் | ற் |
| | பேசினான் | இன் |

16. நிகழ்கால இடைநிலைகள் : கிறு, கின்று ஆநின்று என்பன.

| | | |
|---|---|---|
| (உ-ம்) | செய்கிறான் | கிறு |
| | செய்கின்றான் | கின்று |
| | செய்யாநின்றான் | ஆநின்று |

17. எதிர்கால இடைநிலைகள் ப், வ் என்பன.

| | | |
|---|---|---|
| (உ-ம்) | உண்பான் | ப் |
| | செய்வான் | வ் |

குறிப்பு : விகுதிகள் சில பெயர்க்கும் சில வினைக்கும் வரும்.